விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 25 ஞாயிற்றுக்கிழமை (08.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 171

# விசாரணைக்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும்

## நவநீதம்பிள்ளை விடாப்பிடி



(நியூயோர்க்)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை அரசாங்கத்திடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜெனிவாவில் நாளை மறுதினம் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 26-வது கூட்டத தொடரில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஆரம்பவுவுரை நிகழ்த்தவுள்ளார்.

நவநீதம்பிள்ளையினது இந்த உரையின் ஆரம்ப வரைவு ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகத்தினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த உரையின் ஆரம்ப வரைவிலேயே ஐ.நா விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி அவர் இலங்கையிடம் கோரிக்கை விடுக்கவுள்ள விபரம்

24ஆம் பக்கம் பார்க்க....

## வட மாகாண கல்விப் பணிப்பாளர் நியமனம்



(யாழ்ப்பாணம்)

வட மாகாணக் கல்விப் பணிப்பாளராக ஆர்.ராஜேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கல்வி நிர்வாக சேவை தரம் ஒன்றை சேர்ந்தவர். இவருக்கான

24ஆம் பக்கம் பார்க்க....

## 42 இந்திய மீனவர்கள் நேற்று இலங்.கடற்படையினரால் கைது

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 42 இந்திய மீனவர்களை நேற்று சனிக்கிழமை கைது செய்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை - இந்தியா மீனவர் விவகாரம் குறித்து இருநாட்டு அரசாங்கங்களுக்கிடையிலும் மீனவர்களுக்கிடையிலும் தொடர் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்று வரும் நிலையில் மீனவர்களின் கைது நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெற்ற வண்ணமேயுள்ளது.

இந் நிலையில் நேற்று மாலை சனிக்கிழமை மன்னார் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 42 இந்திய மீனவர்களை கடற்படையினர் கைது செய்து தம்மிடம் ஒப்படைத்ததாக மன்னார் மாவட்ட கடற்தொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர்வி.எஸ்.மெராண்டா தெரிவித்

23ஆம் பக்கம் பார்க்க....

## இடம்பெயர்ந்தோர் அறிக்கை ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்படுகிறது



(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெயர்ந்தோர் தொடர்பான ஆய்வை மேற்கொண்ட ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் கலாநிதி சலோகா பெயானியின் அறிக்கை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 26-வது கூட்டத்தொடர் நாளைமறுதினம் 10 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்தொடரில் இலங்கையில் இடம் பெற்ற போரின் போது உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் குறித்த அறிக்கையை

24ஆம் பக்கம் பார்க்க....

## துப்பாக்கிகள் மீட்பு; இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். கொடிகாமம் கெற்பேலி பகுதியில் வீடொன்றினுள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஏ.கே.47 ரக துப்பாக்கி இரண்டு மீட்கப்பட்டுள்ளதுடன் வீட்டில் உள்ள இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பகுதியில் உள்ள குறித்த வீட்டில் துப்பாக்கிகள் மறைத்து வைக்கப்பட்டு இருப்பதாக நேற்று முனதினம்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நாவின் புதிய ஆணையாளராக ஜோர்தான் இளவரசர் நியமனம்

### பான் கீ மூன் அறிவிப்பு

(ஜெனிவா)

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளராக ஜோர்தான் நாட்டுத் தூதுவர இளவரசர் சையிட் அல் ஹுசைனை நியமிக்கவுள்ளதாக ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளராக தற்போது பணியாற்றி வரும் நவநீதம்பிள்ளையின் பதவிக்காலம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முடிவடையவுள்ளது.

இந்நிலையில், ஐ.நாவின் புதிய மனிதவுரிமைகள் ஆணையாளராக இளவரசர் சையிட் அல் ஹுசைனை நியமிக்கவுள்ளதாக ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவுக்கும், அமெரிக்காவுக்குமான ஜோர்தான் தூதுவராகப் பணியாற்றி வரும் இளவரசர் சையிட் அல் ஹுசைன், ஒரு இராஜதந்திரியாக நீண்டகாலம் பணியாற்றியுள்ளார்.

அத்துடன், ஐ.நா பாதுகாப்புச்சபையில் ஜோர்தானின் தூதுவராகவும் பணியாற்றி வரும் இவர், ஐ.நா தூதுவர் பதவியில் இருந்து விலகுவதாக



கடந்த ஏப்ரல் மாதம் அறிவித்திருந்தார்.

சர்வதேச நீதி மற்றும் பாலியல் வன்முறைகள் குறித்த விவகாரங்களில் இளவரசர் சையிட் அல் ஹுசைன் வலுவான நிலைப்பாட்டைக் கொண்

23ஆம் பக்கம் பார்க்க....

## படையினரால் குற்றமிழைப்பு

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் தரவுகளின் அடிப்படையில் 2014ஆம் ஆண்டின முதல் காலாண்டு காலப்பகுதியில் கிடைத்துள்ள குற்றச்செயல்கள் தொடர்பான முறைப்பாடுகளில் 18 வீதமானவை படையினரால் மேற்கொள்ளப்பட்டவை என்று தெரியவந்துள்ளது. இந்த தகவலை அல்ஜசீரா செய்தியாக்கியுள்ளது.

இந்தநிலையில் படையினருக்கு தற்போது நிபுணர்கள் மனவள ஆலோ சனைகளை வழங்கி வருவதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின மனவள விரிவுரையாளர் பிரபாத் குணதிலக்கவின் கருத்துப்படி கடந்த 30 வருட காலத்தில் இருந்து எதிர்பார்த்த இராணுவத்தினருக்கான மனவள ஆலோசனைகள் உரிய வகையில் வழங்கப்படவில்லை என்று

23ஆம் பக்கம் பார்க்க....

## பதுங்குகுழி கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை வீ.எம்.வீதிச சந்திக்கு அருகிலுள்ள வீட்டின் சமையலறையின் கீழ் அமைக்கப்பட்டிருந்த பதுங்குகுழி ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கண்டுபிடிக்கப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். இராணுவ


23ஆம் பக்கம் பார்க்க....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சீன வெளிவிவகார அமைச்சர் மோடியுடன் இன்று சந்திப்பு

## இருதரப்பு உறவுகள் தொடர்பில் பேச்சு





இந்தியாவுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்யவுள்ள சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ அந்நாட்டுப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியுடன் நெருங்கிய உறவுகளைப் பேண உலக நாடுகள் கரிசனை கொண்டுள்ள நிலையில், அமெரிக்கா, சீனா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் அவரை தங்கள் நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளன.

இந்நிலையில் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ தலைமையிலான 7 பேர் கொண்ட தூதுக் குழு இன்று டில்லிக்கு விஜயம் செய்யவுள்ளது.

இதன்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ சந்தித்து இருதரப்பு உறவுகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜையும் சீன வெளிவிவகார அமைச்சர் சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்திய நாடாளுமன்ற அமர்வுகள் நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளதால், சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ தலைமையிலான தூதுக் குழு இன்று தமது பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொள்ள திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இந்தியாவின் அயல்நாடான இலங்கையில் சீனா காலூன்றி வரும் நிலையில், அந்நாட்டு வெளிவிவகார அமைச்சருடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நடத்தவுள்ள பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. (செ-6)

# இளம் குடும்பஸ்தர் மீது பொலிஸார் சித்திரவதை

## மனித உரிமை ஆணைக்குழுவில் மனைவி முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரால் சித்திரவதைக்குள்ளான நிலையில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் மேற்படிச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

திருட்டுச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடையதாக கூறி கைது செய்த சந்தேக நபரை நிர்வாணமாக்கி இரவிரவாக சித்திரவதை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு எதிராக யாழ் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி யாழ்.தொல்புரம் விக்னேஸ்வரா பகுதியில் உள்ள வீடு ஒன்றில 12 பவுண் தங்க நகைகள் திருட்டு போனமை தொடர்பில் அவ் வீட்டில் அன்றையதினம் கூலி வேலை செய்துவிட்டு சென்ற தொல்புரம மத்தி சுழிபுரம் பகுதியினை சேர்ந்த முருகேசு தயானந்தன் (வயது-36) என்பவரை கைது செய்த வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணை செய்துவிட்டு விடுவதாக கூறி அன்றிரவு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து துப்பாக்கியால் அடித்தும், துன்புறுத்தியும் இரவிரவாக கடுமையான சித்திரவதை செய்துள்ளனர்.

அத்துடன் குறித்த நபரை நிர்வாணமாக்கி ஆணுறுப்பிலும் தாக்கியுள்ளனர். இதனால் பலத்த உடல் உள் காயங்களுடன் நடமாட முடியாத நிலையில் குறித்த நபர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப பட்டுள்ளதாக குறித்த சந்தேக நபரின் மனைவி நாகபூசனி தயானந்தன் என்பவர் முறைப்பாடு செய்துள்ளதாக யாழ் மனித உரிமை ஆணைக்குழுவினர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குவிற்கு விளக்கமளிக்கமாறு கோரி வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்கு பொறுப்பான ஊர்காவற்துறை பொலிஸ் தலைமைபீட உதவி பொலிஸ் பரிசோதகருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின அதிகாரி தெரிவித்தார். (செ-6)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
0213210815, 0215671532



வாக்காளர் இடாப்பு மீளாய்வு - 2014 எனும் தொனிப் பொருளில் மன்னார் பிரதேச செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட தேர்தல் திணைக்களம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வு ஊர்வலம் மன்னாரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது...

# வாகனம் தடம்புரள்வு; ஆறு பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீதியில் தடம்புரண்ட வாகனத்திலிருந்த ஆறு பேர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் கற்கோவளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உதைபந்தாட்ட போட்டிக்கென வடி ரக வாகனம் ஒன்றில் யாழ். வடமராட்சி ஆழியவளை கொடுக்கிளாய் பகுதியைச் சேர்ந்த மேற்படி ஆறுபேரும் கற்கோவளம் பகுதிக்கு பருத்தித்துறை மருதங்கேணி வீதியால் சென்று கொண்டிருந்த வேளை வீதியின் சீரற்ற தன்மை காரணமாக திடீரென வாகனத்தின் சில்லு காற்றுப் போனதால் தலைகுப்புறவாக வாகனம் தடம் புரண்டது.

இதில் வாகனத்திலிருந்த ச.லவுனி (வயது -26), செ.பாலகோபி (வயது-26), ஞா.கதிர்காமநாதன் (வயது-46), அ.விஜயகாந்த் (வயது -31), கு.நிறோஜன் (வயது-26), தி.கிருபரன் (வயது-29) ஆகியோரே படுகாய மடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இவ்விபத்துச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-6)

சேவை முகவர்

**காணிகள், வீடு விற்பனைக்கு**

மணல்தறை லேன், உரும்பிராய், பிறவுண் வீதி, நாயன்மார்கட்டு, 21பரப்பு தென்னந் தோட்டம், ஆஸ்பத்திரி வீதி. விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். (6600)

V.சுந்தரம் - 0774819801

**அரிசி ஆலை வாடகைக்கு**

மூளாய் றோட் வட்டுக்கோட்டை பிரதான வீதியில் அமைந்துள்ள அரிசி ஆலை வாடகைக்கு விடப்படும். (6599)

தொடர்புகளுக்கு : 0778141667

**உடனடி வேலைவாய்ப்பு**

கட்டிட நிர்மாணத்துறையில் பல வெற்றிடம் மேசன்/ தச்சு/ பெயின்டர்/ வெல்டர்/ இலக்ரீசன்/ செடலிங் பாஸ்/ கம்பி பாஸ்/ (1200/-, 1500/-) கை உதவியாளர் (900/-, 1100/-) (யாழ், கொழும்பு, களனி, கண்டி, தெஹிவளை) பிரதேசங்களில் வேலை வாய்ப்பு. தங்குமிடம் வழங்கப்படும். (C-7591)

தொடர்புக்கு : 0775561883

**தவறிவிட்டது**

வன்னியசிங்கம் கபிலன் என்பவருடைய சாரதிவாகன அனுமதிப்பத்திரம் அடையாள அட்டை அடங்கிய கைப்பேஸ் 07/06/2014 சனிக்கிழமை காலை 7 மணியளவில் கொடிகாமம் கச்சாய் வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் குறிப்பிடப்படும் இடத்தில் ஒப்படைக்கவும்.

தொடர்புகளுக்கு:
கபிலன் - 0779288808
அருள்நாயகி கொடிகாமம் - 0774937585
(C-7595)

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCDக்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392
WESTERN UNION MONEY TRANSFER
(C-7578)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்
பதவி வெற்றிடம்

மேற்படி எமது வைத்தியசாலையில் கீழ்வரும் பதவி நிலைக்கான பின்வரும் வெற்றிடம் காணப்படுகின்றது. தகுதியுடையோர் தமது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 15.06.2014 ம் திகதிக்கு முன்னர் தலைவர், கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய். எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்
(Medical Laboratory Technician)

தலைவர்.
(A-7589)

**Are You Retired?**



Continue to earn while enjoying your Retirement

Contact : T.Pratheeban
62/6, Stanley Road,
Jaffna.
T.P No. : 0777121868
(6586)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசின் உறுதியற்ற கருத்துக்களை நம்பி ஏமாற்றமடையத் தயாரில்லை

## பொலிஸ் அதிகாரம் குறித்து த.தே.கூ. ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

அரசாங்கத்தின் உறுதியற்ற கருத்துக்களை நம்பி ஏமாறத் தயாரில்லை. அரசாங்கம் குறிப்பிடும் பொலிஸ் அதிகாரத்திற்கு இணங்கவும் மாட்டோம்,ஏற்றுக்கொள்ளவும் மாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரத்திலும் விட்டுக்கொடுப்பிற்கு த்யார் என்ற அரசாங்கத்தின் கருத்து தொடர்பில் கூறுகையிலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மாகாண சபையை பலவீனப்படுத்தும் எந்தவொரு செயற்பாட்டினையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் செய்யாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் அதிகாரப் பகிர்வினையும், மாகாண அதிகாரங்களையும் கொண்டு வருவது இனப் பிரச்சினைக்கு தீர்வினைக் காண்பதற்கே தவிர எவரினதும் தனிப்பட்ட சுயநலன்களுக்காக அல்ல.

இனக் குழுமத்தின் அடிப்படையில் அதிகாரங்களை பகிரத்தயாரில்லை என அரசாங்கம் பாராளுமன்றத்தில் தெரிவித்தது. பொலிஸ் அதிகாரத்திலும் விட்டுக்கொடுப்புக்குத் தயார் என தற்போது குறிப்பிடுகின்றனர். அரசாங்கம் தனது முடிவினை உறுதியாகவும், தெளிவாகவும் குறிப்பிட வேண்டும். சந்தர்ப்ப, சூழ்நிலைகளுக்கேற்ப ஊடகங்களை சமாளிக்கும் கருத்துக்களை நம்பி செயற்பட நாம் தயாரில்லை.

எவ்வாறான அதிகாரங்களை வழங்குவது என்பதை அரசாங்கம் தீர்மானித்து விட்டது. 13 ஆவது திருத்தத்தை விடவும் குறைவான அதிகாரங்களை கொண்டு சமாளிக்கும் இவ்வகையான கருத்துக்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளவும் மாட்டோம். அவற்றிற்கு இணக்கம் தெரிவிக்கவும் மாட்டோம்.

மேலும் அரசாங்கம் நாட்டு மக்களை திருப்திப்படுத்த 13ஆம் திருத்தத்தை செயற்படுத்த மாட்டோம் என குறிப்பிடுகின்றனர். எனினும் சர்வதேச மட்டத்தில் பேச்சுவர்த்தைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் 13ஆம் திருத்தத்திற்கு அப்பால் அதிகார பகிர்விற்கு செல்வதாக தெரிவிக்கின்றது.

இவ்வாறு நாட்டையும், சர்வதேசத்தையும் ஏமாற்றி செய்வதறியாது தடுமாறிக்கொண்டிருக்கின்றது. 13ஆவது திருத்தத்தினை பலப்படுத்த வேண்டுமே தவிர அதனை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளை தமிழ் மக்கள் விரும்பவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இவ் விடயத்தில் மிகத் தெளிவாக உள்ளது. அரசாங்கம் தரும் சொற்ப அதிகாரங்களின் மூலம் வடக்கில் விடுதலையினை பெற முடியாது.

இவ்வாறு அர்த்தமற்ற பேச்சுக்களை நம்பி 13ஆவது திருத்தத்தினை பலப்படுத்தும் எந்தவொரு செயற்பாட்டினையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளாது எனவும் அவர் தெரிவித்தார். (2)



கோப்பாய் லயன்ஸ்கழக ஏற்பாட்டில் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் வி.கணேசலிங்கம் குடும்பத்தினரால் கோப்பாய் பிரதேசத்தில் தாய் அல்லது தகப்பனை இழந்த க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கும்நிகழ்வு அண்மை யில் மெடி கிளினிக் மண்டபத்தில் நடைபெற்ற போது....

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் தொழில் நுட்பவியல் கல்லூரியில் கணனி கற்கை நெறிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது என யாழ்.தொழில்நுட்ப கல்லூரி பணிப்பாளர் என்.யோகராஜன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் சான்றிதழ் 6 மாதம் கற்கை நெறிக்கான தகைமையாக க.பொ.த. (சா/த) பரீட்சையில் இருதடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், தமிழ் மற்றும் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

கணனி வலையமைப்பு வல்லுநருக்கான சான்றிதழ் 6 மாதம் கற்கை நெறிக்கான தகைமையா க.பொ. த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், தமிழ், விஞ்ஞானம் மற் றும் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் தொழில்நுட்பவியல் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங் களை சமர்ப்பிக்க வேண்டும். இக் கற்கை நெறிகளானது எதிர்வரும் ஜூலைமாதம் முதல்வாரம் ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

## வடமராட்சி பிரதேசங்களில் மதுபாவனை ஒழிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பிரதேசங்களில் சட்ட விரோத மதுபாவனை ஒழிப்பு நிகழ்வு நாளை, திங்கட்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பருத்தித்துறை மது வரி திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய கரவெட்டி, பருத்தித்துறை, மணற்காடு ஆகிய மூன்று பிரதேச செயலகங்களுக்கு கீழுள்ள 22 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கிராமங்களில் இந்நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்போது கசிப்பு விற்பனை, மதுபான விற்பனை, சாராய உற்பத்தி மற்றும் விற்பனை போன்றவற்றை ஒழிக்கும் முகமாக மேற்படி நிகழ்வு ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே வடமராட்சி பிரதேச பொது மக்கள் அனைவரையும் இதில் பற்கேற்குமாறு மது வரித் திணைக்களம் கேட்டுள்ளது. (2-60)

## சுன்னாகம் லயன்ஸ் கழக பணிப்பாளர் சபை தெரிவு

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் 2014/ 2015 ஆம் ஆண்டுக்குரிய புதிய பணிப்பாளர் சபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மேற்படி கழகத்தின் செயலாளர் லயன்சி.ஹரிகரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய தலைவராக மானிப்பாய் இலங்கை வங்கியின் முகாமையாளர் லயன் பொன். பாலகுமார், செயலாளராக வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன், பொருளாளராக தொழிலதிபர் லயன் ந.சண்முகவேல், முதலாவது உப தலைவராக ஹெல்திலங்காநிறுவனத்தின்மாகாணஇணைப்பாளர் லயன் ஆர். சிவநாயகம், இரண்டாவது உபதலைவராக சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் லயன் சி.குமாரவேல், மூன்றாவது உபதலைவராக மக்கள் வங்கி உத்தியோகத்தர் லயன் என்.தயாரூபன், அங்கத்துவ இணைப்பாளராக ஓய்வு நிலை பிரதேச செயலரும் வலி. தெற்கு பிரதேச சபை உறுப்பினருமான லயன் த.தேவராஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் லயன் த.சித்தார்த்தன், ஓய்வு நிலை சமூக சேவை உத்தியோகத்தர் லயன் வை.யோகானந்தராஜா, வைத்திய கலாநிதி லயன் எஸ் .பேரின்பநாயகம், சமூக சேவகர் லயன் செ. மகாதேவா லயன் சீமாட்டி ம.பூமாதேவி, சட்டத்தரணி எஸ்.பி. சிவஞானம், சட்டத்தரணி பொ.சுந்தரலிங்கம், தீவகம் பிரதேசசபை முகாமை உதவியாளர் லயன் எல்.ஜுட்சி ஆகியோர் தெரிவாகினர். (2)

## இராசி பலன்

08.06.2014
(வைகாசி 25, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
தசமி பிற்பகல் 2.21 மணிவரை
அத்தம் பிற்பகல் 2.21 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
அமிர்தசித்தம்

வளவன்

**மேடம்**: சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**இடபம்**: வீட்டுத் தேவைகள் பூர்த்தி யாகும், விருந்தினர் வருகையுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்**: சுப நிகழ்வுகளில் புதிய வர்க஌ின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும், கொடுக்கல் வாங்கல்களில் ஒழுங்கைப் பேணுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்**: குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், தொழிலில் எதிர்பார்த்த முன்னேற்றம் வந்து சேரும், புதிய திருப்பங்ள் ஏற்படலாம்.

**சிம்மம்**: நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி**: காரிய அலைச்சல்கள் அதிக ரிக்கும், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், பிதா சிந்தையுண்டு, சயன சுகக் குறைவுகள் ஏற்பட இடமுண்டு.

**துலாம்**: எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன் வரலாம், தொழில் முன்னேற்றப் பாதையை நோக்கிச் செல்லும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**விருச்சிகம்**: பயணங்களால் பலனுண்டு, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பிறர் உதவியுண்டு, சேமிப்புக்கள் உயர்வடைவதற்கான வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**தனுசு**: அரைகுறையாக இருந்த பணிகளை ஒவ்வொன்றாகச் செய்து முடிப்பீர்கள், சாமர்த்தியமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்.

**மகரம்**: சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பிரயாணங்களின் போது விழிப்புணர்ச்சி அவசியம், குடும்பத்தில் சில வாக்குவாதங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு

**கும்பம்**: இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், மதி நுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, அபூர்வ சந்திப்புண்டு.

**மீனம்**: காணாமற்போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம், தேக நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், செய்தொழில் மேன்மையுண்டு, சுவாரஸ்யமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கல்


(கரணவாய்)

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக் களத்தின் அனுசரணையுடன் சமூக அபி விருத்தி மன்ற நிதியத்திலிருந்து வடமராட்சி கரணவாய் கரவெட்டி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை வழங்கும் நிகழ்வு நாளை திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரணவாய் மத்தியில் அமைந்துள்ள மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற வுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலாளர் சிவ ஸ்ரீ அறிவித்துள்ளார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில் வேஸ்திரி அலன்ரின் கலந்து கொண்டு சிறப்பிக் கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட செயலக சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேந்திரன், கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி க.பொன்னையா மற்றும் யாழ். மாவட்டச் செயலக சமுர்த்தி மாவட்ட இணைப்பாளர் ஆ.ரகுநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

எனவே அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் வாழ்வின்எழுச்சி சமூக அபிவிருத்தி மன்றத்தினர் ஆகியோர் இணைந்து அறிவித்துள்ளனர். (2-60)




## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை சரவணை கிழக்கு - பள்ளம்புலம் அருள்மிகு முருக மூர்த்தி திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திதி புதன் கிழமைகாலை6.15 மணி தொடக்கம் 8.15 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறும். மேலும் அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு கும்பாபிஷேசகத்திற்கு முதல் நாளான செவ்வாய்க் கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறும். (2)

★★★★★★★★★

தெல்லிப்பழைகிழக்கு-பெரியகலட்டி அருள்மிகு ஞானவைரவர் சுவாமி கோவில் புனருத்தாரண அஷ் டபந்தன மகாகும்பாபிஷேகம்எதிர்வரும்11ஆம் திகதி புதன்கிழமை காலை 6.15 மணி தொடக்கம் நடை பெறவுள்ளது.

இதற்கமைய அடியார்கள்எண்ணெய்க்காப்பு சாத்தும்நிகழ்வு கும்பாபிஷேகத்திற்கு முதல் நாளான செவ்வாய்க்கிழமைக்கிழமைகாலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரைநடைபெறும்.


மேலும் தொடர்ந்து பதினொரு தினங்கள் காலை 10.30 மணிக்கும் மாலை 6.30 மணிக்கும் மண்டலாபிஷேக விசேட பூசைகள் நடைபெறும். (2)

★★★★★★★★★

சாவகச்சேரி- மீசாலை கிழக்கு அருள்மிகு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் புனருத்தாரண பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும்11ஆம்திகதி புதன் கிழமைகாலை 6.15 முதல் 7.15 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறும்.

மேலும் அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு கும்பாபிஷேக த்திற்கு முதல் நாளான செவ்வாய்க் கிழமைகாலை 10மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும். (2)

# தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் கம்பன் விழா



தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் கம்பன்விழா இருதினங்கள் காலை மற்றும் மாலை அமர்வுகளாக யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி பிர தான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய முதலாம்நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 11ஆம் திகதி புதன் கிழமை மாலை 3.30 மணிக்கு யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கைலாயபிள்ளை தலைமையில் ஆரம்பமாகும்.

இந்நிகழ்விற்கு மங்கள விளக்கினை யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் கா.அருந்தவபாலன் தம்பதியினர் ஏற்றுவர்.

வரவேற்புரையினை சோ.கோகுலன் நிகழ்த்த தொடக்கவுரையை யா/ கொடிகாமம் திருநாவுக்கரவு மத்திய கல்லூரி அதிபர் க.நடராசா வழங்குவார்.

தொடர்ந்து **எல்லை நீத்த** எனும் நூல் வெளியீடு இடம்பெறும்.

இந்நூலின் முதற் பிரதியை வைத்திய கலாநிதி சு.சி.அருளானந்தம் வெளியிட்டு வைக்க அதனை எல்.சி. இன்சுரன்ஸ் உதவி முகாமையாளர் பேதுறு அருட்பிரகாசம் பெற்றுக் கொள்வார்.

தொடர்ந்து கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் **வாலி வதையில் குற்றவாளி** எனும் தொனிப் பொருளில் வழக்காடு மன்றம் நடைபெறும்.

இதில் வழக்குத் தொடுப்பராக வி. அசோக்குமாரனும் மறுப்பராக மா. இராமலிங்கமும் தமது வாதங்களை முன்வைக்கவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் ந.ரஞ்சனா தலைமை யில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு மங்கள விளக்கினை முன்னாள் வங்கி முகாமையாளர் இ.இராஜதுரை தம்பதியினர் ஏற்றி வைப்பர்.

வரவேற்புரையினை க.ரஜனிகாந்தன் வழங்க தொடக்கவுரையினை தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயர் வண.பிதா கலாநிதி ஜெபநேசன் வழங்குவார்.

தொடர்ந்து இராமபிரானின் பெருமையை பெரிதும் வெளிப்படுத் தியவர் எனும் கருப் பொருளில் நடைபெறும் **சுழலும் சொற்போர்** நிகழ்விற்கு தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்துள்ளபேராசிரியர்வி.அசோக்குமார் நடுவராக கருத்துரை வழங் குவார்.

மேலும் **கம்பன் காட்டும் நானிலம்** எனும் தொனிப்பொருளில் தமிழ் நாட்டைச் சேர்ந்த புலவர் மா.இராமலிங்கம் தலைமையில் கருத்தரங்கம் இடம்பெறும்.அன்றைய தினம் மாலை அமர் வுகள் பிற்பகல் 2.30 மணிக்கு பேரா சியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை யா/கல்வயல் சண்முகானந்த வித்தியாலய அதிபர் இ.ரவீந்தின் தம்பதிகள் ஏற்றிவைப்பார்கள்.

வரவேற்புரையினை க.ஈஸ்வரன் வழங்க தொடக்கவுரையினை கலாநிதி ஆறுதிருமுருகன் ஆற்றுவார்.

மேலும் ஆன்றோர் கௌரவிப்பு நிகழ்வில் எழுத்தாளர் கே.ஆர். டேவிட் கௌரவிக்கப்படவுள்ளார்.

இன்றைய இளைஞர்களுக்குப் பெரிதும் வழிகாட்டக் கூடியவன் எனும் தொனிப்பொருளில் விவாத அரங்கு இடம்பெறும்

இவ்விவாத அரங்கிற்கு தமிழ்நாடு கலாநிதி லி.ரெங்கராஜா நடுவராக செயற்படுவார்.

கம்ப காவியம் காலங் கடந்து நிலைக்கப் பெரிதும் காரணமானது எனும் தொனிப் பொருளில் பட்டி மன்றம் இடம்பெறும் இப்பட்டி மன் றத்திற்கு கம்பவாரிதி இ.ஜெயராஜ் நடுவராக செயற்படுவார். (2)

## விசாகத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிழக்கு திருவருள் மிகு குருநாத சுவாமி கோவில் வைகாசி விசாகப் பொங்கல் விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி தொடக்கம் நடைபெறுமென திருப்பணிச் சபையினர் அறிவித்துள்ளனர். (2)

✦✦✦✦✦

தொண்டைமானாறு ஸ்ரீசெல்வச் சந்நிதி ஆலய வைகாசி விசாகத் திருவிழா எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

தொடர்ந்து 11 மணிக்கு சண்முக அர்ச்சனை நடைபெற்று சுவாமி வீதியுலா வலம் வருவார். (2)




# வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்ட மரக்குற்றிகள் பொலிஸாரால் மீட்பு

## உரிமையாளர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை பிரதேசத்தில் அனுமதியின்றி வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெறுமதியான மரக்குற்றி யாழ்.பொலிஸாரால் நேற்று முன்தினம் மதியம் மீட்கப்பட்டுள் ளது.

மீட்கப்பட்ட மரக்குற்றிகள் சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியானது எனவும் அதனை வீட்டில் பதுக்கி வைத்திருந்த வீட்டு உரிமையாளரும் கைது செய்யப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,


யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ். டபிள்யூ. விமல சேனவிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ். பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதககர் டி.எம். ஜெயத்திலக தலைமையினால் ஏழு பேர் கொண்ட பொலிஸ் குழுவினர் குறித்த வீட்டை சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய போதே மரக்குற்றிகள் மீட்கப்பட்டன.

அதனை அடுத்து குறித்த வீட்டு உரிமையாளரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்திய போது தான் இந்த மரங்களை வீட்டில் பதுக்கி வைத்து விற்பதாக தெரிவித்தார் எனவும்மீட்கப்பட்ட மரக்குற்றிகளையும் கைது செய்யப்பட்ட நபரையும் நீதிமன்றில் முற்படுத்தவுள்ள தாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்திருந்தனர். (2)



இலங்கை சாரணியர் சங்கத்தினரின் வேலை வாரத்தினை முன்னிட்டு வருடந் தோறும் நடத்தப்பட்டு வருகின்ற சாரணர் வேலைத்திட்டம் அண்மையில் வட மாகாண ஆளுநர் [illegible] நடைபெற்றது. இதன் போது சாரணர் களு டன் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி [illegible] காணலாம்.
(படம்-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SINGER FINANCE இடமிருந்து
பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டிக்காக
கடனாக ரூ .350,000/- வரை


தொடர்புகளுக்கு
தனு 077 9 357 124
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்
(சி-7577)

**விற்பனைக்கு**
குறுகிய காலம் பாவித்த RB XXX
தொடரிலக்க TAFE ரக்ரர்
புதிய பெட்டியுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : T.P -077-161 2717
c-6595

**பெண் பணியாளர் தேவை**
யாழ் நகரை அண்மித்த பகுதியில் அமைந்துள்ள அச்சகத்திற்கு கணணி வடிவமைப்பில் தேர்ச்சி பெற்ற மற்றும் வைண்டிங் செய்வதில் தேர்ச்சி பெற்ற பணியாளர் தேவை.
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : T.P - 077 814 1219
c-6994

## சீருடை அணியாத பொலிஸார் ஐவருக்கு பணி இடைநிறுத்தம்

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட கைதி யொருவரை பிடிப்பதற்காக சிவிலுடையில் நட மாடித் திரிந்த பொலிஸார் ஐவரை பணி யிலிருந்து இடைநிறுத்தியுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட கைதியொருவரைத் தேடிப்பிடிப்பதற்காக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் உதவிப் பொலிஸ் பரிசோதகர் உட்பட மேலும் நான்கு பொலிஸார் அடங்களாக பொலிஸ் சோதனைக் குழு வொன்று அமைக்கப்பட்டது.

இவர்களுடைய கடமை நேரம் நள்ளிரவு 12 மணியிலிருந்து அதிகாலை 3 மணி வரை மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தது.

எனினும், குறிதத பொலிஸ் குழுவை அதிகாலை 2 மணியளவில் சோதனை யிட்டபோது அவர்களில் எவரும் சீருடை தரித்து நிற்கவில்லை என்ற விடயம் தெரிய வந்துளளது.

இது விடயமாக நடவடிக்கையெடுத்த மட்டக்களப்பு பிரதி பொலிஸ் மா அதிபர், குறித்த பொலிஸ் உத் தியோகத்தர்களை பணியிலிருந்து இடை நிறுத்துமாறு வாழைச் சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கூடாக உத்தரவிட்டார். அதன்படி குறித்த ஐந்து பொலிஸாரும் நேற்று காலை இடை நிறுத்தம் செய்யப்பட்டனர். (2)

**வேலை வாய்ப்பு**
கொழும்பை அண்மித்த பகுதிகளில் நிரந்தர வேலை வாய்ப்புகள் உற்பத்தி பொருட்கள்/ விளையாட்டு பொருட்கள்/ வாசனைத் திரவியம்/உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு 17-50 வயது ஆண்-பெண் தேவை.
17000/=, 2800/=, 32000/= உணவு, தங்குமிடம் சகாய விலைகளில். நண்பர்கள்/குழுக்கள்/தம்பதிகள் ஒரே தொழிற்சாலைகளில் மற்றும் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வெற்றிடம் உண்டு.
மேலதிக விபரங்களுக்கு : 0778430179 (சி-7592)

**கடை இடமாற்றம்**

1963ஆம் ஆண்டிலிருந்து வசந்தமாளிகை புகழ் வெலிங்டன் திரை அரங்கு முன்பாகவும் இல.546 வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வந்த மொறாயஸ் மூக்குக் கண்ணாடியகம் தற்போது இல.516 ஆஸ்பத்திரி வீதி (வைத்திய சாலை முன்பாக) யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.
முகாமையாளர்
தொ.பே: 021 222 7893
(6574)

**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:**
021 321 0815, 021 567 1532

**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 6<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: MD, MBBS / வைத்தியர்<br>தொ.இ: B/3214 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 29.25<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L / இலிகிதர்<br>தொ.இ: G/3232 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>கி.பா: 78.25 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BE-ME / பொறியியலாளர் (அவுஸ்திரேலியா PR)<br>தொ.இ: B/3215 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 44<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, Technical College - Following<br>தொ.இ: G/3233 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா: 36 சூரி செவ் 4 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L / சாரதி<br>தொ.இ: B/3216 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 40.25<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி டிப்ளோமா /ஆசிரியர்<br>தொ.இ: G/3235 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: 21.75 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / முகாமையாளர்<br>தொ.இ: B/3217 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 32<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: ஹோட்டல் மனேஜ்மன் (UK – Student Visa)<br>தொ.இ: G/3237 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


**ஒரு நாள் மாபெரும் சரும பராமரிப்பு பயிற்சி பட்டறை!**
இவ்வுலகில் அழகை விரும்பாதவர் எவரும் இல்லை.
ஆனால் எமது அழகை இயற்கையான முறையில்
பேணிப்பராமரிப்பது எவ்வாறு என்று தெரியாமல் கவலைப்படுகின்றோம்.
**இதோ உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**
சருமம் பற்றிய விளக்கம்
சருமத்தின் வகைகள்
சருமத்தை கண்டுபிடிக்கும் முறைகள்
சருமத்தை பராமரிக்கும் முறைகள்
facial செயன்முறை பயிற்சி
போன்ற தெளிவான விளக்கத்துடன்
ஒரு நாள் சரும பராமரிப்பு பயிற்சி பட்டறை நடைபெற உள்ளது.
அரசாங்க உத்தியோகத்தர்
ஆசிரியர்கள் வங்கியில் தொழில் புரிபவர்களுக்கு
மிகவும் பயனுள்ளதாக இருக்கும்
திகதி : 12.06.14 வியாழக்கிழமை
(போயா விடுமுறை)
நேரம் : காலை 10.30 மணி
இடம் : 187/30 யூ னியன் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
சத்திரச் சந்தி அருகில் கொட்டடி வீதி.
பயிற்சிக் கட்டணம் : ரூபா 750 மட்டுமே
இருவர் இணைந்து வந்தால் ரூபா 500.
தொடர்பு : 077-771 2604
ஆசனங்கள் மட்டுப்படுத்தப்பட்டதால்
உங்கள் விபரங்களை மேற்கூறிய தொலைபேசி இலக்கத்திற்கு
SMS அனுப்பி முற்பதிவு செய்து கொள்ளுங்கள்.
C-7579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்களை இணைக்க வேண்டும்

## புளொட் தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் பிரதமர் நரேந்திரமோடிக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்குமிடையில் இடம்பெற்ற முதலாவது சந்திப்பிலேயே தமிழ் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கம் மற்றும் இருநாட்டு மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளமையினை நாம் நல்லதொரு தொடக்கமாகவே கருதவேண்டும் என புளொட் அமைப்பின் தலைவரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

இதேவேளை, 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பாற்சென்று 13 பிளஸ் என்ற விடயத்தில் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிகாரப் பரவலாக்கல் மற்றும் இருநாட்டு மீனவர் பிரச்சினைகள் போன்ற விடயங்களையும் உள்ளடக்கிய தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பதவியேற்பு நிகழ்விற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அழைத்து அவருடன் உரையாடுகையில் எங்களுடைய தமிழ் மக்களின் பிரச்சினைகள் மட்டுமன்றி இந்திய இலங்கை மீனவர்களின் பிரச்சினைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து கலந்துரையாடியுள்ளமை ஒரு நல்ல சமிக்ஞையைக் காட்டுகின்றது.

இந்த வகையில் 13ஆவது அரசியல் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட பொழுது நாங்கள் அனைவருமே அச்சட்டத்தினை எதிர்த்திருந்தோம். ஆனால் தற்பொழுது 13 ஆவது திருத்தச் சட்டத்துடன் பிளஸ் என்ற பதம் சேர்க்கப்பட்டு அச்சட்டத்தில் மேலதிகமான அதிகாரங்களை சிறுபான்மை இனங்களுக்கு வழ்ங்குவதற்கான ஏற்பாடுகள் கொண்டுவரப்படவுள்ளதாகப் பேசப்படுகின்றது.

இந்த இடத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தில் தமிழ் மக்களுக்கும் ஏற்றுக் கொள்ளக்கூடிய, எமது மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய விடயங்களை சேர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

இதேபோல் எமது மக்களினுடைய அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் அபிவிருத்திக்குமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பான மாகாண சபைகளின் பங்களிப்பு தொடர்பாகவும் ஆராய்ந்து செயற்பாடுகளை மேற் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கோரிக்கை விடுத்துள்ளார்.

வெளிநாட்டு செய்தி சேவைக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன ஏற்படுத்திய இந்த ஆட்சி முறை, அரசியல் ஸ்திரத்தன்மைக்கும் முக்கியமான காலகட்டங்களிலும் உதவும் என்பதால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இடதுசாரி தலைவர்கள் வரவேற்று வந்தனர்.

எனினும் தற்போது இடதுசாரி கட்சியை சேர்ந்த அமைச்சர் வாசுதேவ, நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவேண்டும் என்றும், இது மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் என்ற வகையில் செயற்படுத்த வேண்டிய காரியம் என்றும் குறிப்பிட்டார்.

எனினும் வாசுதேவவின் கருத்துக்கு அரசாங்கத் தரப்பில் இருந்து இன்னும் கருத்துக்கள் எவையும் வெளியாகவில்லை. (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 180 | 250 | 200 |
| தக்காளி | 180 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 90 | 100 | 120 |
| கரட் | 140 | 120 | 160 |
| பூசணி | 80 | 70 | 60 |
| புடோல் | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 180 | 130 | 100 |
| லீக்ஸ் | 100 | 80 | 100 |
| பீற்றூட் | 100 | 80 | 100 |
| கறிமிளகாய் | 140 | 100 | 160 |
| முருங்கைக்காய் | 240 | 170 | 120 |
| போஞ்சி | 180 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | — | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 130 | 130 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 20-30 |
| இராசவள்ளி | 100 | 90 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 38

எஸ்எஸ்கே அஜன்


தன் தாயை இலவச அரிசிக்கு கியூவில் விட்டு விட்டு கியூபா சுதந்திரத்திற்கு போராடிய சேகுவேரா படம் பொறித்த பெனியனை அணிபவனும்...

60 வயதாகியும் பணிக்குச் செல்லும் தந்தையைப் பற்றி கவலைப்படாமல் 37 வயதில் ஓய்வு பெறும் சச்சினுக்காக வருந்துபவனும்...

தன்வீட்டில் பழைய கஞ்சி குடித்து விட்டு நடிகனின் கட்டவுட்டுக்கு பாலாபிஷேகம் செய்பவனும்


இந்த மண்ணுக்கு கிடைத்த சாபங்கள்.

திபாகரன் பாலசுப்பிரமணியம்



சுஜன் சுஜன்

Love என்றது Quarter மாதிரி
நட்பு என்றது Doctor மாதிரி




என்னதான் Quarter அடிச்சு நாசமா போனாலும் கடைசில நாம Doctor கிட்டத்தான் போகணும்

கஜா கஜானி



நம் ஊருக்கு நாய் பிடிக்கிற வண்டி வரட்டும்... உன்னை புடிச்சு கொடுத்து றேன்...

சர்மிலா சிவராஜா



லாவனியா துரைரத்தினம்

வெற்றி வந்தால் பணிவு அவசியம்
தோல்வி வந்தால் பொறுமை அவசியம்
எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம்
எது வந்தாலும் நம்பிக்கை அவசியம்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முற்பட்ட மூவர் பிடிபட்டனர்

வீதியால் சென்ற சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டவர்களை இளைஞர்கள் பிடித்துச் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வண்ணிவிளாங்கும்அம்மன்ஆலயத்திருவிழாவிற்காக பாலை-பாணியிலிருந்து துவிச்சக்கரவண்டியில்தாயும் குறித்த சிறுமியும் சென்றுள்ளனர்.

அவ்வேளை ஆலயத்திற்கு செல்லும் வீதி குன்றும் குழியுமாக காணப்பட்டமையினால் தாய் நடந்து வருவதாகக் கூறி மகளை துவிச்சக்கரவண்டியில் முன்னே செல்லுமாறு பணித்துள்ளார்.




அவ்வேளை, குறித்த வீதியின் இருமருங்கிலுமுள்ள பற்றைக்குள் மறைந்திருந்த மூவர் 15 வயதுடைய அச்சிறுமியை துஷ்பிரயோகம்செய்ய முற்பட்டுள்ளனர்.


அவ்வீதியால் வந்த இரு இளைஞர்கள் பற்றைக்குள் துவிச்சக்கர வண்டியும் பாதணிகளும் கிடப்பதைக் கண்டு காட்டுக்குள் சென்று பார்த்துள்ளனர்.

மூவர் குறித்த சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டதைக் கண்டு அவர்களை பிடிக்க எத்தணித்த போது அவர்கள் முச்சக்கர வண்டியில் தப்பியோடியுள்ளனர்.

எனினும், இருவர் சம்பவ தினமே இளைஞர்களால் பிடிபட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். மற்றைய நபர் நேற்றைய தினம் மாங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (9-15)

# அழிவை நோக்கிச் செல்லும் வவு.வெடிவைத்தகல் கிராமம்



(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தின் வடக்கு பிரதேச செயலகப்பிரிவில் உள்ள வெடிவைத்தகல் கிராமம் தமிழ் அழிந்து செல்வதை தடுக்குமாறு சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யுத்தத்தின் வடுக்களை தாங்கிய இக்கிராமம் வவுனியாவின் பழைய கிராமங்களில் ஒன்றாக காணப்பட்டபோதிலும் போர் சூழல் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ள்தால் இப்பகுதி காடுகள் நிறைந்ததாக மாறியுள்ளது.

முன்னர் 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வந்த இக்கிராமத்தில் தற்போது வெடிவைத்தகல் கிராம சேவகர் பிரிவில் உள்ள கோவில் புளியங்குளத்தில் மாத்திரம் 9 குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

வயல் வெளிகளும் காடுகளும் சூழப்பெற்று நீர் வளம் நிறைந்திருந்த வெடிவைத்தகல் கிராமமானது தற்போது செழிப்பிழந்து குடியிருப்புகளுமின்றி வெறும் வனாந்திரமாக மாறியுள்ளது.

அங்கு இந்திய அரசின் நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ள பாடசாலை கவனிப்பாரற்று காணப்படுவதுடன் வீடுகளும் சிதைவடைந்தும் காணபபடுகின்றன.

அக்கிராமத்தை சூழவும் காடுகள் வளர்ந்து காணப்படுவதனால் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் மின்சார வசதிகள் மற்றும் வீதி செப்பனிடப்படாமை போன்ற காரணங்களால் அக்கிராமத்தில் மக்கள் மீள்குடியேற விருப்பமின்றி உள்ளதாகவும் சிலர் தமது வயல் நிலங்களில் நெற்செய்கை காலங்களில் மாத்திரம் விவசாயம் செய்து விட்டு செல்வதாகவும் அயல் கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த கிராமத்தை அழிவில் இருந்து காக்க அரச அதிகாரிகளும் கிராம மக்களும் முன்வருவது அவசியமென சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர். (9-250)

# இரணைமடு திட்டத்தில் பூநகரியை முதன்மைப்படுத்துக

(பூநகரி)

பூநகரி பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர்த்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு இரணைமடுக் குடிநீர் விநியோகத்திட்டத்தில் பூநகரியை முதன்மைப்படுத்த வேண்டுமென பிரதேச கமநல சேவை நிலையக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பூநகரி கமநல சேவை நிலையத்தின் கூட்டம் தலைவர் எஸ்.யோகராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில் பூநகரி பிரதேசத்தின் குடிநீர்ப் பிரச்சினை தொடர்பாக ஆராயப்பட்டது. இங்குள்ள பெரும்பாலான குடிநீர் கிணறுகள் உவர் நீராக மாறியுள்ளன.

இதனால் பிரதேசத்தில் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. எனவே இரணைமடு குடிநீர் விநியோகத் திட்டத்தில் பூநகரியை முதன்மைப்படுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

இதனையடுத்து இத்தீர்மானம் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் உட்பட சகலதரப்பினருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (9-84)

## விளையாட்டுப்போட்டி

(கிளிநொச்சி)

கனகபுரம் றோயல் முன்பள்ளியின் விளையாட்டுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 க்கு முன்பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் க.அருட்செல்வம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக உளநல மருத்துவர் மா.ஜெயராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவவிருந்தினர்களாக சிவஸ்ரீ அமிர்தஸ்ரீஸ்கந்தராஜா குருக்களும், பங்குத்தந்தை வண.பிதா அன்ரன் அமலதாஸ் அடிகளார், சிறப்புவிருந்தினர்களாக பொறியியலாளர் மு.கிருஷ்ணகுமார், விளையாட்டு உத்தியோகத்தர் சண்முகநாதன் குமார், கட்டளைத்தளபதி எல்.ஸ்ரீ. சுஜித் குணசேகர, கிளி.ஆரம்ப வித்தியாலய முதல்வர் பாலகணேசமூர்த்தி, சமாதான நீதவான் அ.கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (9-254)

## பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டப் பொதுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கிளி.மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கட்டடத்தில் மாவட்டக் கிளை நிர்வாகம் குழுத் தெரிவு ஆசிரியர், அதிபர், மாணவர் தொடர்பில் மாவட்ட மட்ட பிரச்சினைகள் கலந்துரையாடல் தீர்மானம் எடுத்தல் என்பனவற்றுடன் ஆசிரியர், அதிபர், பதவி உயர்வு, சம்பளப் பிரச்சினைகள் தொடர்பான நடைமுறை விடயங்கள் எனும் தலைப்பில் அன்பு ஜவஹர் ஷாவின் விசேட உரையும் இடம்பெறவுள்ளது. (9)

# பாதுகாப்பற்ற பாலங்கள்; அச்சத்துடன் பயணிகள்

(மல்லாவி)

பரந்தனிலிருந்து முல்லைத் தீவுக்குச் செல்லும் வீதியில் 5 பாரிய பாலங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

இதன்போது இரவு நேரங்களில் வீதியில் வெளிச்ச சமிக்ஞைகள் போடப்படாமையினால் போக்குவரத்து செய்வோர் விபத்துக்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

மேற்படி வீதிக்கு காப்பற் இடும் பணி கடந்த வருடம் பூர்த்தியடைந்தது.

தற்போது வீதியின் குறுக்கே பெரிய பாலங்கள் அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனினும், குறித்த பகுதியை அடையாளங் காணக்கூடிய சமிக்ஞைகள் எதுவுமின்மையால் போக்குவரத்து செய்வோர் ஆபத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டோர் இப் பாலங்களுக்கு அருகில் வெளிச்ச சமிக்ஞைகளை இடுமாறு, மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (9-15)

# வீதி விபத்தில் மூவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா நகரில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற மூன்று விபத்துக்களில் மூவர் காயமடைந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி வவுனியா மூன்று முறிப்புப் பகுதியில் பேருந்தும் கப்ரக வாகனமும் மோதிக் கொண் டதில் இரு வாகனங்களும் சேதமடைந்துள்ளதுடன் கப்ரக வாகனத்தில் பயணித்த பூந்தோட்டத்தைச் சேர்ந்த திருமதி கௌசலா அழகராசா (வயது-35) என்ற பெண் படுகாயமடைந்த நிலையில் வவு னியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு வவுனியா கண்டி வீதியில் உள்ள பௌத்த விகாரைக்கு முன்னால் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளதுடன் வவு னியா ஹொரவப்பொத்தானை வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்திலும் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (9-250)

# பூநகரி புகழ்மாலை போட்டியில் வெற்றியீட்டியோர் விபரங்கள்

(பூநகரி)


பூநகரி புகழ் மாலை இறுவெட்டு வெளியீட்டாளரான நடராசா திருஞானபவனால் பூநகரி வரலாறு தொடர்பான வினாக்களுக்கானசரியான விடைகளை எழுதி வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி

ப.பாலகுமார் (55, மூத்த விநாயகா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்), ய.சாருஜா (பள்ளிக்குடா பு,நகரி), வி.பரமேஸ்வரி (நெடுங்குளம் பூநகரி) ஆகியோர் முதல் மூன்றிடங்களைப் பெற்றுள்ளனர்.

அத்தோடு பத்து ஆறுதல் பரிசில்களை சி.தனுசிக்கா (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), அ.தவரத்தினராசா (வட்டுக்கோட்டை), எஸ்.அர்மனா (தம்பிராய், பூநகரி), ஜெ.அபிசான் (கோபாலபிட்டி, பூநகரி), சு.ஜெனோசன (உரும்பிராய் கிழக்கு, யாழ்ப்பாணம்), ந.ஜங்கரன் (20 விநாயகபுரம், துணுக்காய்), சு.நாகம்மா (கரிகட்டுக்குளம்,பூநகரி), அ.அமுதாஸ (பொன்னாதோட்டம், பொலி கண்டி), ஜெ.ஆரணி (செட்டிய குறிச்சி, பூநகரி), த.விதுர்சிகா (கோகுல வீதி, உரும்பிராய் ஆகியோர் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான சீட்டிழுப்பு பூநகரி மத்திய கல்லூரி பரிசளிப்பு விழாவான கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்றது.

இவர்களுக்குரிய பணப் பரிசில்களை கனடா சரவணப் பொய்கை நிதியம் வழங்கவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (9-84)



பூநகரி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், பாண்ட் வாத்தியங்கள் சகிதம் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மாணவியொருவருக்கு பதக்கம் அணிவித்து கௌரவிப்பதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூநகரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# திரை விமர்சனம்

தொல்பொருள் ஆராய்ச்சியாளரான பிரகாஷ் ராஜ். திருமண வயதை தாண்டியும் பிரம்மச்சாரியாகவே வாழ்ந்து வருகிறார். இவர் ருசியான சமையல் மீது ஆர்வம் உடையவர். அதேபோல். திருமண வயதை தாண்டிய சினேகா டப்பிங் ஆர்ட்டிஸ்டாக பணிபுரிந்து கொண்டு ஊர்வசி மற்றும் சம்யுக்தா உடன் ஒரே வீட்டில் வசித்து வருகிறார்.

ஒருநாள் ஊர்வசி. சினேகாவிடம் ஒரு ஹோட்டல்போன் நம்பரை கொடுத்து உனக்கு ஏதாவது சாப்பிட வேண்டுமென் றால். இந்த நம்பருக்கு போன் பண்ணி ஓடர் பண்ணிக் கொள் என்று சொல்கிறார். சினேகாவும் டப்பிங் பேசிவிட்டு. பசிக்கிறதே என்று ஊர்வசி கொடுத்த நம்பருக்கு போன் செய்கிறார். ஆனால். நம்பர் மாறிப் போய் பிரகாஷ்.ராஜுக்கு சென்றுவிடுகிறது. சினேகாவும். ஹோட்டல்தான் என்று எண்ணி மளமள வென்று தனது ஆர்டரை சொல்லி விட்டு போனை கட் பண்ணி விடுகிறார்.

சினேகாவின் இந்த செயலால். செய்வதறியாது முழித்துக் கொண்டிருக்கும் பிரகாஷ் ராஜுக்கு. தான் கொடுத்த ஓடர் இன்னும் வரவில்லையே என்று சினேகா மறுபடியும் போன் செய்கிறார். இந்த முறை பிரகாஷ்ராஜ் இது ஹோட்டல் இல்லை என்று அவரிடம் விளக்க. அதற்கு சினேகா இதை முதலிலேயே சொல்ல வேண்டியதுதானே என அவரிடம் சண்டைக்கு போக. இருவருக்கும் வாக்குவாதம் வந்து அது சண்டையில் போய் முடிகிறது.

இந்நிலையில் பிரகாஷ் ராஜ் வீட்டிற்கு அவரது அக்கா பையன் தேஜஸ் வருகிறார். அவரிடம் நடந்த விடயத்தை பிரகாஷ்ராஜ் விளக்க. பிரகாஷ் ராஜுக்கு தெரியாமலேயே அவருடைய செல்போனில் இருந்து சினேகாவிற்கு ஸாரி என்று மெசேஸ் அனுப்புகிறார் தேஜஸ். இதைபார்க்கும் சினேகாவின் தங்கையான சம்யுக்தா. பதிலுக்கு சினேகாவை பிரகாஷ்ராஜிடம் பேசி சமாதான மாகுமாறு வற்புறுத்துகிறார். அதற்கு சினேகாவும் ஒப்புக் கொண்டு பிரகாஷ் ராஜிடம் போனில் பேசி தான் நடந்துகொண்ட விதத்திற்கு மன்னிப்பு கேட்கிறார். பதிலுக்கு பிரகாஷ் ராஜும் சினேகாவிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறார்.

அதன்பிறகு இருவரும் போன் மூலமாக இவர்கள் காதலை வளர்த்துக் கொள்கிறார் கள். ஒருநாள் இருவரும் நேரில் சந்திக்க ஆசைப் படுகின்றனர். இருந்தாலும். ஒருத்தரை ஒருத்தர் தங்கள் வயதையும். தோற்றத்தையும் கருத்தில் கொண்டு நேரில் சந்திக்க பயப்படுகின்றனர். அதற்காக பிரகாஷ் ராஜ் தனது அக்கா பையனான தேஜஸையும். சினேகா தனது தங்கை சம்யுக்தாவையும் அனுப்பி வைக்கிறார்கள்.

சம்யுக்தாவை நேரில் சந்திக்கும் தேஜஸ். அவள்தான் பிரகாஷ்ராஜிடம் இவ்வளவு நாள் பேசியவள் என்று நினைத்துக் கொள்கிறார். அதேபோல். தேஜஸ்தான் இதுநாள்வரை சினேகாவிடம் பேசிக் கொண்டிருந்தவர் என நினைத்துக் கொள்கிறாள் சம்யுக்தா. இருவரும் சந்தித்து பேசிவிட்டு. பிறகு பிரகாஷ் ராஜிடம் சென்று தேஜஸ் உன்னைவிட அவள் வயதில் சிறியவள் என்று கூறுகிறார். அதேபோல். சம்யுக்தாவும் சினேகாவிடம் சென்று அவர் உன்னைவிட வயதில் சிறியவர் என்று கூறுகிறாள்.


இருவரும் தவறுதலாக ஜோடியை தேர்ந்தெடுத்து விட்டோமா? என மனசுக்குள்ளே எண்ணி புழுங்குகிறார் கள். இதற்கிடையில். இவர்களுக்காக தூது போன தேஜஸும். சம்யுக்தாவும் காதலிக்க தொடங்கி விடுகிறார் கள். ஒருகட்டத்தில். என்ன ஆனாலும் பரவாயில்லை என்று பிரகாஷ் ராஜ் சினேகாவை சந்திக்க நினைக்கிறார். இருவரும் சந்தித்தார்களா? ஒருவரையொருவர் சந்தித்து வாழ்க்கையில் இணைந்தார்களா? என்பதே மீதிக்கதை.



படத்தில் பிரகாஷ்ராஜ் சம்பந்தப்பட்ட காட்சிகள் மிகவும் அருமை. தனது அனுபவ நடிப்பால் ஒவ்வொரு காட்சியிலும் மிளிர்கிறார். சினேகா கோபம். விரக்தி. சோகம் என நம்மையும் பரிதாபப்பட வைக்கிறார். திருமண வயதை தாண்டிய பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை மையப்படுத்திய அமைக்கப்பட்ட காட்சியமைப்புகள் அருமை.

ஆபாசம் இல்லாமல் படத்தை எடுத்ததற்காக இயக்குநர் பிரகாஷ்ராஜுக்கு சலாம் போடலாம். ஆனால். ரசிக்கும் படியான காட்சிகள் இல்லாதது கொஞ்சம் சோர்வாக இருக்கிறது. படத்தின் காட்சிகளில் பெரிய சுவாரஸ்யம் இல்லை. கதையிலும் பெரிய திருப்பங்கள் இல்லாமல் எடுத்திரு ப்பதும். கதையை மெதுவாக நகர்த்தியிருப்பதும் கொஞ்சம் போரடிக்க வைத்திருக்கிறது.

மொத்தத்தில் 'உன் சமையலறையில்' சாப்பாட்டில் ருசி கொஞ்சம் குறைவுதான்.





## அந்தேரி புலியாய் அஞ்சானில் சூர்யா

சூர்யா தற்போது நடித்து வரும் அஞ்சான் படம் ஓகஸ்ட் மாதம் வெளிவரவிருக்கிறது. மும்பை. ஐதராபாத். சென்னை என தொடர்ந்து நடைபெற்ற படப்பிடிப்புக்கு தற்போது சின்ன பிரேக்.

இந்த இடைவெளியில் ஏர்செல் விளம்பரப் படத்தில் நடிக்கப்போய்விட்டார் சூர்யா. பிரபல ஒளிப்பதிவாளர் ராஜீவ்மேனன் இயக்கும் இந்த விளம்பரப்படத்தில் சூர்யா நடித்து முடித்த பிறகு மீண்டும் அஞ்சான் படப்பிடிப்பு தொடங்குகிறது.

மும்பையில் ஏற்கனவே படப்பிடிப்பு நடைபெற்ற ஏரியாக்களிலேயே மீண்டும் சில காட்சிகள் மற்றும் பாடல் காட்சிகளை எடுக்க திட்டமிட்டு வருகின்றனர். அஞ்சான் படத்தில் ராஜு பாய் என்ற வேடத்தில் நடிக்கிறார் சூர்யா.


மும்பையில் உள்ள அந்தேரி பகுதியில் மிகப் பெரிய தாதாவாக விளங்கும் ராஜு பாயை அப்பகுதி மக்கள். அந்தேரி புலி என்று அழைக்கின்றனராம். இதை உறுதிப்படுத்துவதுபோலவே அஞ்சான் படத்தில் சூர்யாவின் அறிமுகப்பாடலில் அந்தேரி புலி என்ற வாசகங்களுடன் பாடல் வரிகள் இடம்பெற்றுள்ளன.

நாயகன் படத்தில் கமல் ஏற்ற கதாபாத்திரத்தின் பெயர் வரது பாய். அஞ்சான் படத்திலோ சூர்யாவின் வேடமோ..ராஜு பாய். என்னமோ ஒற்றுமை தெரியுதே..



பிந்து மாதவி

## அந்த நாள் ஞாபகம்



அன்றைய நினைவுகள் : " உண்மையே உன் விலை என்ன" படப்பிடிப்பில் சோவுடன் சமீபத்தில் மறைந்த சுகுமாரி

## தனுஷின் தயாரிப்பில் நான் நடிக்கவில்லையே




கடந்த சில நாட்களாக கோடம்பாக்கத்தில் விஜய் சேதுபதி தனுஷின் தயாரிப்பில் உதயநிதி மனைவி கிருத்திகாவின் இயக்கத்தில் நடிக்க உள்ளார் என்ற செய்தி வெளிவந்தது.

இதை கேள்விப்பட்ட விஜய் சேதுபதி. நான் தனுஷ் தயாரிப்பில் நடிக்க உள்ளேன் என்ற செய்தி வெறும் வதந்தியே. இதுவரை என்னை தனுஷ் தரப்பில் யாரும் வந்து அணுகவில்லை. அப்படி வாய்ப்பு அமைந்தால் கண்டிப்பாக நடிப்பேன் என்றார்

விஜய் சேதுபதி தற்போது புறம்போக்கு. வன்மம். இடம் பொருள் ஏவல் என பிசியாக நடித்து வருகிறார்.

## அனுஷ்காவுக்கு விரைவில் டும் டும் டும்!



கடந்த 2005 ஆம் ஆண்டு தெலுங்கில் அறிமுகமான இவர் விஜய். விக்ரம். சூர்யா என முன்னணி நடிகர்களுடன் ஜோடியாக நடித்துள்ளார். தற்போது தமிழில் 'லிங்கா' படத்தில் ரஜினி ஜோடியாகவும் தல55 படத்தில் அஜீத்துக்கு ஜோடியாகவும் நடித்து வருகிறார்.

தெலுங்கில் ருத்ரமாதேவி. பாகுபலி என இரு சரித்திர கதையம்சம் உள்ள பிரமாண்ட படங்களில் நடிக்கிறார். இந்த படங்களை முடித்ததும் அனுஷ்காவுக்கு திருமணத்தை முடிக்க பெற்றோர் திட்டமிட்டுள்ளனர்.

இதற்காக இதில் ஒருவர் தொழிலதிபர். டாக்டர். என்ஜினீயர் என மூன்று வரன்களை ஏற்கனவே பார்த்து வைத்திருக்கிறார்களாம்.

அடுத்த வருடம் அனுஷ்காவுக்கு டும் டும் டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் நிர்வாக மையம் - மாங்குளம்

வடக்கு- கிழக்கு இணைந்த மாகாணத்தின் நிர்வாக மையம் திருகோணமலையில் அமைய வேண்டுமென்று பலர் விரும்பியபடி திருகோணமலையில் நிர்வாக மையம் அமைந்தது. இணைந்திருந்த வடக்கு- கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்ட பொழுதும் கிழக்கு மாகாணத்தில் நிர்வாக மையம் தொடர்ந்து திருகோணமலையில் இருந்து வருகின்றது. இணைந்த வடக்கு- கிழக்கு மாகாணத்தில் வடபகுதிக்கான நிர்வாக மையம் மாங்குளத் தில் அமைய வேண்டும் என்ற கருத்து முன் னெடுக்கப்பட்டுபலநிலைகளிலும்பலராலும் ஆராயப்பட்டுபொதுவானதொரு கருத்து உடன்பாடு வட பகுதி மக்களிடம் ஏற்பட்டு இருந்தது.

இந்நிலையில் வட மாகாணத்திற்கு என தனியான மாகாண சபை உருவாக்கப்பட்ட பொழுது இதன் நிர்வாக மையம் மாங்குளத்தில் அமையப் போகின்றது என்ற பேச்சு ஏற்பட்டது. ஆனால் வடமாகாண சபை தனியாக உருவாக்கப்பட்ட பின்பு அது திருகோண மலையில் வரோதய நகரில் இயங்கியது. அதன் பின்னர் இச்சபை வவுனியாவில் அல்லது கிளிநொச்சியில் இயங்கப் போவதாக செய்திகள் வந்தன. இன்று யாழ்ப்பாணத்தில் பல வசதியீனங்கள் மத்தியில் பல இடங்களில் மாகாண சபை செயற்பாடு இடம் பெற்று வருகின்றன. அரசாங்கம் மாங்குளத்தில் வடமாகாணத்தின் நிர்வாக மைய த்தை அமைக்க நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் திட்டம் தீட்டப் பணித்தது. இதன் மூலம் வடபகுதிக்கான பௌதீக அபிவிருத்தித் திட்டத்தில் மாங்குளத்திற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. மேலும் தென்கொரியா அரசாங்கத்தின் உதவியுடன் மாங்குளத்தில் நிர்வாக மையம் கட்டி எழுப்பப்படும் எனவும் செய்திகள் வெளி வந்தன. இந்நிலையில் வடமாகாண சபைத் தேர்தல் முடிவுற்று மக் களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை அமையப்பெற்ற பின்னர் இத்திட்டம் குறித்து இன்னும் தெளிவான கருத்து வெளிவரவில்லை.

இந்நிலையில் இத்திட்டத்தின் நன்மைகள் மற்றும் இதனோடு இணைந்த பிரச்சினைகள் குறித்து இங்கு ஆராயப்படும். ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியில் துறைசார் அபிவிருத்தியும் இடஞ்சார் அபிவிருத்தியும் முக்கியம் பெறுகின்றன. இவ்விரண்டு துறையும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டு இருப்பினும் இரண்டும் தனித்தன்மை வாய்ந்தன. மேலும் எதற்கு முன்னிலை கொடுப்பது என்பது இடத்துக்கு இடம் வேறுபடும்.

வடமாகாணம் பொதுவில் அபிவிருத்தி குன்றிய மாகாணமாக இருந்து வருவதுடன் தேசிய மொத்த வருமானத்தில் நான்கு வீதம் வருமானம் அளிக்கின்றது. இம்மாகாணத்தின் பொருளாதாரம் நீண்ட காலமாக வளர்ச்சியை பெரும் மாற்றத்திற்கு உள்ளாகவில்லை.

இம்மாகாணத்திற்குள் அடங்கும் யாழ்ப்பாண குடாநாட்டு மக்கள் தொழில் நிமித்தம் நாட்டின் பிற பகுதிகளுக்கும் பிற நாடுகளுக்கும் சென்று அங்கு உழைத்த பணம் இம் மாகாணத்தின் செயற்பாட்டுக்கு உதவியது. 1940-1970 வரையான யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை மணியோடர் பொருளாதாரம் என்றும் பின்னர் வெளிநாட்டு உண்டியல் பொருளாதம் என்றும் வழங்கப்பட்டது.

நீண்ட காலமாக மலேரியாவாலும் மற்றும் பிற காரணங்களாலும் பெரிதும் பாதிக்கப்பட்டு இருந்த வடமாகாணத்தின் பொருளாதாரம் பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலும் சுதந்திரத்தின் பின்னரும் கூட பெரிய மாற்றங்களை காணவில்லை. பிரித்தானியர் முன்னெடுத்த பெருந்தோட்ட பயிர்ச் செய்கைகள் மூலமாகவோ அல்லது சுதந்திரத்திற்கு பின் முன்னெடுக்கப்பட்ட பெரும் நீர்ப்பாசன திட்டங்கள் , பெரும் குடியானவர் குடியேற்ற திட்டங்கள் மூலமாகவோ அல்லது கைத்தொழில் நடவடிக்கைகள் மூலமாகவோ இம்மாகா ணத்தின் பொருளாதாரத்தின் அடிப்படை கட்டமைப்பில் பெரும் மாற்றங்கள் ஏற்படவில்லை. எனினும் வன்னிப் பிரதே சத் தில் சிறிய, நடுத்தர குளங்களின் புனரப் பின் மூலம் அதனுடன் இணைந்த குடியானவர் குடியேற்ற திட்டங்கள் சிறிதளவு வளர்ச்சி பெற்றன.

யாழ்ப்பாண குடாநாடு நீர்வளம் மிக்கதாக இருந்ததால் மக்கள் இடம்பெயராது இங் கேயே வாழும் பண்பு காணப்பட்டது. குறிப் பிடத்தக்க அரசியல் பிரதிநிதித்துவத்தாலும் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சபைகள், சங்கங்கள் பரோபகாரிகளின் செயற்பாடுகளினாலும் கல்வி, மருத்துவம், கூட்டுறவுத் துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டன. இதனால் குடாநாடு வேலை வாய்ப்பு குறைந்த பிரதேசமாக இருந்த பொழுதும் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற பிரதேசமாக மாறியது.

வடமாகாணம் 8884 சதுர கிலோமீற்றர் பரப்புடையது. இன்று இம் மாகாணம் 5 நிர்வாக மாவட்டங்களாக பிரிக்கப்பட்டது.

| மாவட்டம் | நிலப்பரப்பு | குடித்தொகை 2012 | குடியடர்த்தி ச.கீ.மீ.2012 |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 1025 | 583,378 | 569 |
| கிளிநொச்சி | 1029 | 102,875 | 100 |
| மன்னார் | 1996 | 99,051 | 50 |
| வவுனியா | 1967 | 171151 | 87 |
| முல்லைத்தீவு | 2617 | 91947 | 35 |
| வடமாகாணம் | 8884 | 1,058,762 | 119 |

மாவட்டங்களின் நிலப்பரப்பு , 2012 இன் குடித்தொகை , குடியடர்த்தி பின்வருமாறு,

அபிவிருத்தியில் பின்தங்கிய வடமாகாணம் இரண்டு வேறுபாடுடைய புவியியல் பிரதேசங்களைக் கொண்டுள்ளது. அவையாவன ,

01. யாழ்ப்பாணக் குடாநாடு
02. பெருநிலப்பரப்பு (வன்னி)

இம்மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பில் குடாநாடு 1172 சதுர கிலோமீற்றரை (13.19%) கொண்டுள்ளது. பெரு நிலம் 7712 சதுர கிலோ மீற்றர் (86.81%) பரப்புடையது. இதனால் வடமாகாணத்தின் பெரு நிலப்பரப்பிலுள்ள மாங்குளத்தில் நிர்வாக மையம் அமைவது பின்தங்கிய நிலையுள்ள ஆனால் நிறைவான பல வளங்களைக் கொண்ட வன்னிப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பெரிதும் உறுதுணையாக இருக்கும்.

2012 இல் வடமாகாணத்தில் 1058762 பேர் இருந்ததாக 2012 குடிக் கணிப்பு கூறுகின்றது. இம்மாகாணத்தின் குடித்தொகை மீள் குடியேற்ற செயற்பாடுகளால் துரிதமாக மாற்றம் பெற்று வருகின்றது. உதாரணமாக 2012 இல் கிளிநொச்சி மாவட்டம் 102875 பேரைக் கொண்டுள்ளது. எனினும் செப்டெ ம்பர் 2013 இல் இம்மாவட்டத்தின் குடித் தொகை 130, 000 பேராக அதிகரித்து இருந்தது. இதே போல் 5 மாவட்டங்களிலும் குடித் தொகை அதிகரிப்பு துரிதமாக ஏற்பட்டு வருகின்றது.

2012 இல் மாகாணத்தின் குடித்தொகையில் 591, 886 பேர் (56%) குடாநாட்டிலும் 466,874 பேர் (44%) வன்னியிலும் இருந்துள்ளனர். 1981 இல் குடாநாட்டில் 749,429 பேர் (67%) வன்னியில் 391,996 பேர் (33%) இருந்துள்ளனர். 1971 இல் இவ்விரு பிரதேசங்களின் குடித்தொகை விகிதாசாரம் முறையே 75% , 25% மாக இருந்தன. 1960 களுக்கு முன்பு இவ்விரு பிரதேசங்களின் குடித் தொகை விகிதாசாரம் முறையே 85 வீதம் , 15 வீதமாக இருந்தன. 1960 களுக்கு முன்னர் மாகாணத்தின் மொத்த குடித்தொகையின் 85 வீதமானவர்கள் குடாநாட்டில் வாழ்ந்தததால் பல நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டன.

இன்றைய மக்கள் பரம்பலை நோக்கும் இடத்து முன்னைய நிலைப்பாட்டில் மாற்றம் காண வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இன்னும் சிறு காலத்திற்குள் பெரு நிலத்தின் குடித்தொகை குடாநாட்டிலும் பார்க்க கூடலாம் - கூடவும் வேண்டும். அதுவும் குடாநாட்டு மக்களின் பெருநிலம் நோக்கிய இடப்பெயர்வால் ஏற்பட வேண்டும். இச்செயற்பாடுகளுக்கு மாங்குள த்தில் நிர்வாக மையம் அமைவது உந்து சக்தியாக இருக்கும்.

யாழ்ப்பாண குடாநாட்டில் சதுர கிலோ மீற்றருக்கு 505 பேர் வாழ பெரு நிலப்பரப்பில் சதுர கிலோமீற்றருக்கு 61 பேர் வாழ்கின்றனர். இத்தகைய குடியடர்த்தி வேறுபாடு ஏற்புடையதன்று. 2012 பெரிய யாழ்ப்பாணம் உட் பட வலிகாமப் பகுதியில் 417,681 பேர் இருந்தனர். வலிகாமம் 333 சதுர கிலோ மீற்றர் பரப்புடையது. இங்கு சதுர கிலோ மீற்றருக்கு குடியடர்த்தி 1254 பேருக்கு மேலாக உள்ளது. 2012 இல் பெரிய யாழ்ப்பாணத்தில் 118807 பேர் இருந்துள்ளனர். இங்கு சதுர கிலோ மீற் றருக்கு குடியடர்த்தி 2539 பேருக்கு மேலாக இருந்தது.

வலிகாமம் பகுதியில் சிறந்த செம்மண் பிரதேசம் குடியிருப்பு நிலங்களாக மாற்றம் பெறுவது மிகவும் கவலைக்குரியது. மேலும் பாதுகாப்பான குழாய் குடிநீர் வசதி, தரைக்கீழ் கழிவகற்றல் வசதிகளற்ற பெரிய யாழ்ப் பாணத்தில் உயர்வான குடியடர்த்தி பிரச்சினை களை தோற்றுவிக்கும். யாழ்ப்பாண நகரை கரையோரப் பகுதிகள் நிலமற்ற , வீட்டு வசதி களற்ற மக்கள் பெருமளவு நெருக்கடிக் குள் வாழ் கின்றனர். இதனால் வலிகாமம் பகுதி மக்களில் ஒரு பிரிவினரை பெருநிலப்பரப்புக்கு இடம் பெ யர வைக்க வேண்டும். பெருநிலப்பரப்பில் மக்கள் தொகை குறைவாக இருப்பது இப் பிரதேசத்தின் வளர்ச்சிக்கு பெருந்தடையாக இருக்கின்றது. பெருநிலம் 25 ஆற்று வடி நிலங்களை கொண்டது. இவ்வாற்று நில வடிநிலங்கள் நல்ல வளங்களைக் கொண்டிருப்பினும் இன்னும் முழு மையாக விருத்தி செய்யப்படவி ல்லை. கனக ராயன் ஆறு, பாலாறு , பறங்கி ஆறு, அருவியாறு ஆகியன பெரிய வடி நிலங்களைக் கொண்டன. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் I ஒழுங்கு மன்னார் மாவட்டத்திலும் K ஒழுங்கு கனகராயன் ஆற்றுப் பகுதியிலும் L ஒழுங்கு மணலாறு (வெலிஓயா) பகுதியிலும் காணப்படுகின்றன. இதில் மணலாறு (வெலி ஓயா) L ஒழுங்கு மேம் படுத்தப்பட்டு பிற இடங்களில் இருந்து மக்கள் கொண்டு வரப்பட்டு குடியேற்றப் பட்டுள்ள னர். இன்று மணலாறு (வெலிஓயா) தனிப் பிர தேச செயலகமாக உரு வாக்கப்பட்டு 10000 மக் கள் வாழ்வதாக தெரிய வருகின்றது. இங்கு குடியேற்றப்பட்ட மக்கள் யாவரும் தெற்கில் இருந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரு நிலப்பரப்பு நீர்வளமும் நிலவளமும் மற்றும் பல இயற்கை வளங்களும் கொண்டு அபிவிருத்திக்காக காத்து நிற்கின்றது. இந்நிலையில் பெரு நிலப்பரப்பின் விருத்தியும் மாங்குளத்தின் வளர்ச்சியும் ஒன்று தொடர்பு பட்டதாகும். வடமாகாணத்தில் உள்ள பெரிய




நகர்களான யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகியவற்றில் இட அமைவு அவை மாகாணத்தின் நிர்வாக மையமாக அமைவதற்கு சாதகம் இல்லாது இருக்கின்றன.

இந்நகர்கள் மாகாணத்தின் எல்லைகளில் அமைந்துள்ளன. மாங்குளம் வடமாகாணத்தின் மத்தியில் அமைந்திருப்பது நிர்வாக செயற்பாடுகளுக்கு மிகப் பொருத்தமாக உள்ளது. வெள்ளாங்குளம்- முல்லைத்தீவு பெருஞ்சாலையும் ஏ9 பெருஞ்சாலையும் மாங்குளத்தில் சந்திக்கின்றன. மாங்குளத்தில் இருந்து வவுனியா 50 கிலோ மீற்றர் தூரத்திலும் யாழ்ப்பாணம் 99 கிலோ மீற்றர் தூரத்திலும் உள்ளன. இதுபோல மாங்குளத்தில் இருந்து முல்லைத்தீவு 48 கிலோ மீற்றர் தூரமாகவும் வெள்ளாங்குளம் 40 கிலோமீற்றர் தூரமாகவும் அமைந்துள்ளன. மாங்குளத்தின் இடவமைவும் வீதி வலைப்பின்னல் கட்டமைப்பும் அது நிர்வாக மையமாக இருப்பதற்கு மிகவும் பொருத்தமாக உள்ளது. நகர வளர்ச்சிக்கு தேவையான நிலம் குறிப்பாக அரச நிலம் போதியளவு இங்குண்டு. இதனால் உத்தம நிலப் பயன்பாட்டு வலயக்கட்டமைப்பைக் கொண்ட திட்டமிட்ட நகரத்தை இங்கு உருவாக்க முடியும். மேலும் மாங்குளப் பகுதி நிலம் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற நிலமல்ல. இதனால் இந்நிலங்களை குடியிருப்பு மற்றும் கைத்தொழில் துறை வளர்ச்சிக்கு பயன்படுத்தலாம். மேலும் இந்நாள் ஒரு நிர்வாக நகரமாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இந்நகரின் வளர்ச்சி யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி நகர வளர்ச்சியை பாதிக்க மாட்டாது. யாழ்ப்பாணம் கலாசார மையமாகவும் கிளிநொச்சி விவசாய சந்தை நகரமாகவும் வவுனியா , மன்னார், முல்லைத்தீவு ஆகிய நிர்வாக/ கைத்தொழில் நகரமாகவும் விருத்தி பெறும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. மேலும் பூநகரி, புதுக்குடியிருப்பு, முழங்காவில் , மடு , செட்டிக்குளம், முருங்கன், முள்ளியவளை, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி , புதுக்குடியிருப்பு போன்றன சிறு நகர்களாக விருத்தி செய்யப்பட வேண்டும். மாங்குளத்தின் தெரிவுக்கு எதிராக கூறப்படும் காரணங்கள் பின்வருமாறு,

நீர் பற்றாக்குறை, வீட்டு வசதியின்மை, சேவை வசதிகள் பற்றாக்குறை ஆகியனவாகும். நகர வளர்ச்சிக்கு தேவையான நீரை தரை கீழ் நீர்வளத்தில் பெற முடியா தென்பது உண்மை.ஆனால் 15 கிலோ மீற்றர் தூரத்திற்குள் இருக்கும் வவுனிக்குளத்தில் இரு ந்து முதற்கட்ட நகர வளர்ச்சிக்கு தேவை யான நீரைப் பெறலாம். இரண்டாம் கட்ட நகர வளர்ச்சிக்கு நீரை கனகராயன் ஆற்று மேற்படுக்கையில் இருந்து பெற முடியும். இரண்டாம் கட்ட நகர அபிவிருத்தி நிலையில் மகாவலி நீர் வட மத்திய பெரும் வாய்க்கால் வழியாக கனகராயன் ஆற்றை அடை ந்து விடும். இன்றைய பொருளாதார தொழில் நுட்ப வளர்ச்சி நிலையில் வவுனிக்குளத்தில் இருந்து மாங்குளம் நகருக்கு நீர் கொண்டு வருவது கடினமன்று. உதாரணமாக திருகோணமலைக்கு 25 கிலோமீற்றர் தூரத் தில் இருக்கும் கந்தளாய் குளத்தில் இருந்தும் மன்னார் நகரத்திற்கு கட்டுக்கரைக் குளத்தில் இருந்தும் குடி நீர்த் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது என்பதை நாம் அறிவோம்.

வீட்டு வசதிகள் சேவை வசதிகள் என்பன நகர வளர்ச்சியுடன் தொடர்புடையன. நகரம் விருத்தியடைய இவ்வசதிகள் பெருகத் தொடங்கும். ஏற்கனவே ஏ9 வீதியில் கனகராயன் பகுதியில் இருந்து வடக்கு நோக்கி குடியிருப்புக்கள் வளர்ந்து வருவதையும் கிளிநொச்சியில் தெற்கு நோக்கி வளர்ந்து வருவதையும் காணலாம். மேலும் முறிகண்டி, கொக்காவில், மாங்குளம் ஆகிய இடங்களில் குடியிருப்புக்கள் விரிவாக்கம் பெற்றுக் கொண்டிருப்பதையும் காணலாம். இக்குடியிருப்புக்களின் சிறு வளர்ச்சிக்கு மாங்குளம் குறித்த நம்பிக்கையும் முக்கிய பங்களிக்கின்றது.

தொகுத்து நோக்குகையில் மாங்குளம் வடமாகாண நிர்வாக மையமாக அமையும் இடத்து அது வடமாகாணத்தின் சிறந்த இடஞ்சார்பு அபிவிருத்திக்கு வழி வகுக்கும். மேலும் அது ஒரு சிறு வளர்ச்சித் துருவமாக வளர்வதற்கும் வாய்ப்பு ஏற்படும். அந்நிலையம் வீதி , புகையிரத போக்குவரத்து வசதியுடன் வவுனியா, கிளிநொச்சி, விமானப் போக்குவரத்து வசதியையும் கொண்டிருப்பது மாங்குளத்தை தெரிவு செய்வதற்கு காரணமாக உள்ளன. வடமாகாணத்தின் சிறந்த சமூக பொருளாதார பௌதீக வளர்ச்சிக்கு மாங் குளம் நகரின் வளர்ச்சி முக்கிய பங்கு வகிக்க முடியும். சம்பந்தப்பட்டவர்கள் காலதாமதம் செய்யாமல் சாதகமான முடிவை எடுத்து உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாகும்.



பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை
PhD. Durham
முன்னாள் துணைவேந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாத்தியோசி முருகா!

மலையின் உச்சியில் இருக்கிறது முருகன் கோயில். கோயிலுக்கு செல்ல 200 இற்கும் மேற்பட்ட படிகள். படிக்கட்டுக்களின் ஓரங்களில் இளநீர், தேநீர், சந்தனம், சாமிப்படங்கள், பழங்கள், அர்ச்சனைத் தட்டுகள், நெய், தீபங்களை விற்கும் சிறு கடைகள் என வரிசைகட்டி இருந்தன. அந்தக் கடைகளில் ஒன்று முருகவேலின் அப்பாவுடையது. மலை அடிவாரத்தில்தான் வீடு. முருகவேல் எட்டாம் வகுப்பு படிக்கிறான்.

பள்ளிக்கூட நேரம் போக மற்ற நேரங்களில் கடையில்தான் இருப்பான். வரும் பக்தர்களின் வயதுக்கேற்ப அவர்களை முறை வைத்துக் கூப்பிடுவான். அவனை விட வயதில் மூத்த பெண்களை அக்கா என்பான். மிகவும் படித்தவர்களாகத் தெரிந்தால் ஆன்ட்டி என ஆங்கிலத்தில் விளிப்பான். பெரியம்மா என்று சொல்வான். பாட்டி என்ற வார்த்தையை மட்டும் ரொம்ப ஜாக்கிரதையாகப் பயன்படுத்துவான். அது நிறையப் பேருக்குப் பிடிப்பது இல்லை என்பதை முருகவேல் அனுபவத்தில் அறிந்திருந்தான். அன்று மாலை கடையில் இருந்தான். அப்பா வெளியே சென்று இருந்தார். அம்மா மட்டும் இருந்தார்.

அவனது குட்டித் தங்கை பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள். பெண்கள் கூட்டம் வந்தது. வாங்கம்மா வாங்க அர்ச்சனைத்தட்டு வாங்கிட்டுப் போங்க. அம்மனுக்கு சாத்த ரோஜா மாலை இருக்கு. செருப்புகளை இங்கேயே விட்டுட்டுப் போங்கம்மா என்றான் உற்சாகமான குரலில்.

அம்மா முகத்தில் வழக்கமாக இருக்கும் உற்சாகம் இல்லை. என்னம்மா உடம்பு சரியில்லையா? என்றான் முருகவேல். அம்மா ஏதோ நினைவாக இருந்தார். அவன் கேள்விக்கு பதில் சொல்லவில்லை. முருகவேல் அம்மாவின் தோளைத் தொட்டு என்னம்மா ஆச்சு? என்று பரிவுடன் கேட்டான். இங்கே இருக்கிற கடைகளை எல்லாம் காலி பண்ணச்சொல்லி நோட்டீஸ் வந்திருக்கு. என்ன பண்றதுனு தெரியலே... என்றாள் அம்மா. அவள் குரல் வேதனையின் காரணமாக கிணற்றிலிருந்து கேட்பது போல பலவீனமாக ஒலித்தது. அவன் அப்பா வந்ததும் விசாரித்தான்.



நடைபாதைக் கடைகள்ள அப்புறப்படுத்தச் சொல்லி கோயில் நிர்வாகம் நோட்டீஸ் கொடுத்து இருக்கு. இது அவங்க இடம். நாம காலி பண்ணித்தான் ஆகணும். நமக்கு இதை விட்டா வேறு எதுவும் தெரியாது. என்ன செய்றதுனு பார்ப்போம்...என்று உச் கொட்டினார். அன்று இரவு முழுவதும் அப்பா தூங்காமல் புரண்டுகொண்டு இருப்பதை முருகவேல் கவனித்தான். என்ன செய்வது என்று அவனுக்கும் புரியவில்லை. கடவுள் ஒரு கதவை மூடினால் மற்றொரு ஜன்னலைத் திறப்பார் என்று ஆசிரியர் சொன்னது நினைவுக்கு வந்து ஆறுதல் தந்தது.

நீண்ட நேரம்கழித்து அவனை அறியாமல் தூங்கிப்போனான். மறுநாள்... கடைக்காரர்கள் ஆங்காங்கே கூட்டமாக பேசிக்கொண்டு இருந்தனர். பலர் சொந்த ஊருக்குச் செல்ல முடிவு செய்தார்கள். பலர் கடைகளை காலி செய்யும் வேலையில் இறங்கி இருந்தனர். வேறுசிலர் குழப்பத்தோடு சுற்றிச் சுற்றி வந்தனர். சொந்த இடம் இருப்பவர்கள் தங்கள் கடைகளை அங்கே மாற்றிக் கொண்டனர். சொத்தும் இடமும் இல்லாத முருகவேலின் குடும்பம் புரியாமல் தவித்தது. முருகவேல் தன் தமிழ் ஆசிரியரைச் சந்தித்து நெருக்கடியைத் தெரிவித்தான்.

கவலைப்படாதே! தேவைதான் மனிதனின் தாய். பாம்பின் விஷம் மரணத்தைத் தரும். ஆனால் அதே பாம்பின் விஷம் அதற்கு முறிவு மருந்தாகவும் இருக்கு. வாழ்க்கையிலும் பல விடயங்கள் அப்படித்தான். வழக்கமான பாதையிலேயே போகாமல் மாத்தியோசி. எங்கே பிரச்சினை இருக்கிறதோ அங்கேயே தீர்வும் இருக்கும் என்றார்.

இரண்டு நாட்கள் கழிந்தன. மாலை நேரம் நான் கோயிலுக்குப் போயிட்டு வர்றேன் என்று சொல்லிவிட்டு முருகவேல் சென்றான். திரும்பி வரும் வழியில் ஒரு கிளை வழி பிரிந்தது. அந்த வழியிலும் சில சிறுவர்களும், பெரியவர்களும்சென்றனர். அந்தவழியின் கடைசியில் ஒரு மான் பண்ணை இருந்தது. அங்கே குரங்குகளும், மான்களும், முயல்களும் வளர்க்கப்படுகின்றன. மயில், வான்கோழிபோன்றபறவைகளும்கூண்டுகளில் பாதுகாக்கப்படுகின்றன.

கோயிலுக்குச் சென்றுவிட்டு திரும்பும் மக்கள் அந்த மான் பண்ணைக்கும் போவது வழக்கம். அவனும் அன்று மான் பண்ணைக்குப் போனான். ஆர்வம் இல்லாமல் விலங்குகளையும் பறவைகளையும் பார்த்துக்கொண்டு இருந்தான். கம்பி வலைக்கு உள்ளே இருந்த மான்களை சிறுவர் சிறுமியர் கூட்டம் பார்த்து ரசித்துக்கொண்டு இருந்தது. அப்பொழுது ஒரு சிறுமி இந்த மானுக்கு நான் சாக்லேட் கொடுக்கட்டுமா?என்று தன் அம்மாவிடம் கேட்டாள். அதுக்கு சாக்லேட் கொடுக்கக்கூடாது. கேரட், முள்ளங்கி மாதிரி கொடுக்கலாம் என்றாள்.

இங்கேதான் காய்கறிக் கடையே இல்லையே, நாம் வீட்டிலிருந்து கொண்டு வந்தால்தான் ... என்ற சிறுமியின் குரலில் வருத்தம் கலந்த ஏமாற்றம். பளீர் என்று மின்னல் வெட்டியதைப் போல ஒரு எண்ணம் முருகவேலின் மனதிற்குள் வந்தது. வீட்டைநோக்கி ஓடினான். அப்பா படிக்கட்டில்தானே கடை போடக்கூடாது? வேறு எங்காவது போடலாமா? என்றான் முருகவேல் பரபரப்பாக. அவன் கேட்பதைப் புரிந்து கொண்ட அப்பா வேற எங்கே போடுறது? இங்கேதான் ஜனங்க வருவாங்க. அவங்க வந்தாத்தான் வியாபாரம் என்றார் விரத்தியாக.

அப்பா மான் பண்ணைக்குப் போகிற வழியில் கடை போட அனுமதி தருவாங்களானு கேட்டுப் பாருங்களேன் என்றான் முருகவேல். அங்கே அர்ச்சனைத்தட்டும் படங்களும் விற்க முடியுமாடா? கிறுக்குப் பயலே என்றாள் அம்மா.

ஏன் அதையே விற்கனும்? இதுநாள் வரை மனுசங்களுக்கு தேவையானதை விற்றோம். இனி விலங்குகள், பறவைகளுக்குத் தேவையானதை விற்போம். அப்பா அந்த இடத்திலே ஒரு கடை போட்டால் மான் பண்ணைக்கு வருகிறவர்கள்....முள்ளங்கி, கேரட், தக்காளின்னு வாங்கி விலங்குகளுக்குக் கொடுப்பாங்க. அதனால் விலங்குகளுக்குத் தேவையான தீனி கிடைச்சுடும். நமக்கும் வருமானம் வரும். நீங்க போயி அனுமதி கேட்டுப்பாருங்க என்றான். அப்பா யோசனையுடனே சென்றார்.

அரைமணி நேரம் கழித்துத் திரும்பிய போது அவர் முகத்தில் மலர்ச்சி. முருகா அவங்க மான் பண்ணை அருகே காய்கறிக் கடை போட சம்மதம் தந்துட்டாங்க. நல்ல ஐடியா கொடுத்தேப்பா...என்று சொல்லி முருகவேலைதூக்க முடியாமல் கைகளைத் தூக்கிக்கொண்டு கொஞ்சினார். அதைப்பார்த்து குட்டித்தங்கை கூட சிரித்தாள். அப்பா.. நான் குழந்தை இல்லை. எட்டாவது படிக்கிறேன் என்று சொன்ன முருகவேலுக்கு கொஞ்சம் வெட்கமாக இருந்த போதிலும் முகத்தில் பெருமை பொங்கியது.

## 06.2014 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1405 - யோர்க் ஆயர் ரிச்சார்ட் ஸ்க்ரோப், நோர்ஃபோக் இரண்டாம் நிலை மன்னர் தொமஸ் மோபிறே ஆகிய மன்னர்கள் இங்கிலாந்தின் நான்காம் ஹென்றியின் ஆணையின் பேரில் தூக்கிலிடப்பட்டனர்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: டென்னசி அமெரிக்கக் கூட்டில் இருந்து விலகியது.
- 1887 - ஹேர்மன் ஹொலரித் துளையிடும் அட்டை கொண்ட கணிப்பானுக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1929 - ஐக்கிய இராச்சியத்தில் முதற் தடவையாக தொழிற் கட்சி ஆட்சி அமைத்தது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: நேச நாடுகள் சிரியா, மற்றும் லெபனான் மீது தாக்குதலை ஆரம்பித்தன.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பல்கள் அவுஸ்திரேலியாவின் சிட்னி, நியூகாசில் நகரங்கள் மீது குண்டுத்தாக்குதலை நடத்தின.
- 1984 - அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் ஓரினச்சேர்க்கை சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டது.
- 1992 - முதலாவது உலகக் கடல் நாள் கொண்டாடப்பட்டது.
- 1995 - படிவ நிரலாக்க மொழி பி.எச்.பி வெளியிடப்பட்டது.
- 2006 - அல் குவைதாவின் ஈராக்கியத் தலைவர் அபு முசாப் அல்-ஜர்காவி அமெரிக்க விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்டார்.
- 2007 - அட்லாண்டிஸ் விண்கப்பல் 7 பேருடன் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு ஏவப்பட்டது.
- 2007 - இலங்கையில் புத்தளத்தில் 9 உடல்கள் மிகவும சிதைந்த நிலையில் காவற்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டன.

### பிறப்புகள்

- 1867 - பிரான்க் லாய்டு ரைட், (இ. 1959)
- 1874 - சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி, இலங்கையின் முன்னாள் சட்டசபை சபாநாயகர்
- 1921 - சுகார்ட்டோ, இந்தோனேசியாவின் முன்னாள் அரசுத் தலைவர் (இ. 2008)
- 1930 - இர. ந. வீரப்பன், மலேசிய எழுத்தாளர் (இ. 1999)

### இறப்புகள்

- 1845 - ஆன்ட்ரூ ஜாக்சன், ஐக்கிய அமெரிக்காவின் ஏழாவது குடியரசுத் தலைவர் (பி. 1845)
- 1947 - எரிக் ஃப். வீஷாஉஸ், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்



**விசாகம் 4 ஆம் பாதம்,**
**அனுஷம், கேட்டை**
**உச்ச குருவின் பார்வையினால்,**
**உலகம் போற்றும்**
**வாழ்வமையும்!**

**90/100**

**இலட்சங்களைக் காட்டிலும் இலட்சியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் விருச்சிக இராசி நேயர்களே!**

வந்துவிட்டது குருப்பெயர்ச்சி. வைகாசி 30 முதல் வசந்த காலம் உருவாகப்போகிறது. குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் இன்றுமுதல் உங்களுக்கு யோகம்தான்.

குரு பார்க்க கோடி நன்மை என்ற பழமொழிக்கேற்ப அதன் அருட்பார்வை 5 ஆம் பார்வையாக பதிவதால் மிஞ்சும் பலன் கிடைக்கும். ஆசைகள் அரங்கேறும். அரசியல்வாதிகளால் நன்மை கிடைக்கும். குரு உங்கள் இராசிக்கு 2,5 க்கு அதிபதியாவார். தன் பாக்யாதிபதியாக விளங்கும் குரு உச்சம் பெற்று உங்கள் இராசியையே பார்க்கப்போகிறார். எனவே, உடல் ஆரோக்கியமும் சீராகும். ஒவ்வொரு நாளும் நல்ல தகவல்கள் இல்லம் தேடி வந்துகொண்டேயிருக்கும். நீங்கள் தொட்டதெல்லாம் வெற்றியைக் கொண்டு வந்து சேர்க்கும்.

**சாதனை நிகழ்த்தி சரித்திரத்தில் இடம்பெறுபவர் நீங்கள்!**

எதையும் வெளிப்படையாகப் பேசுபவர்கள் நீங்கள். மிகுந்த தெய்வ பக்தி உங்களுக்கு உண்டு. பேச்சால் கவர்ந்திழுக்கும் நீங்கள், பிறருக்கு யோசனை சொல்வதிலும் அசகாய சூரர்கள். இளமையான காலத்திலேயே உங்கள் எண்ணங்களெல்லாம் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துப்பெற்று, சகல வசதியோடும் வாழவேண்டும் என்பதுதான்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி தரும் பலன்கள் பற்றிப் பார்ப்போம்.

பொதுவாக 9 இல் சஞ்சரிக்கும் குருபொன், பொருட்களை அள்ளி வழங்கும். புகழைக் கூட்டும். அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். அரசியல் செல்வாக்கு மேலோங்கும். வம்பு, வழக்குகளிலிருந்து விடுபட்டு வரலாற்றின் பொன்னேட்டில் உங்கள் பெயர் இடம்பெறும் விதத்தில் அமையுமென்று சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன.

**ஒன்பதில் குருவும் வந்தால்,**
**ஒப்பற்ற வாழ்க்கை சேரும்!**
**பொன், பொருள் அதிகரிக்கும்!**
**பூமியால் லாபம் கிட்டும்!**
**நண்பர்களின் ஒத்துழைப்பால்,**
**நலன் யாவும் வந்துகூடும்!**

## உச்ச குருவின் பார்வையினால், உலகம் போற்றும் வாழ்வமையும்!

**இன்பத்தில் எல்லை காண**
**இறையருள் கைகொடுக்கும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

எனவே 9 இல் வந்த குரு உங்கள் உன்னத வாழ்விற்கு அடித்தளமிடப்போகிறது. தன ஸ்தானத்திற்கும், ஐந்தாமிடத்திற்கும் அதிபதியான குரு பகவான் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும்பொழுது ஐந்தும் ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும் என்பதற்கேற்ப பொருளாதார நிலை உயர்ந்துகொண்டே போகும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்வுகள் ஒவ்வொன்றாக நடைபெற வழி பிறக்கும்.

குருவின் பலம் கூடுதலாக இருக்கும் இந்த நேரத்தில் நூதனப்பொருள் சேர்க்கையும், மனைகட்டிக் குடியேறும் வாய்ப்பும், புதிய சொகுசு வாகனங்கள் வாங்கும் வாய்ப்பும் உருவாகும். புதிய கிளைத் தொழில்கள் தொடங்கவும் முன்வருவீர்கள். பிள்ளைகளின் திருமணக் கனவுகளை நனவாக்குவதோடு அதன் எதிர்கால நலன்கருதி வெளிநாட்டு முயற்சி மற்றும் வேலை வாய்ப்பு முயற்சிகளிலும் அனுகூலம் ஏற்படும்.

மேலும் நன்மைகள் வந்து குவிய தென்முகக் கடவுளாக விளங்கும் குரு தட்சணா மூர்த்தியின் சந்நிதியில் நின்று குரு கவசம் பாடி குருவே நீ பார்த்தால் போதும்; கோடியாய் நன்மை சேரும் என்று சொல்லிச் செல்வச் செழிப்போடு வழிபாடு செய்து வாருங்கள். கோடி நன்மைகள் உங்களைத் தேடி வந்து சேரும்.

**வெற்றி தரும் வியாழனின் பார்வை!**

குரு உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது அதன் புனிதப் பார்வை உங்கள் ஜென்ம இராசியிலும் மூன்றாமிடத்திலும் ஐந்தாமிடத்திலும் பதிவாகிறது. எனவே, உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பொன், பொருளும் போற்றுகிற செல்வாக்கும் இன்னும் பெருகி இயல்பாக வளம் கிடைக்கும்.

**ஜென்மத்தை குருதான் பார்த்தால்,**
**செல்வாக்கு அதிகரிக்கும்!**
**மூன்றினைக் குருதான் பார்த்தால்,**
**முன்னேற்றம் வந்து சேரும்!**
**ஐந்தினைக் குருதான் பார்த்தால்**
**அனைத்துமே வெற்றியாகும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது வாழ்க்கையில் வளர்ச்சி மீது வளர்ச்சியைக் காணப்போகிறீர்கள். வருமானம் திருப்திகரமாக இருக்கும். நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள, நேசக்கரம் நீட்ட உறவினர்கள் முன்வருவர். நீண்டநாள் நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளுக்கு அவர்களின் ஒத்துழைப்பு

## விருச்சிகம்



கிடைக்கும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். பூர்வீக சொத்துக்களில் எதிர்பார்த்தபடியே பாகப்பிரிவினைகளில் முறையான பங்கீடு கிடைக்கவில்லையே என்ற கவலை இனி அகலும்.

வாக்கு பலிதத்தால் வளர்ச்சி காண்பீர்கள். கனவுகள் மூலமும் உங்களுக்கு முன்னதாகவே நடக்கும் காரியங்கள் தெளிவாகத் தெரியும். அப்படிக் கனவில் கண்டவைகள் எல்லாம் நனவாகப்போகிறது. வழக்குகளில் வெற்றி கிடைக்கும். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்துசேரும். அரசு வழிச் சலுகைகளை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு அதுவும் கைகூடும்.

கல்வித்துறை, கலைத்துறை, பத்திரிகை, எழுத்துத்துறை, ஆன்மிகம், ஜோதிடம் சம்பந்தப்பட்ட துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அதிகமான நற்பலன்கள் கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும் இந்த நேரத்தில் பிள்ளைகளின் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். குருவின் பார்வை புத்திர ஸ்தானம், பூர்வ புண்ணிய ஸ்தானம் எனப்படும் இடத்தில் பதிவதால் பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் பெருகும். அவர்கள் கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். வெளிநாட்டில் படிக்க வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டவர்கள் அதற்காகச் செய்த ஏற்பாடுகள் வெற்றிகரமாக அமையும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

**சஞ்சாரப் பலன்கள்**

குரு தன் சுயசாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (13.06.2014 முதல் 28.06.2014 வரை):- இது மிகுந்த யோகமான நேரமாகும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். நீண்டநாள் ஆசை நிறைவேறும். குடும்ப வருமானம் அதிகரிக்கும். கொடுக்கல்- வாங்கல்களில் முன்னேற்றம் ஏற்படும். மனதில் தெம்பும் உற்சாகமும் பிறக்க பணிபுரியத் தொடங்குவீர்கள். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். விருந்து, உபசாரங்களில் கலந்துகொண்டு மகிழ்வீர்கள். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும்.

குரு சனி சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (29.06.2014 முதல் 27.08.2014 வரை) :- உடல் நலமும், மனநலமும் மகிழ்ச்சியாக இருக்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் செயற்பாடுகளுக்கு உறுதுணை புரிவர். வெளி வட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். பயணங்கள் பலன் தரும். கட்டடப்பணி தொடரும். காரிய வெற்றிக்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்புச் செய்வர்.

குரு புதன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (28.08.2014 முதல் 02.12.2014 வரை):- புதன் உங்கள் இராசிக்கு 8,11 க்கு அதிபதியாவார். எனவே, வரவும் செலவும் சமமாகவே இருக்கும். எந்த ஒரு காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள். தொழிலில் ஒருசிலர் இடமாற்றம், ஊர் மாற்றம் செய்ய விரும்புவர்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. தேவையான இடத்திற்கு மாறுதல்கள் கிடைக்கலாம். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப்பொருட்கள் வரை வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள். இக்காலத்தில் திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை செய்வது நல்லது.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

பௌர்ணமி தோறும் கிரிவலம் வருவது நல்லது. செவ்வாய்க்கிழமை சிவாலயம் சென்று விநாயகப் பெருமான், முருகப் பெருமான், சிவபெருமான், நந்தியெம்பெருமான், குரு பகவான், சனி பகவான் ஆகியவற்றை வழிபாடு செய்யுங்கள்.

யோக பலம் பெற்ற நாளில் கற்பக விநாயகரை கைதொழுது வழிபட்டால் அற்புதப் பலன்களை வரவழைத்துக் கொள்ளலாம்.

**விருச்சிக இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்கு குதூகலம் தரும் விதத்தில் அமைகிறது. நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் உருவாகும். சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்துசேரும். வருமானம் திருப்திகரமாக இருக்கும், கணவன்- மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். மன அமைதியோடு வாழ வழி கிடைக்கும். மக்கட்செல்வங்களால் மேன்மை உண்டு. பிள்ளைகளுக்கு நல்ல இடத்திலிருந்து வரன்கள் வந்துசேரும். அவர்களுக்கு வேலை கிடைத்து அதன் மூலமாகவும் உதிரிவருமானங்கள் உங்களுக்கு கிடைக்கலாம். உத்தியோகத்தில் உள்ள பெண்களுக்கு உயர் பதவி கிட்டும். வீடு வாங்கும் ஆசை நிறைவேறும். திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபடுவதோடு திசாபுத்திக்கேற்ப தெய்வ வழிபாடுகளையும் தேர்ந்தெடுத்துச் செய்தால் தித்திக்கும் விதத்தில் வாழ்க்கை அமையும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்**

குருபகவான் 03.12.2014 முதல் 21.12.2014 வரை மக நட்சத்திரக் காலில் அதிசாரமாகச் செல்கிறார். டிசம்பர் 17 முதல் சிம்மத்தில் வக்ர கதியில் இருக்கிறார். தொடர்ந்து 14.04.2015 வரை வக்ர கதியிலேயே சஞ்சரிக்கிறார். இந்த வக்ர காலத்தில் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது. உறவினர்களையும் நண்பர்களையும் நம்பி செயற்பட்ட காரியங்கள் உங்களிடமே மீண்டும் வந்து சேரலாம். குடும்ப சுமை கூடும். எதிலும் முன்யோசனையுடன் செய்தால் முன்னேற்றம் கிடைக்கும்.

நாளை தனுசு......

**ஜோதிடக் கலைமணி**
**சிவல்புரி சிங்காரம்**



**குருப் பெயர்ச்சி நேர ஜாதகம்**

| | | | |
|---|---|---|---|
| | சுக்ரன் கேது | சூரியன் புதன் (வ) | |
| | குருப்பெயர்ச்சி 13-6-2014 | | வியாழன் |
| | | | |
| சந்திரன் | | சனி (வ) ராகு | செவ்வாய் |

***சுப ஸ்ரீ ஜய வருடம் வைகாசி மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (13.06.2014) மாலை 6.03 மணிக்கு புனர்பூசம் நட்சத்திரம் நான்காம் பாதத்தில் கடக இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கிறார். இந்த வீடு குருவிற்கு உச்ச வீடாகும்.***

குருவின் வக்ர காலம்

➤**13.06.2014 முதல் 28.06.2014 வரை புனர்பூசம் 4 இல் நட்சத்திரக் காலில் குரு. (தனது சாரம்)**

➤**29.06.2014 முதல் 27.08 2014 வரை பூசம் நட்சத்திரக்காலில் குரு. (சனி சாரம்)**

➤**28.08.2014 முதல் 02. 12.2014 வரை ஆயிலியம் நட்சத்திரக் காலில் குரு. (புதன் சாரம்)**

➤**03.12.2014 முதல் 21.12.2014 வரை மகம் நட்சத்திரக் காலில் குரு அதிசாரமாக செல்கிறார்.**

➤**17.12.2014 முதல் 21.12.2014 வரை கேது சாரத்தில் குரு வக்ர கதி.**

➤**22.12.2014 முதல் 14.04.2015 வரை ஆயிலியம் நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் வக்ர கதியில் குரு செல்கிறார்.**

➤**15.04.2015 முதல் 04.07.2015 வரை ஆயிலியம் நட்சத்திரம் புதன் சாரத்தில் நேர் கதியில் குரு செல்கிறார்.**

➤**05.07.2015 அன்று குரு சிம்ம இராசியில் பிரவேசிக்கிறார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வனப்பகுதியை உருவாக்கி மரக்கன்றுகள் நடும் செயற்பாடு ஆரம்பம்

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



**(கொழும்பு)**

***சுற்றாடல் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 2020 இற்குள் 3 இலட்சத்து 50 ஆயிரம் ஹெக்டேயர் புதிய காடுகளை உருவாக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.***

உலக சுற்றாடல் தினத்தையொட்டிய தேசிய நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கொழும்பு ரோயல் கல்லூரியில் நடைபெற்றது. இங்கு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நாடளாவிய அனைத்துப் பாடசாலைகளிலும் சுற்றாடல் பாதுகாப்புக் குழுக்களை ஏற்படுத்தி செயற்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் இத்திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"காலநிலை மாற்றங்களிலிருந்து தீவு நாடுகளைப் பாதுகாப்பது" என்பதே இம்முறை உலக சுற்றாடல் தினப் தொனிப்பொருளாகும். இது எமது நாட்டிற்கு நூறு வீதம் பொருத்தமான தொனியாகும்.

காலநிலை மாற்றங்களை நாம் அனுபவித்து வருகின்றோம். எமது நாடும் ஒரு தீவு நாடு என்பதே இதில் முக்கியமானது.

பூமியின் உஷ்ண நிலை அதிகரிப்பது, இதனால் நீர்நிலைகளில் மாற்றங்கள் ஏற்படுவது. கடல் வலயப் பகுதிகளில் நீர் அதிகமாக வெளியேறுவது போன்றவற்றைப் குறிப்பிட முடியும். இப்போதும் கூட காலநிலை மாற்றத்திற்கேற்பவே மழைவீழ்ச்சி இடம்பெறுகின்றது. இது தற்போது மாற்றமடைந்துள்ளமையும் குறிப்பிட வேண்டும்.

இயற்கை அனர்த்தம், வளங்களின் அழிவு. உயிர்ச் சேதங்கள் இதன பிரதிபலிப்புகளாகும். உலக நாடுகளின் பொருளாதாரத்திலும் காலநிலை மாற்றங்கள் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன.

இந்த நிலைமையை கட்டுப்படுத்தி எதிர்கால சந்ததிக்கு சிறந்த சுற்றாடலை பாதுகாத்து வழங்குவது எமது பொறுப்பாகும். இது தொடர்பில் நாம் பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளோம். சுற்றாடல் அமைச்சு அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களும் பெருமளவு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இன்று எமக்குள்ள வனப்பகுதி 29.7 வீதமாகும். இதனை 2020 இல் 35 வீதமாக அதிகரிப்பதே எமது இலக்காகும். பசுமை இலங்கையை கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் இச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும்.

இதற்கிணங்க 2020 இற்குள் 3 இலட்சத்து 50 ஆயிரம் ஹெக்டேயரில் புதிய வனத்தை உருவாக்குவது இந்த செயற்றிட்டத்தின் நோக்கமாகும். இதற்கான மரக்கன்றுகளை நடும் செயற்பாடுகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்படுகின்றன.

அதேபோன்று மாணிக்க கற்கள், ஆபரணங்கள் அதிகாரசபை 200 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தையும் ஆரம்பித்துள்ளது.

அமைச்சரவை கூட்டத்தில் சுற்றாடல் அமைச்சின் அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன் மூலம் நாட்டில் சகல பாடசாலைகளிலும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான செயற் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இதன்மூலம் பாடசாலை மட்டத்திலும் சமூக மட்டத்திலும் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (2)

## விபூசிகா மீதான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட சிறுமி விபூசிகாவும் அவருடைய தாயாரும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்த நிலையில் சிறுமி விபூசிகா மற்றும் அவரது தாயாரும் இம்மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய ஒருவருக்கு அடைக்கலம் வழங்கிய சம்பவம் தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் இதுவரையில் சமர்ப்பிக்கப்படாதுள்ள தடுத்து வைக்கும் உத்தரவினை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

எனினும் நேற்று முன்தினம் வழக்கிற்கு நீதிபதி சமுகமளிக்காமையால் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நீதிபதி சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும் இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 27 ஆம் திகதி மீண்டும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# மலையக பிரதேசத்தில் புதிய விமான நிலையம்

கண்டி திகன பிரதேசத்தில் ஓடுபாதையுடனான விமானத்தளம் ஒன்று அமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருவதாக விமானப்படையின் பேச்சாளர் வின்ங் கொமாண்டர் கிஹான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டியிலுள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு ஊடக மையத்தில் அதன் பணிப்பாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தலைமையில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோது விமானப் படை பேச்சாளர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து விளக்கமளிக்கையில்,

இலங்கையின் கரையோரப் பகுதிகளை உள்ளடக்கியதாகவே விமானத் தளங்கள் அனைத்தும் உள்ளன. மலையக பிரதேசத்தில் இதுவரை எந்தவெரு விமானத்தளமும் கிடையாது. இந்தக் குறையை நிவர்த்தி செய்து மலையகப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடனேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையில் மொத்தமாக 15 விமானத்தளங்கள் உள்ளன அவற்றுள் வவுனியா மற்றும் பலாலியை தவிர்ந்த ஏனைய 13 தளங்களுக்கும் விமானப்படையின் விமானங்களுக்கு மேலதிகமாக பொது மக்களின் நலன் கருதி தனியார் விமான சேவைகளும் இடம்பெற்று வருகின்றன.

சிவில் விமான சேவைகள் ஊடாக உள்ளூர் விமான சேவைகளை மேம்படுத்தி பொது மக்களுக்கும் சுற்றுலா பயணிகளுக்கும் நன்மையளிக்கும் நோக்குடன் விமானத் தளங்கள் விஸ்தரிக்கப்பட்டும் புதிதாக உருவாக்கப்பட்டும் வருகிறது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை, விமான ஓடுபாதை உட்பட நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வருவதுடன் விமானப் படை முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றன. அதன்ஓர் அங்கமாகவே திகனயில் விமானத் தளத்தை அமைக்கும் பணிகளை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்.

எம் ஏ. 60 ரக விமானங்களை தரையிறக்கும் வகையிலேயே ஆயிரத்து 200 மீற்றர் நீளமான விமான ஓடுபாதை திகனயில் அமைக்கப்பட்டு வருகிறது. அதேபோன்றே மட்டக்களப்பு விமானத் தளமும் விஸ்தரிக்கப்பட்டு வருவதுடன் இவ்வாண்டு செப்டெம்பர் மாதமளவில் திறந்து வைக்கப்படவுள்ளது. இதன்மூலம் மட்டக்களப்பு மற்றும் பாசிக்குடா பிரதேசத்திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள் பெரிதும் நன்மையடையவுள்ளனர்.

அரசுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதுடன் பொதுமக்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே எமது பிரதான நோக்கமாகும் என்று விமரனப் படைப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (2)

# சட்டம், ஒழுங்கு குறித்து மக்களுக்கு சட்டத்தரணிகள் தெளிவுபடுத்துவர்

(கொழும்பு)

நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மக்களுக்கு விளக்கம் அளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாடு முழுவதிலும் இந்த மக்களை தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டம் ஒழுங்குப் பிரிவு தலைவர் லால் விஜயநாயக்க தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்தும் திருப்தி அடைய முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ருஹுணு பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போது பொலிஸார் நடந்து கொண்ட விதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார். அரசியல்வாதிகள் குற்றச் செயல்களில் ஈடுபடும் போது பொலிஸார் வெறுமனே வேடிக்கை பார்த்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (2)





***கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் 2012-2014 கல்வியாண்டு ஆசிரிய மாணவர்களின் வெளியீடாக மலர்ந்த கலைமலர் சஞ்சிகையின் வெளியிட்டு விழா அண்மையில் கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது நூலின் சிறப்புப் பிரதியை விரிவுரையாளர் குழுமத் தலைவர் சி.குணசீலன் வெளியிட்டு வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



**64** தென்னை மரங்களும் கருவேல மரங்களும் காவல் காக்கும் அந்த ஓடை மணல் வெளியில் யார் எனக்கு ஆங்கிலத்தில் கையொப்பமிட முதன் முதலாய் கற்றுத் தந்தவரோ, யார் சின்ன வயசிலேயே சென்னையைப் பற்றிய சிங்காரக் கனவுகளை என் மனதில் விதவிதமாய் விதைத்து விட்டவரோ, 'அதோ அதுதான் கடல்' என்று சமுத்திரத்தை ஆட்காட்டி விரல் காட்டி யார் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தவரோ அவர்தான் என் மாமா 'இருளாண்டி' என்கிற 'மோகன்.'

மோகன் என்பது அவர் மாற்றிக் கொண்ட பெயர்.

இருளாண்டி என்பதுதான் இயற்பெயர்.

எங்கள் குடும்பத்தில் முன்னவர்கள் வைத்த பெயரை முறியடித்து மாற்றிக் கொண்ட முதல் மனிதர் அவர்தான்.

ஒரு வகையில் அதுசரிதான்.

விவரம் தெரிந்த பிறகு சொந்த அளவுக்குச் சட்டை தைத்துக்கொள்கிற நமக்கு சொந்த ரசனைக்குப் பெயர் வைத்துக் கொள்ளக்கூடவா உரிமையில்லை?

ஒருவகையில் சரிதான்.

ஆனால் எனக்கு மோகன் என்ற பெயரில் மோகம் இல்லை. எனக்குக்கிக் இருளாண்டிதான்.

மதிப்பு, பாசம், சோகம், கோபம் இந்த நான்கு கால்களால் செய்யப்பட்ட நாற்காலி ஒன்றை அவருக்கு என் இதயத்திற்குள் இட்டிருக்கிறேன்.

முதன் முதலில் எங்கள் கூரைகளின் மீது தேவர்களைப் பூமாரி பொழிய வைத்தவர் அவர்தான்.

ஏனென்றால் அவர்தான் எங்கள் குடும்பத்தின் முதல் எஸ்.எஸ்.எல்.சி.

வேப்பங்குச்சிகளையும் கருவேலங்குச்சிகளையும் வாயிலே போட்டு மென்று கொண்டு கஞ்சிப்பொழுது வருகிற வரைக்கும் பல் துலக்கிக் கொண்டிருக்கும் பாமர மக்கள் மிகுந்த அந்தப் பட்டிக்காட்டில் ருத் பிரஷ்ஷையும் பேஸ்ட்டையும் முதன் முதலில் உள்ளே கொண்டு வந்து நகர நாகரிகத்தை ஊருக்குள் ஊடுருவ வைத்தவர் அவர்தான்.

இந்த மனிதன் எப்படிப்பட்ட ஒரு கலாசாரப் பின்னணியிலிருந்து பிறந்து வந்திருக்கிறான் என்று எண்ணுகிறபோதுதான் சோகம் ஒரு கண்ணில்- சந்தோஷம் ஒரு கண்ணில் சொட்டுகின்றன என்னில்.

எவ்வளவுதான் ஊற்றி ஊற்றிக் குளித்தாலும் காது மடல்களின் ஓர் ஓரத்தில் ஒட்டியிருக்கும் சோப்பு நுரை மாதிரி எவ்வளவு காலங்கள் கடந்தாலும் கிராமத்தில் வாழ்க்கையின் பழைய கலாசாரப் படங்கள் அடிமனத்துச் சித்திரங்களாய் அப்பிக் கிடக்கின்றன.

ஒருவன் மரணப்படுக்கையில் இமைப்பது மாதிரியான ஒரு லாந்தர்; லாந்தருக்குப் பத்தடி தூரத்தில் கட்டிக் கிடக்கும் பசுமாடு; திண்ணையோரமாய்க் கட்டி வைத்த அகத்திக்கீரையை அசைபோடும் வெள்ளாடு; மடக்கலாமே தவிரச் சுருட்ட முடியாத முரட்டுக் கோரைப்பாய்; கேழ்வரகு உமி அடைத்த தலையணை; கம்பிகளில் தூக்கிலிடப்பட்டிருக்கும் சோகக் கடிதங்கள்; தாழ்வாரத்தில் செருகி வைக்கப்பட்டிருக்கும் தினத்தந்திகள்; குதிர் மீது கோபுரம் கட்டிருக்கும் மண்பானை வரிசைகள்; சேமித்து வைத்திருக்கும் சில்லறைகளின் பாதுகாப்புப் பெட்டகங்களாய் மண்பானைக்குள் தானியங்கள்; நகரங்களோடு பாலங்களாலும் காலங்களாலும் இணைக்கப்படாத பட்டிக்காடு- இப்படிப்பட்ட பின்னணியிலிருந்தும், இப்படிப்பட்ட பிரதேசத்திலிருந்தும் புறப்பட்டு, தேனியில் படித்து, மதுரையில் முடித்து, சென்னையைப் பிடித்து ஒரு மனிதன் நின்றிருக்கிறான் என்றால் பாமரக் கண்கள் விரியுமா? விரியாதா?




**-வைரமுத்து-** (தொடரும்)

# இளைஞர்கள் அரசு வழங்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்த வேண்டும்- நாமல் ராஜபக்ஷ எம்.பி

(கொழும்பு)

சில அரசியல்வாதிகளுக்கு தேர்தல் காலத்தில்தான் இளைஞர்களை ஞாபகத்திற்கு வருகின்றது. இன்னும் சில அரசியல் வாதிகளுக்கு நாட்டையும் சமூகத்தையும் குழப்பவே இளைஞர்கள் தேவைப்படுகிறார்கள். ஆனால், இளைஞர்களை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தி உலகுக்கு ஏற்றவாறு உருவாக்க எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கேகாலையில் சுவர்ண ஜயந்தி வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் கலந்து கொணடு உரையாற்றிய போதே அவர் மேற கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டின் அபிவிருத்திக்காக இளைஞர களின் பங்களிப்பை பெற்று நாட்டை கட்டியெழுப்புவதுடன் இளைஞர் சமுதாயத்தை குவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவது மிகவும் குறைவு. ஆனால், எமது நாட்டு இளைஞர்களுக்கு அவ்வாறான சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டுள்ளது. இன்று நாட்டில் யுத்தமோ, பயஙகரவாதமோ கிடையாது. அதற்குப் பதிலாக கட்டியெழுப்பப்படும் நாடொன்றே உங்களுக்கு கிடைத்துள்ளது. அவ்வாறு கட்டியெழுப ப்பபடும் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பது இளைஞர்களின் பொறுப்பாகும்.

இளைஞர்களின் எழுச்சிமிக்க உணர்வை சிலர் நாட்டின் முன்னேற்றத்திற்கு அன்றி நாட்டை வீழ்த்தவே பயன்படுத்துகிறார்கள். எகிப்து முதல் உக்ரைன் வரை பல நாடுகளின் வீழ்ச்சிக்கு இளைஞர்களின் எழுச்சிமிக்க உணர்வை சிலர் தந்திரமாக பயன்படுத்துகிறார்கள்.

வழ்ச்சியடைந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு பதிலாக கட்டியெழுப்பப்பட்ட நாட்டை வீழ்த்துவதற்கு இவ்வாறான சக்திகள் இளைஞர்களை பயன்படுத்துகிறது.

இன்று இளைஞர்களுக்கு உரிய சந்தர்ப்பம் வழங்கும் அரசாங்கமே உருவாகியுள்ளது. அதனைப் பயனபடுத்திக் கொளவது இளைஞர்களின் பொறுப்பாகும்.

இதற்காக எம்மால் உகந்த சூழலையே ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்று கூறினார். (2)

# 17 ஆயிரம் குழந்தைகளுக்கு பிறப்புச்சான்றிதழ் இல்லை

## தகவலில் சுட்டிக்காட்டு

இந்தியாவில் பிறந்த சுமார் 17ஆயிரம் இலங்கை பிள்ளைகள் உரிய பதிவுகள் இன்றி நாடற்ற நிலையில் உள்ளதாக த ஹிந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இந்தியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் இவர்களுக்கு உதவ முன் வந் துள்ளதாக தெரிவிக்கப்பட்டுளளது.

ஈழம் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் நிறுவுநர் சந்திரஹாசன் இது தொடர்பில் வெளியிட்டுள்ள தகவலில் கூறியிருப்பதாவது,

குறித்த பிள்ளைகளை பதிவு செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட நடமாடும் சேவையை தமிழக அரசாங்கம் நிறுத்தியமையை அடுத்து இந்த விடயம் கிடப்பில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பிள்ளைகளுக்கு பிறப்புச சான்றிதழ்களை பெற்றுக் கொளவதற்கு அவர்களின் பெற்றோரகளுக்கு பிறப்பு சான்றிதழ்கள் தேவை.

எனினும் பெரும்பாலான பெற்றோருக்கு பிறப்பு சான்றிதழ்கள் இல்லை என்றும் சந்திரஹாசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழகத்தில் தற்போது 25 மாவடடங்களில் உள்ள 110 முகாம்களில் 66 ஆயிரம் இலங்கை தமிழ் அகதிகள் வசித்து வருகின்றனர். இதனை தவிர 34ஆயிரம் அகதிகள் முகாம்களுக்கு வெளியில் வசிக்கினறனர்.

போராளிகள் என்று கருதப் படுவோர் விசேட முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

# வடபகுதி மக்களுக்கு வீடுகளை நிர்மாணிக்க பாகிஸ்தான் நிதியுதவி

## இலங்கைக்கான பாக்.உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

வடபகுதி மக்களின் வீடில்லாத பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் முகமாக பாகிஸ்தான் அரசு முதற் கட்டமாக 130 மில்லியன் ரூபா செலவில் வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்திருப்பதாக இலங்கைக்கான பாக். உயர்ஸ்தானிகர் காஸிம் குரைஸ் தெரிவித்துள் ளார்.

இலங்கை மாணவர்களுள் ஆயிரம் பேருக்கு புல மைப் பரிசில்கள் வழங்கும் திட்டத்தின் கீழ்கடந்த 5 ஆம் திகதி கண்டி ஜின்னா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம் பெற்ற பரிசில்கள் வழங்கி வைக்கும் விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே உயர்ஸ்தானிகர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்த நிகழ்வில் க. பொ. த. சாதாரண தரம் மற்றும் உயர் தரத்தில் சிறந்த முறையில் சித்திபெற்ற சகல மாவட்டங்களையும் சேர்ந்த 70 மாணவர்களுக்கு தலா 24 ஆயிரம் ரொக்கப் பணமும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த வைபவத்தில் உயர்ஸ்தானிகர் தொடர்ந்து கூறியதாவது,

பாக். இலங்கை ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவை வலுப்படுத்தும் நோக்குடன் பாகிஸ்தான் அரசு இலங்கைக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகின்றது. அதன் ஒரு கட்டமாக இன்னும் ஓரிரு மாத காலத்துக்குள் முதற்கட்டமாக 130 மில்லியன் ரூபா செலவில் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கவுளளோம்.

அதுபோன்று கடந்த 2005ஆம் ஆண்டு முதல் புலமை பரிசில் திட்டத்தின் வேலையற்றோர்களுக்கு தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கும் வகையில் கணனி பயிற்சி, தையல் பயிற்சி போன்ற நிலையங்களை அமைத்து பயிற்சிகளை வழங்கி வருகின்றோம்.

மேலும் சுகாதார மேம்பாடுகளுககாக வைத்தியசாலைக்கு நோயாளர் காவுவண்டியும் வழங்கப் பட்டுள்ளது.

மேலும் இலங்கையில் இந்த முறையில் தமது கல்வியை மேற் கொண்டும் மாணவர்களினது கல்வி மேம்பாட்டை கருதி ஆயிரம் மாணவிகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்கும் வகையில் பல மில்லியன் ரூபா நிதியை 'பாகிஸ்தான் ஒதுக்கியுள்ளது என்றும் உயர்ஸ்தானிகர் தெரிவித்தார். (2)

## இலங்கை மாணவர்கள் நால்வர் மீட்பு

ரஷ்ய ஆதரவு படைகளுக்கும் உக்ரைன் படையினருக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் கிழக்கு உக்ரைனில் இருந்து நான்கு இலங்கை மாணவர்களை இந்திய அதிகாரிகள் மீட்டுள்ளனர என இந்திய வெளியுறவு பேச்சாளர் சயீட் அக்பர்டீன் தெரிவித்துள்ளார்.

இந்த பிரதேசத்தில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஆயிரத்திற்கு அதிகமான இந்திய மாணவர்கள் அங்கிருந்து மீட்கப்பட்டனர். இலங்கை மாணவர்களை தவிர நேபாளம், பூட்டான், பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவு ஆகிய நாடுகளின் மாணவர்களும் அகற்றப்பட்டதாக அக்பர்டீன் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரைப் பாதுகாக்க அரசாங்கம் முனைவது ஏன்?



வெலிவேரியவில் சுத்தமான குடிநீருக்காக போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்ட, பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன, துருக்கியில் உள்ள இலங்கைத் தூதரகத்தில், இராணுவ ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளதற்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவிடம் இருந்து மட்டுமின்றி வேறும் சில கட்சிகளும், அரசியல் தலைவர்களும் இதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். கடந்த ஆண்டு வெலிவேரியவில் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவத்தில் இரண்டு மாணவர்கள் உள்ளிட்ட மூன்று பேர் கொல்லப்பட்டதுடன் 37 பொது மக்கள் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் அரசாங்கத்துக்கு கடும் கண்டனங்களை ஏற்படுத்தியிருந்தது.

அமெரிக்கா போன்ற நாடுகள் இதனைக் கண்டித்திருந்ததுடன் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கைகளிலும் தீர்மானத்திலும் கூட இது குறித்து விமர்சிக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்துக்குப் பொறுப்பானவர்களை நீதியின்முன் நிறுத்த வேண்டும் என்று சர்வதேச அளவில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்ட போதிலும் இதுவரை அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படவில்லை. வடக்கில் மட்டுமின்றி தெற்கிலும் கூட, இலங்கை இராணுவம், ஒரே மாதிரித்தான் நடந்து கொள்ளும் என்பதை- 1989 இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட ஜே.வி.பி. கிளர்ச்சிக்குப் பின்னர், தென்னிலங்கை மக்களுக்கு நிரூபித்த சம்பவம் அது. இதற்கு தெற்கில் கடும் எதிர்ப்புக் கிளம்பியதையடுத்து, அப்போது 14-2 ஆவது பிரிகேட் தளபதியாக இருந்த பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன, அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, தனது படைப் பிரிவுத் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

நீதிமன்ற விசாரணைகளுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக இராணுவத் தலைமையகம் கூறியிருந்தது. அதாவது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதில் தவறில்லை என்பதே இராணுவத் தரப்பின் நியாயமாக இருந்தது.

இப்போது பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன, துருக்கிக்கான இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இதனை அரசாங்கம் இரகசியமாகவே செய்த போதும் ஊடகங்கள் வெளிச்சத்துக்கு கொண்டு வந்துவிட்டன. இராணுவத் தலைமையகம் இப்போது இதனை ஏற்றுக் கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் ஆற்றிய பங்களிப்பைக் கௌரவிக்கும் வகையிலேயே, பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தனவுக்கு வெளிநாட்டில் உள்ள தூதரகம் ஒன்றில் இராணுவ ஆலோசகர் பதவி வழங்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய குறிப்பிட்டுள்ளார். போர் முடிவுக்கு வந்த பின்னர், சேவையில் உள்ள இராணுவ அதிகாரிகளையும் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளையும் வெளிநாடுகளில் இராஜதந்திரப் பதவிகளுக்கு அமர்த்துவது அரசாங்கத்தின் வழக்கமாகி விட்டது. வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களில், பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்கு படை அதிகாரிகள்தான் நியமிக்கப்படுவதுண்டு. அத்தகைய பதவியில்தான் பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் தூதரகத்தின் இரண்டாவது நிலைப் பொறுப்பில்- பிரதித் தூதுவராக படை அதிகாரிகளை நியமிப்பது போருக்குப் பின்னர் அதிகமாகியுள்ளது. இதற்கு முன்னர் பெரும்பாலும் ஓய்வுபெற்ற படைத் தளபதிகளே தூதுவர் பதவிக்கு நியமிக்கப்பட்டனர்.

2009 ஆம் ஆண்டு போர் இறுதிக்கட்டத்தை எட்டியிருந்த போது, முதல்முறையாக சேவையில் இருந்த இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் உதய பெரேராவை மலேசியாவுக்கான பிரதித் தூதுவராக அரசாங்கம் நியமித்தது. இராணுவத்தின் நடவடிக்கைப் பணிப்பாளராக இருந்த அவரை மலேசியாவுக்கு அனுப்பிய அரசாங்கம், அவர் மூலமே, பிரபாகரனுக்கு அடுத்ததாக, புலிகள் இயக்கத்தின் தலைமையை பொறுப்பேற்ற கே.பி. எனப்படும் செல்வராசா பத்மநாதனைப் பிடித்து இலங்கைக்குக் கொண்டு வந்தது. அதே மேஜர் ஜெனரல் உதய பெரேராதான், இப்போது யாழ்.படைகளின் தலைமையகத் தளபதியாக இருக்கிறார்.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர், சேவையில் உள்ள அதிகாரிகளும், ஓய்வு பெற்றவர்களும் அதிகளவில் இராஜதந்திரிகளாக நியமிக்கப்பட்டு வருகின்றனர். ஜப்பானில் முன்னாள் கடற்படைத்தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட தூதுவராக உள்ள நிலையில், பிரதித் தூதுவராக மேஜர் ஜெனரல் விஜேசிறியை அனுப்பியுள்ளது அரசாங்கம். அவுஸ்திரேலியத் தூதுவராக முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் திசேர சமரசிங்க, ஐ.நாவுக்கான பிரதித் தூதுவராக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, பிறேசிலுக்கான பிரதித் தூதுவராக மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, ரஷ்யாவுக்கான பிரதித் தூதுவராக மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா என்று- இராஜதந்திரிகளாக பதவியில் உள்ள படை அதிகாரிகளின் பட்டியல் மிக நீளமானது. போர் முடிவுக்கு வந்த பின்னர், போர் முனையில் முக்கிய பங்காற்றிய படை அதிகாரிகளுக்கு வெளிநாடுகளில் இரண்டு ஆண்டுகள் இராஜதந்திரப் பதவி வழங்கி கௌரவித்து வருகிறது அரசாங்கம். இது கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ள போதிலும், அரசாங்கம் அதனைக் கண்டுகொள்வதாக இல்லை.

இறுதிக் கட்டப் போரில் பங்கெடுத்த படை அதிகாரிகள் இவ்வாறு வெளிநாடுகளுக்கு இராஜதந்திரிகளாக அனுப்பி வைக்கப்பட்ட போது, அவர்கள் நெருக்கடியையும் சந்திக்க நேர்ந்துள்ளது. குறிப்பாக ஜேர்மனிக்கான பிரதித் தூதுவராக இருந்த மேஜர் ஜெனரல் ஜெகத் டயசுக்கு எதிராக குற்றச்சாட்டு ஒன்று சுவிஸ் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டது. மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வாவை லண்டனில் கைது செய்வதற்கு கோரும் மனுவும் நீதிமன்றத்துக்கு சென்றது. இவ்வாறு சர்ச்சைகளை உருவாக்கிய போதிலும், அரசாங்கம் படை அதிகாரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதை மட்டும் நிறுத்தவில்லை.

இறுதிக்கட்டப் போரில் குற்றச்சாட்டுகளுக்குள்ளான இராணுவ அதிகாரிகளை வெளிநாடுகளில் பணியாற்ற அனுப்பிய போது, தெற்கில் கிளம்பாத எதிர்ப்பு வெலிவேரியவில் தாக்குதல் நடத்த உத்தரவிட்ட பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன நியமிக்கப்பட்ட போது எழுந்திருக்கிறது. ஆனால், இந்த எதிர்ப்புகளையெல்லாம் அரசாங்கம் நிராகரித்துவிட்டது. போரில் ஆற்றிய பங்களிப்புக்கான கௌரவிப்பே இது என்று எதிர்க்கட்சிகளின் வாயை அடைத்துள்ளது அரசாங்கம். அவ்வாறாயின் வெலிவேரிய தாக்குதலுக்கான பொறுப்புக்கூறுவது யார் என்று தெற்கில் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

தேவைப்பட்டால் விசாரணைக்காக பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தனவைத் திருப்பி அழைக்கலாம் என்கிறது இராணுவம். போரில் சிறப்பாகப் பணியாற்றிய படை அதிகாரிகள் எவரும் தண்டிக்கப்படக்கூடாது என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

இதனால்தான், வெலிவேரிய தாக்குதலில் தொடர்புடையதாக குற்றம் சாட்டப்படும் படை அதிகாரிகள், தண்டிக்கப்படாமல் சரியான நீதி விசாரணைக்குட்படுத்தப்படாமல் தப்பிக் கொண்டனர். சர்வதேச சமூகம், குற்றங்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்று வலியுறுத்தினாலும் அரசாங்கம் அதனைச் செய்யாமல் இழுத்தடித்து வருவதற்கு இதுவே காரணம். போரில் பங்கேற்ற படையினர் எவருமே கூண்டில் ஏற்றப்படக் கூடாது என்று அரசாங்கம் வலியுறுத்தி வருவதற்கு, படையினர் மீது கொண்ட அக்கறை மட்டும் காரணமல்ல. அதுபோலவே, வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களில் இராஜதந்திரிகளாகப் படை அதிகாரிகள் நியமிக்கப்படுவதற்கும், போரில் அவர்கள் ஆற்றிய பங்களிப்பு மட்டும் காரணமல்ல. இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற மீறல்களின் சாட்சியாளர்கள் அவர்கள்தான். அவர்களுக்குத்தான், என்ன நடந்தது என்று தெரியும்- அதற்கான உத்தரவுகளை வழங்கியது யார் என்று தெரியும். அவர்கள் எப்போதும் அரசதரப்பில் இருந்தால்தான், சர்வதேச சமூகத்தை சமாளிக்கலாம். குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிக்கலாம். எனவே, அவர்களைத் தமது பக்கத்தில் தக்க வைத்திருப்பதற்காகவே அரசாங்கம், வெலிவேரிய போன்ற பாரதூரமான சம்பவங்களைக்கூட கண்டுகொள்ளாதிருக்கிறது.

வெலிவேரிய சம்பவத்தி[ல்] தொடர்புடைய அதிகாரிகளுக்கே, இந்தளவுக்கு விட்டுக்கொடுப்பு என்றால் இறுதிப் போரில் பங்கெடுத்த படை அதிகாரிகள் மீதான குற்றச் சாட்டுக்கள் எந்தளவுக்கு கவனத்தில் கொள்ளப்படும் என்ற கேள்வி எழுவதில் நியாயம் உள்ளது. அரசாங்கமே படை அதிகாரிகளைப் பாதுகாக்க முனைவதால்தான்- அரசாங்கத்தின் சொந்த விசாரணைகளின் மீது சர்வதேச சமூகத்துக்கு நம்பிக்கையில்லாமல் போனது. அத்தகைய அவநம்பிக்கையை துடைப்பதற்கான ஒரு வாய்ப்பாக இலங்கை இராணுவத்துக்கும் அரசாங்கத்துக்கும் வெலிவேரிய சம்பவம் ஒரு நல்வாய்ப்பாக கிடைத்திருந்தது. ஆனால் அதை அரசாங்கம் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இதனால்தான், குற்றச்சாட்டுக்குள்ளான படையினர் மீது நீதியான விசாரணைகளை அர சாங்கம் முன்னெடுக்கும் என்ற நம்பிக்கை, தமிழ் மக்களிடத்திலும், சர்வதேச சமூகத்திடமும் மட்டுமின்றி தென்னிலங்கை சிங்கள மக்களிடமும் கூட இல்லாது போய் விட்டது.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு சமவுரிமைகளை வழங்கி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டும்

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு



**(கொழும்பு)**

**வடமாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதில் எவ்விதமான பிரச்சினையும் இல்லை. அவ்வாறு அரசு தீர்மானம் எடுத்தால் அதனை வரவேற்பதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

இனவாதிகளை ஓரம்கட்டிவிட்டு தமிழ் மக்களுக்கு சம உரிமைகளை வழங்கி நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், போக்குவரத்து மற்றும் சிறு சிறு குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளை கையாளும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவது வரவேற்புக்குரியது.

விஷேடமாக வட மாகாணத்திற்கு இவ்வாறான பொலிஸ் அதிகாரங்களை வழங்கி பரீட்சார்த்தமாக அம் மாகாணத்தின் செயற்பாடுகளை அவதானிக்க முடியும்.

இவ்வாறு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படும் போது பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும்.

அவ் ஆணைக்குழுவின் தலைவராகவும் அக்குழுவின் அதிக அதிகாரமுடையவராகவும் ஜனாதிபதியே இருப்பார். எனவே பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகள தவறான வழியில் பயன்படுத்த முனைந்தால் அதனை ஜனாதிபதியால் மீளப் பெறமுடியும்.

எனவே இனவாதிகள் சொல்வதைப் போன்று பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் வட மாகாணம் பிரிவினைக்கான வழியை தயார்படுத்தும் என்பதில் உண்மையில்லை.

மாகாண சபையை அறிமுகப்படுத்தும் போதும் அதிகாரத்தை பரவலாக்கிய போதும் இந்திய வம்சாவளி மக்களுக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கிய போதும் சிங்கள இனவாதச் சக்திகள் அவற்றை எதிர்த்தன. தமிழ் மக்களுக்கு எந்த உரிமையையும் வழங்கக் கூடாதென்பதே இக்கூட்டத்தின் பிறவிக் குணமாகும்.

இதனை மாற்ற முடியாது. எனவே இனவாதிகளின் கருத்துக்களை கவனத்தில் எடுக்காது தமிழ் மக்களுக்கு சம உரிமைகளை வழங்க ஜனர்திபதி நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்தோடு நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளையும் நிறைவேற்ற வேண்டும். அவ்வாறானதோர் நிலையில் எம்மீதான சர்வதேச அழுத்தங்களும் நீர்த்துப் போகும். அத்தோடு இந்தியாவின் பிரதமர் மோடி ஒரு போதும் ஜெயலலிதாவின் கோரிக்கையை ஏற்க மாட்டார்.

ஏனென்றால் இந்தியா எப்போதும் இலங்கையின் இறையாண்மையை மீறாது மதிப்பளிக்கும். எனவே ஜெயலலிதாவின் கோரிக்கைக்கு மோடி செவி சாய்க்க மாட்டார்.

இலங்கையில் பிரிவினைக்கு தமிழ் மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்த வேண்டுமெனக் கூறும் ஜெயலலிதா அப்படியானால் இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் பாகிஸ்தானுடன் இணைந்து வாழ்வதற்கும் கருத்துக்கணிப்பு நடத்த வேண்டுமென கூற வேண்டும் என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (2)

# இலங்கை மீனவர்கள் 12 பேர் கைது

இலங்கை மீனவர்கள் 12 பேர் இந்திய கடற் பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் இந்திய கடல் எல்லையில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் இரண்டு படகுகளில் சென்ற மீனவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் சென்னை கடற்பரப்பில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்படும்போது அவர்களிடமிருந்த 750 கிலோ கிராம் மீன் இந்திய கடற் பாதுகாப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களை தமிழ்நாடு பொலிஸாரிடம் ஒப்படைக்கவுள்ளதாக இந்திய கடற்பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர். (2)

# பாதுகாப்பு செயலாளரின் பாராளு. பிரவேசத்திற்காக காத்திருக்கிறேன்

## மங்கள சமரவீர எம்.பி.தெரிவிப்பு

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பாராளுமன்ற பிரவேசத்திற்காக காத்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இணையத் தள முடக்கம் தொடர்பில் பாராளுமன்றில் நடைபெற்ற ஒத்திவைப்பு விவாத்த்தில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பாராளுமன்ற உறுப்பினர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் பல்வேறு கேள்விக்கணைகளை தொடுக்க ஆவலுடன் காத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இணையத் தளங்கள் முடக் கப்படுவதன் பின்னணியில் யார் செயற்பட்டு வருகின்றார் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே என அவர் குறிப்பிட்டுள் ளார்.

லங்காநியூஸ்வெப், லங்கா ஈநியூஸ், தமிழ் நெற், கொலம்போரெலிகிராப், தி இன்டி பெண்டன்ட், ஜப்னாமுஸ்லிம், ஸ்ரீலங் காமி ரர் போன்ற இணையத் தளங்கள் முடக்கப் பட்டுள்ளதாகவும், அரசாங்கத்தை கடுமையாக விமர்சனம் செய்த காரணத்தினால் இவை முடக்கப்பட்டுள்ளதாகவும் கோத்தபாய குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், இந்த முடக்கப்பட்ட இணையத் தளங்கள் பயங்கரவாத இணையத்தளங்கள் கிடையாது என சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இணையத் தளங்கள் முடக்கப்பட்டமை தொடர்பில் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மீது குற்றம் சுமத்த முடி யாது எனவும் அதனை விடவும் பலம் பொருந்தியவர்களே இதன் பின்னணியில் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# இன விகிதாசாரம் மாற்றப்படுகிறது

## வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரன்

தமிழர்களின் பூர்வீக நிலங்களில் இன விகிதாசாரம் மாற்றப்பட்டு வருவதாக வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வரின் செயற்பாடுகளுக்கு நன்றி தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

போரின் பின்னரான காலப்பகுதியில் தமிழர் வாழ்வு பெரும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. நுட்பமான இன அழிப்பு விடயங்கள் தமிழர்கள் மீது திணிக்கப்பட்டுள்ளன.

தமிழரின் பூர்வீக பிரதேசங்கள் பல ஆக்கிரமிக்கப்பட்டு அவற்றின் இன விகிதாசாரம் மாற்றப்படுகிறது. தமிழர்களின் வாழ்வாதார வழிகள் பல முடக்கப்பட்டு அவர்கள் மீது இடப்பெயர்வு அவசிய நிலை திணிக்கப்படுகிறது.

என்றுமில்லாத அளவுக்கு உச்சக் கட்டத்தை அடைந்துள்ள இன அழிப்பால் துவண்டிருந்த ஈழத்தமிழினம் சமீபத்திய இந்தியப் பாராளுமன்ற தேர்தல் முடிவுகளை மிகவும் நம்பிக்கையோடு பார்க்கிறது.

இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணை மற்றும் தமிழர் நிரந்தரத் தீர்வு குறித்து தாயகத் தமிழர் மற்றும் புலம்பெயர் தமிழரிடையே பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்கிற கொள்கைகளை முன்வைத்து களம் கண்ட அ.தி.மு.கவின் இமாலய வெற்றி எமது நம்பிக்கையை மேலும் வலுவூட்டியிருக்கிறது.

தேர்தலுக்கு பின்னரும் ஈழத்தமிழர் தீர்வு விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டைத் தொடரும் தமிழக முதல்வரின் செயற்பாடுகள் பாராட்டுதலுக்குரியவை.

அவருடைய நிலைப்பாடுகள் ஈழத் தமிழரின் ஆழமான அரசியல் தாகங்களை வெளிப்படுத்தி நிற்பதோடு உலக ஜனநாயக நெறிகளை சரியாக பிரதிபலிக்கிறது.

பல இழப்புக்களைக் கடந்தும் எண்ணற்ற உயிர்த் தியாகங்களால் கட்டி எழுப்பப்பட்டதுமான உரிமைப் போராட்டத்தில் பதிய நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தியுள்ளது.

தொடர்ந்தும் உறுதியான நிலைப் பாட்டைக் கொண்டிருக்கும் தமிழக முதல்வருக்கு மனமார்ந்த நன்றிகள் என தெரிவித்துள்ளார்.

(செ-11-6)

# வாரம் ஒரு தகவல்

## இளமை இதோ!

"தாத்தா, உங்களுக்கு என்ன வேண்டும்?"

"இளமை திரும்ப வேண்டும்! அதற்கு ஏதாவது மருந்து உங்களது கடையில் இருக்கிறதா?"

"அதற்கு டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் ஒரு மருந்து கண்டு பிடித்திருக்கிறார்களாம் தாத்தா"

"அப்படியா? அது என்ன மருந்து?"

கற்றாழையிலிருந்து தான் அந்த மருந்தை உருவாக்கியிருக்கிறார்கள்டுடு

"ஏற்கனவே காய்ச்சலைக் கட்டுப்படுத்த கற்றாழைச் சாறு கொடுப்பது வழக்கம்"

"ஆமாம் தாத்தா. அதேபோல் அல்சரையும் குணப்படுத்தும். கற்றாழையைத் தொடர்ந்து சாப்பிடுபவர்களுக்கு இரத்த அழுத்தம் வருவதில்லையாம். கொலஸ்ரோலும் இருப்பதில்லையாம். அதனால் இப்பொழுதெல்லாம் "கற்றாழை டொனிக்" கே கடைகளுக்கு வந்துவிட்டது."

"அதைச் சாப்பிட்டால் நல்லது என்கிறாயா?"

"முதலில் எலிகளுக்கு இதைக் கொடுத்துத்தான் சோதனை செய்து பார்த்தார்களாம். அவற்றுக்கெல்லாம் இளமை தள்ளிப் போகிறது என்பதை கண்டுபிடித்திருக்கிறார்கள்."

"அப்படியா!"

"இப்பொழுதெல்லாம் அமெரிக்காவில் "கற்றாழை சாலட்" கிடைக்கிறதாம்.


"நல்ல செய்தி கூறினாய் தம்பி அது இருக்கட்டும். இப்பொழுது ரெடிமெட்டா உன்னிடம் ஏதாவது மருந்து இருக்கிறதா?"

"இந்த வயதில் இப்படி ஒரு ஆசை தேவையா தாத்தா உங்களுக்கு?"

"இது எனக்கில்லையப்பா. என்னுடைய அப்பாவுக்கு"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வதிரி உல்லிய நொல்லை கண்ணகை அம்மன் ஆலயத்தின் மணவாளக் கோல விழா அண்மையில் இடம்பெற்றது. இதன்போது சுவாமி வீதி வலம் வருவதை படத்தில் காணலாம். (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)




தேசிய ரீதியில் கடைப்பிடிக்கப்படவுள்ள புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி வாழ்வெழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கருத்தமர்வு அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது அடிஸ் நிறுவன மாவட்ட இணைப்பாளர் கோடீஸ் கருத்துரை வழங்குவதையும் கலந்து கொண்ட சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டு சபை உறுப்பினர்களின் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். (படம்:- சாவகச்சேரி செய்தியாளர்)






யாழ்.பல்கலைக்கழக உளவியல் மாணவர்கள் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக சமுதாய வழிகாட்டல் மையத்தினர் மாணவர்களிடையே நினைவாற்றலை மேம்படுத்தும் நோக்குடன் அதிகரித்து வரும் மது போதைப் பொருள் பயன்பாட்டைக் குறைக்கும் முகமாகவும் பரீட்சைக்கு எவ்வாறு தயார் செய்தல் ஆகிய விடயங்களை உள்ளடக்கி மாணவர் வழிகாட்டல் நிகழ்வொன்று யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது செயலமர்வு நடைபெறுவதனையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

நிழல்கள்





ஏசியா பவுண்டேசன் உள்ளூராட்சி திணைக்களம் சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆகியன இணைந்து இலத்திரனியல் முறையில் குடிமக்கள் அறிக்கை அட்டை தயாரித்தல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது... (படங்கள் :- சாவகச்சேரி செய்தியாளர்)





வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக இருந்து அண்மையில் ஓய்வுபெற்ற வ.செல்வராசா என்பவரின் பிரிவுபசார நிகழ்வு அண்மையில் யாழ்.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இடம்பெற்றது. இதன்போது விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றுவதனையும் வ.செல்வராசாவினை பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## மெட்டுக்களின் ஒற்றுமை

இளம் வட்டுக்களில் மலரும் நாளைய
மெட்டுக்கள் நாம்
ஒன்றுசேர்ந்து ஜெயித்திடுவோம்
இப்புவிதனை
புதிய பல சாதனைகள் புரிந்து– மாற்றிடுவோம்
இவ் ஜெகத்தினை...!
விடியலுக்காய் ஏங்கும் மனநிலை– ஏனோ
யார்க்கும் புரிவதில்லை
நேற்று நடந்தது இன்று நடப்பது– என்பதை
மறந்துவிடு தோழா
நாளைய போராட்டத்தில்– ஒரு தடம்
பதித்திட
புறப்படு நீயும் ஒரு புயலாய்...!
நீ நினைத்ததை எட்டும்வரை– சேர்ந்திடு
ஒரே மனதுடன்
விடியலுக்காக ஏங்கும்– ஓர் குரலாய்!

ஆர்.தாரு
யாழ்ப்பாணம்

## அந்தரிக்கும் ஆட்டுக்கடா

வேள்விக்கு நேர்ந்துவிட்ட
கிடாய் ஒன்று அழுகிறது–மன
வேதனையோ தாங்காமல்
வெம்பி அழுகிறது
மஞ்சள் நீர் தெளித்தெடுத்து
மலர்மாலை கழுத்திலிட்டு
மந்திரங்கள் பலசொல்லி–நீறு
நெற்றியிலே இட்ட கிடாய்
கண்களில் நீர் சொரிந்து
கலங்கியழுகிறது
கட்டையைச் சுற்றிச்சுற்றி
கதறியழுகிறது
பச்சை இலை குழையில்
இச்சையிழந்து நின்று
பசியை மறந்து விட்டு
பதறியழுகிறது
பொழுதுபுலர்ந்துவிட்டால்–பாவம்
போய்சேரும் அதன் ஆவி– அந்த
வாய் பேசா உடலையுண்ண– தவிக்கும்
வாயுள்ள மனிதசாதி

பொலிகை செ.யோகராஜா

## மனதே ஏன் மாற்றம்

கற்பனைகள் எல்லாம்
பகல் கனவுகளானது
நிஜ நாவல்கள் குறைந்து மனங்கள்
தொடர்நாடகத்தில் இணைந்தன

கடித முறை மறந்து
கணனியில் இணைந்தது
கணனியில் கைதாகி
இனிய காலங்கள் கனிந்தன

கவிதைகளை விரும்பியோர்
இணையக் கலைகளில் நுழைந்தனர்
கற்பனைத் தேடல்கள் கரையேறாது
கடைகளில் நிறைந்தன

ஏன் இந்த ஏமாற்றம்
எதற்குத்தான் தொடரும் புதுமாற்றம்
பழைமைகள் இல்லாத புதுமைகள் என்னும்
பாரினில் இல்லை அறிவீரே...

எஸ்.ஆர்.ராம்கி
உடுத்துறை



## இமயம் தொட...

வீரத்திற்கும்
துரோகத்திற்கும்
வித்தியாசத்தைப் புரிந்துகொள்
எதிரி நெஞ்சில் குத்துவான்
துரோகி
உன்னுடனே இருந்து
தருணம் பார்த்து
முதுகில் குத்திடுவான்
எப்போதுமே
எதிரி முன் நிற்பான்
துரோகி பின் நிற்பான்


மாவை.நா. கஜேந்திரன்

## என்சனமே

தடக்கி விழும்போது
முடக்க நினைப்பதும்
எம் கண்ணீரில் தம்
தாகம் கலைப்பதும்
எமது பிரச்சினைகளை
பிரசன்னமாக மகிழ்வதும்
எம் துயரில் துயில் கொள்வதும்
எம்வேதனைகளில் வெம்மைதேடி
குளிர்காய்வதும்
குழுவாகக்கூடி குப்பைகளை
பற்றிக் குலாவுவதும்
விதவைகளை வதைகள் பல செய்து
விரக்திப்படுத்துவதும்
முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும்
முடிச்சுப்போட்டு முட்டுக்கட்டையாய்
முழக்கங்கள் இடுவதும்
நம் சமூகத்தின்
சாதனையாளர்களின்
(து) சரித்திரச் செயல்கள்தான்

அ.நளினாசினி
கோண்டாவில்

# மௌனத்தின் தேடல் – 207



## புனிதம்

கையில் இருப்பது
தாமரைப்பூ- அதன்
புனிதத்தைக் காப்பது
உங்கள் பொறுப்பு
நாற்காலியில்
இருந்து கொண்டு-நம்
தமிழர் நிலை மறந்திடாதீர்
நல்லாட்சி செய்யும்
நடுநிலையோடு

என்.அர்ச்சனா
நிதர்சன் கிறீம் ஹவுஸ்

## நம் இனம்

வந்த மோடியும்
பகை கொண்ட அரசும்
கை குலுக்கி
காவடி எடுப்பது
13+ தீர்ப்பதற்கு
தீராத நோய் மாறவில்லை
மாற்றுவழி வேறில்லை
கடந்த வரலாற்றில்
கற்றுக்கொண்ட பாடம்

வீ.அருள்ராஜா
பாலிநகர்

## சதுரங்கம்

இந்திய அரசியல்
சதுரங்கத்தில்
சிப்பாய்களாகச்
சிக்கித்தவிக்கும்
ஈழத்தமிழர்களை
சிகரமேற்றுவாரா?
நரேந்திர மோடி

இ.சிந்துஜன்
தாவடி

## வாழ்த்து

பிரதமர்
நரேந்திர மோடியின்
கையில் தாமரை மொட்டு
வாடிவிடக்கூடாது
அதுதான் ஓடி ஓடி
வாக்களித்த
வாக்காளர்களின்
அன்பான இதயம்
அடிசறுக்காத
சிம்மாசனத்தின்
குறைவில்லாத ஆட்சியில்
குடிமக்கள் குறைவின்றியும்
எம் நீடித்த நீதியின்
தேடலுக்கும்
விடிவெள்ளியாக
அமையட்டும்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## கறுப்பு அகலும்

ஊழல் இலஞ்சத்துடன்
கறுப்புப் பணமும்
பொருளாதாரத்தை நாளும்
பெருமளவில் பாதித்ததால்
இதிலிருந்து விடுவிக்க
இனிக் கடவுள்தான்
முன்வரவேண்டுமென்று
எண்ணிய பாரத மக்களுக்கு
கண்கண்ட தெய்வமாய்
தென்பட்டவர் மோடியாவார்
இதனால் தாமரைப்பூவும்
இதயபூர்வமானது

க.நாகராசா
சாவகச்சேரி

## குறிக்கோள்

தாய்நாட்டு பிரதமரே!
உம் வெற்றியில் கண்டேன்
குறிக்கோளை அடைவதற்கு
வயது இடையூறு இல்லையென்று
உம் சேவை தொடர்ந்திட
நாட்டுமக்கள் நலன் பேணிட
நீர் நலமுடன் ஆட்சி புரிந்திட
எல்லாம்வல்ல இறைவனை
வேண்டுகின்றேன்

யு.வளர்மதி
யா.செ.இ.க

## பாரதபூமியின் மகுடம்

வாழ்ந்த காலம் எத்தனையோ
வாழ மறுத்த காலம் எத்தனையோ
பா.ஜ.க.கூட்டணியின்
முதல்வனே பாரத தேசத்தின் பிரதமரே
வாழ்தகு மன்னன் நரேந்திரமோடி
ஐயாவே மீண்டும் அமைதியான
தமிழகம் விடிவெள்ளியாக மிளிருமா?

பா.டிலக்ஷன்
யா.செ.இ.க.

## மாற்றம்

இந்திய தேர்தலில்
ஆட்சி மாறிவிட்டது,
ஆனால்... ? இது ஈழத்தமிழர் எமது
வாழ்வின் மாற்றமும் அல்ல
எமக்கு தேவையானது
இம்மாற்றமும் அல்ல
எமக்கு தேவையானது
இலங்கை வாசிகளின்
மனமாற்றமே

த.மோகனரூபன்
சுழிபுரம்

## நிலையாமை

தாமரை இலையில் தண்ணீர் போல
மனித வாழ்க்கையில் நிலையில்லாதது
இளமை, செல்வம், ஆயுள் என்பதனை
மக்களுக்கு தனது செயலால் உணர்த்துகிறார்
தலைவர் மோடி அவர்கள்

யோ.காண்டீபன்
மானிப்பாய்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –208



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 11.06.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் தற்கொலை தாக்குதல்களில் முப்பத்தாறு பேர் உயிரிழந்தனர்



(பக்தர்த்)

ஈராக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெவ்வேறு தற்கொலை குண்டுத்தாக்குதல்களில் 36 பேர் உயிரிழந்துள்ளனர்.

அங்கு தீவிரவாதிகளின் அட்டூழியம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. வடக்கு ஈராக்கில் அரசுக்கு எதிராக தாக்குதல் நடத்தும் தீவிரவாதகளுடன் இராணுவம் போரிட்டு வருகிறது.

அங்குள்ள அன்பர் மாகாணத்தில் கடந்த 5 மாதத்தில் மட்டும் 4 இலட்சத்து 80 ஆயிரம் பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி உள்ளனர். நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நயன்வே மாகாணத்தில் பல இடங்களில் தாக்குதல்கள் நடத்தினர். மேற்கு மொசூலில் குண்டு வீசி தாக்கு தல்கள் நடத்தப்பட்டன. அதில் 4 பொலிஸார், 3 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். 16 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்..

கிழக்கு மொசூலில் நடந்த தாக்குதலில் 3 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். அதே நேரத்தில் ஹமாம் அல்-அலில் என்ற இடத்தில் தற்கொலை படை தீவிரவாதிகள் 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அல்-முவாபாகியா என்ற இடத்தில் 2 தற்கொலை தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதில் 4 பேர் உயிரிழந்தனர். 45 பேர் காயம் அடைந்தனர்.

இதேபோன்று வடக்கு பக்தாத்தில் நடந்த கார்க்குண்டு தாக்குதல் உள்ளிட்ட சம்பவங்களில் 4 பேர் பரிதாபமாக இறந்தனர். 6 பேர் காயம் அடைந்தனர். சபா அல்-பர் பகுதியில் 5பேர் பலியாகினர். 4 பேர் காயம் அடைந்தனர்.

# பறிமுதல் செய்த கப்பலை விடுவித்த ரஷ்யா




ரஷ்யாவின் அரசு எணணெய் நிறுவனமான கஸ்ப்ரோம் ஆர்க்டிக் பகுதியில் எண்ணெய் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதை எதிர்த்து கடந்த செப்டெம்பர் மாதம் நெதர்லாந்தில் இருந்து கிரீன்பீஸ் இயக்கத்தைச சேரந்த 30 தன்னார்வலர்கள் அந்தப் பகுதியை முற்றுகையிட்டு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

திருட்டுக் குற்றம் சுமத்தி அவர்களைக் கைது செய்த ரஷ்ய அரசு பின்னர் எளிமையான குற்ற வழக்குகளை அவர்கள் மீது தாக்கல் செய்தது. அவர்கள் பயணம் செய்த கப்பலையும் பறிமுதல் செய்து முர்மன்ஸ்க் துறைமுகத்தில் நிறுத்தி வைத்தது.

நான்கு ரஷ்யர்கள் உட்பட இந்த முப்பது பேரும் இரண்டு மாத காவலுக்குப் பின்னர் பிணையிலும், கிரெம்ளினின் பொதுமன்னிப்பின் பேரிலும் வெளியே விடப்பட்டனர். ஜேர்மனியில் உள்ள சர்வதேச கடல் நீதிமன்றம் நெதர்லாந்து அரசு அளித்த புகார் மனுவின் பேரில் இவர்களை விடுதலை செய்யும்படியும், அவர்கள் பயணம் செய்த கப்பலை விடுவிக்கும்படியும் ரஷ்யாவிற்கு கூறியபோது அதை ஏற்க அந்நாட்டு அரசு மறுத்துவிட்டது.

எனினும் ஆச்சரியப்படத்தக்கவிதத்தில் ரஷ்யா அந்த கப்பலை விடுவிக்க இருப்பதாக சுற்றுச்சூழல் குழு நேற்று தெரிவித்துள்ளது. ஆனால் கப்பலிலுள்ள உபகரணங்கள் தொடர்ந்து ஆய்வு செய்யப்படவுள்ளதாக்வும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கிரீன்பீஸ் இயக்கமும் ஐரோப்பிய மனிதவுரிமைகள் நீதிமன்றத்தில் தங்களுடைய கருத்து சுதந்திரத்தை ரஷ்யா பறித்தது குறித்து வழக்கு தொடுத்துள்ளது.



சீனா, ரஷ்யா இடையே இயற்கை எரிவாயு வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டது. இதில் சீன ஜனாதிபதி ஜி.ஜிங்பிங்க், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர்புடின் ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம்.

# உக்ரைன் புதிய ஜனாதிபதியுடன் புடின் சந்திப்பு; பிரச்சினைக்கு தீர்வுகாண பேச்சுவார்த்தை

(பெனோவில்லி)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் உக்ரைனில் ஜனாதிபதியாகத் தேர்ந்தேடுக்கப்பட்டுள்ள பெட்ரோபோரோஷென்கோவும் நேற்று முன்தினம் நேரில் சந்தித்து உக்ரைனில் போர் நிறுத்தம் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் குறித்து விவாதித்தனர்.

இரண்டாம் உலகப் போரின்போது நாஜிகளின் ஆக்கிரமிப்பில் இருந்து பிரான்சை விடுவிக்க நேசநாடுகளின் படைகள் அந்நாட்டின் நார்மண்டி பகுதியில் நடவடிக்கை மேற்கோண்ட தன் 70 ஆவது ஆண்டையொட்டி நேற்று முன்தினம் அங்கு டி.டே. விழா கொண்டாடப்பட்டது.

அந் நிகழ்ச்சியில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ போரோ ஷென்கோ, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஹொலாந்த் உள்ளிட்ட நேச நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

அதனைத் தொடர்ந்து விளாடிமிர் புடினை பிரிட்டன் பிரதமர் கமரூன் சந்தித்துப் பேசினார்.

அப்போது உக்ரைன் மீதான தலையீட்டை முடிவுக்கு கொண்டு வரும்படி ரஷ்ய ஜனாதிபதி புடினிடம் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் வலியுறுத்தினார்.

அதனையடுத்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் புடினைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

உக்ரைன் பிரச்சினையால் இரு நாடுகளுக்குமிடையிலான உறவில் பின்னடைவு ஏற்பட்டுள்ள நிலையில் முதல்முறையாக இந்த இரு தலைவர்களும் சந்தித்துப் பேசியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இது குறித்து அமெரிக்க துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பென் ரோட்ஸ் கூறுகையில், இரு தலைவர்களும் 15 நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இது அதிகாரபூர்வ சந்திப்பு அல்ல. இந்தப் பேச்சுவார்த்தையின் போது இரு நாட்டு உறவுகள் குறித்து ஏதும் பேசவில்லை என்று கூறினார்.

இதையடுத்து விளாடிமிர் புடின் உக்ரைனின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள போரோஷென் கோவை முதல் முறையாக சந்தித்து ஆலோசனை நடத்தினார். அப்போது உக்ரைன் பகுதியில் நடைபெற்று வரும் தாக்குதல் சம்பவங்களை நிறுத்துவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்ய் ஆதரவுப் படையினருக்கும் அரசு படையினருக்கும் மோதல் நிகழ்ந்து வரும் உக்ரைனில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு போரோஷென்கோ ரஷ்ய ஜனாதிபதி புடினைச் சந்திப்பது இதுவே முதல்முறை.

இது குறித்து இந்தச் சந்திப்பு நிகழ்ந்த பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி ஹொலாந்தின் உதவியாளர் ஒருவர் கூறுகையில், சுமார் 15 நிமிடங்கள் நீடித்த அந்தப் பேச்சுவாார்த்தையின் போது பதற்றத்தைத் தணிப்பது, போரோஷென்கோவை உக்ரைன் ஜனாதிபதியாக ரஷ்ய ா அங்கீகரிப்பது உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து இருவரும் விவாதித்தனர் என்று தெரிவித்தார்.

# இந்தியா-பாகிஸ்தான் இடையே சமரசப் பேச்சுவார்த்தை அவசியம்

## அமெரிக்கா வலியுறுத்தல்

(வோஷிங்டன்)



இந்தியாவும் பாகிஸ்தானும் இருதரப்பு உறவை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை தொடர வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்ற பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்புடன் நடந்த பேச்சுவார்த்தையில் இருதரப்பு உறவை வலுப்படுத்த இசைவு தெரிவிக்கப்பட்டது.


இரு நாட்டு வெளியுறவுத்துறை அதிகாரிகள் மட்டத்தில் விரைவில் பேச்சு நடக்கும் என்று அப்போது அறிவிக்கப்பட்டது.

இந் நிலையில் வோஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவுத்துறை துணை செய்தித் தொடர்பாளர் மேரி ஹாக் இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் இரு தரப்பு உறவை மேம்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இரு நாடுகளும் இந்த முயற்சிகளை மேற்கொள்ளும் என்று நம்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் இந்த நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# பிரதமர் நரேந்திர மோடி 7 நாடுகளுக்கு சுற்றுப் பயணம்



இந்திய பிரதமராக மோடி பதவி ஏற்றதும் அவரை தங்கள் நாட்டுக்கு வரும்படி அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அழைப்பு விடுத்தார். இது போன்று பூட்டான், ஜப்பான், பிரேசில், நேபாளம், அவுஸ்திரேலியா உட்பட பல்வேறு நாடுகளும் மோடிக்கு அழைப்பு விடுத்துள்ளன.

மத்திய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் சையத் அக் பருதீன் இதுபற்றி கூறும்போது, "மத்தியில் புதிய ஆட்சி அமைத்த பின்னர் பிரதமர் மோடிக்கு பல்வேறு நாடுகளில் இருந்து அழைப்பு வந்துள்ளது. இதனால் அவர் வெளி நாட்டுப்பயணங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது" என்றார்.

தற்போது மோடி 7 நாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்வது உறுதியாகியுள்ளது. இதன்படி இந்த மாதம் பூட்டான் செல்கிறார். இது பிரதமரான பின்னர் மோடி செல்லும் முதல் வெளிநாட்டு பயணம் ஆகும்.

அடுத்த மாதம் மோடி ஜப்பான் செல்வார். ஜப்பான் பிரதமர் சிங்கோ துபேயின் அழைப்பை ஏற்று அங்கு செல்வார். அப்போது பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடைபெறும்.

அதே மாதம் பிரேசில் நாட்டுக்கும் செல்வார். அப்போது உலக காற்பந்து போட்டிகளையும் நேரில் பார்ப்பார். செப்டெம்பர் மாதம் ஆசியா-இந்தியா மற்றும் கிழக்கு நாடுகள் மாநாட்டில் மோடி பங்கேற்பார்.

நவம்பர் மாதம் ஜி.20 நாடுகள் மாநாட்டில் பங்கேற்க அவுஸ்திரேலியா செல்வார்.

அதை தொடர்ந்து நேபாளம் செல்வார். அங்கு சார்க் நாடுகள் மாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.

இதுதவிர மேலும் பல நாடுகளும் அழைப்பு விடுத்துள்ளன. அதுபற்றி பின்னர் முடிவு செய்யப்படும் என்று டில்லி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தாக்குவதை சகித்துக் கொள்ளமுடியாது

## பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

(சென்னை)

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தாக்குவதை சகித்துக் கொள்ள முடியாது என்று மத்திய இணை அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மத்திய கனரக தொழிற்றுறை இணை அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் முதல் முறையாக சென்னை வந்த பொன். ராதாகிருஷ்ணனுக்கு பாரதீய ஜனதா கட்சி சார்பில் விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தின் வளர்ச்சி திட்டங்களுக்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளிக்கும் என்று கூறினார்.

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதை சகித்துக் கொள்ள முடியாது என்று கூறிய அவர் சேது சமுத்திர திட்டம் பற்றி ஆய்வு செய்த பின்னர் முடிவு எடுக்கப்படும் என்றார்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க கர்நாடகம் எதிர்ப்பு தெரிவித்து அம்மாநில முதலமைச்சர் உள்ளிட்டோர், பிரதமர் மோடியை சந்திக்கவுள்ளது பற்றி செய்தியாளர்கள் கேட்டதற்கு மேலாண்மை வாரியம் அமைக்க தொடர்ந்து வலியுறுத்துவேன் என்றார்.

ஆப்கானில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட பாதிரியாரை மீட்க மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீங்கிழைக்கும் பொருட்களை சந்தைப்படுத்தும் வர்த்தகர்கள் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்படுவர்

## ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்பு

**(கொழும்பு) மக்களின் சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் பொருட்களை சட்டவிரோதமாக சந்தைக்கு விநியோகிக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்டங்களை நடை முறைப்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.**

சுகாதார அமைச்சும் நுகர்வோர் விவகார அதிகார சபையும் ஒன்றிணைந்து இது தொடர்பில் முறையான வேலைத்திட்ட மொன்றை முன்னெடுக்க வேண்டுமென அவர் பணித்துள்ளார். இத்தகைய செயல்களில் ஈடுபடும் நிறுவனங்களை கறுப்புப்பட்டியலில் உட்படுத்து மாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் அவர்கள் முன்னெடுக்கும் சட்டவிரோத வர்த்தக நடவடிக்கைகளை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

காலாவதியான மருந்துகள் நறுமணப் பொருட்கள் மற்றும் ஒப்பனை பொருட்கள் ஆகிய வற்றின் காலாவதி திகதியை மாற்றி சந்தைக்கு விற்பனை செய்துள்ள நிறுவனங்கள் தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை சுற்றி வளைப்புக்களை நடத்தியுள்ளது.

இங்கு கைப்பற்றப்பட்ட பொருட்களின் ஒரு பகுதி அலரிமாளிகையில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டு அவரது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனையடுத்தே ஜனாதிபதி மேற்படி பணிப்புரையை விடுத்துள்ளார்.

காலாவதியான மருந்து வகைகள் பல சந்தையில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதனையடுத்து அதிகார சபையினர் அது சம்பந்தமாக ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

இதன்போதே உடனடி சுற்றி வளைபுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

மக்களின் சுகாதாரத்துக்கு தீங்கிழைக்கும் பொருட்களை விற்பனை செய்ய எவருக்கும் இடமளிக்க முடியாது என உறுதியாகத் தெரிவித்த ஜனாதிபதி, எதிர்காலத்தில் இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார. (2)

# பொதுவேட்பாளராக ரணிலை ஏற்கமுடியாது- ஜே.வி.பி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை பொது வேட்பாளராக நிறுத்துவதை எதிர்ப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி அவரை பொது வேட்பாளராக நிறுத்தினால் நம்பிக்கை நொறுங்கி விடும் எனவும் ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்ரமசிங்கவை பொது வேட் பாளராக ஜே.வி.பி ஏற்றுக் கொள்ளாது எனவும் அவர் கூறியுள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் காலம் குறித்து இன்னும் அறிவிக்கப்படவில்லை என்பதால், ஜே.வி.பி இன்னும் அது பற்றிய தெளிவான முடிபுகள் எதனையும் எடுக்கவில்லை.

அரசாங்கம் அடுத்ததாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துமா என்பது பற்றி எமக்கு எதுவும் தெரியாது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மக்களின் தீர்ப்பு தனக்கு எதிர திரும்பியுள்ளது என்பதை அறி தால், அவர் தேர்தலை நடத்த பின்வாங்கி மாற்று வழிக்கு செ லக் கூடும்.

நிறைவேற்று அதிகாரம் கொண ஜனாதிபதியின் சில அதிகாரங் களை குறைத்து மேலும் ஆறு ஆண்டுகளுக்கு அதிகாரத்தை தக்கவைக்க அவர் முயற்சிக்கக் கூடும்.

சுமுகமாக தனது அதிகாரங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கைவிடுவார் என்று நம்பமுடியாது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சியில் பேசி அது பற்றிய முடிபை ஜே.வி.பி. எடுக்கும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை ஜே.வி.பி புறக்கணிக்கும் என வெளியாகியுள்ள, செய்திகளில் உண்மையில்லை. அவ்வாறான முடிபுகள் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் லால்காந்த குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# தமிழர்களுக்கு கிடைக்கவிருக்கும் சந்தர்ப்பத்தை திசைதிருப்ப முயற்சி

## ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நிரந்தர தீர்வுத்திட்டம் எதுவும் இல்லாது இதுவரை காலமும் வெறும் வாய்ப்பேச்சின் மூலம் அரசியல் நடத்தி வந்தவர்கள் இன்று தமிழ் மக்களது அரசியல் பிரச்சினைக்கு இந்தியா ஒரு தீர்க்கமான திட்டத்தை கொண்டுவர முயற்சிக்கும் போது மக்கள் கருத்துக் கணிப்பொன்றைதிசைதிருப்பல் நகர்வை மேற்கொண்டு மறுபடியும் தமிழர்களுக்கு கிடைக்கவிருக்கும் அரிய சந்தர்ப்பம் ஒன்றைதிசைமாற்ற முயற்சிக்கின்றார்கள் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி. குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்புத்துறை உதயபுரம் கிராம மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினையை மேம்படுத்துவதற்காக அப்பகுதி கிராம அபிவிருத்தி சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பு ஒன்று செபஸ்ரியார் தேவாலயத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழர்களது நிரந்தர அமைதியான வாழ்வுக்காகவே நாமும் போராடிவருகின்றோம். வருங்காலத்தில் அரசியல் ரீதியாகப் போராடியே எமக்கான நிரந்தர தீர்வை பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இராணுவத்துடனும் அரசுடனும் முரண்படுவதை விடுத்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் அரசியல் பயணத்தையே மேற்கொள்கின்றோம்.

நாம் அரசியல் தீர்வு பற்றி அரசுடன் கதைப்பதற்கு நீங்கள் தந்துள்ள அரசியல் பலம் தற்போது போதாது.

தமிழ் மக்கள் அரசியல் பலத்தை தந்திருந்தால் நிச்சயமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உங்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வை எப்போதோ பெற்றுத்தந்திருப்பார்.

பொய்யான வீரவசனம் பேசி அரசியல் அதிகாரத்தை பெற்றுக் கொள்பவர்கள் நாங்கள் இல்லை. அகிம்சைப் போராட்ட ரீதியிலும் ஆயுதப் போராட்ட ரீதியிலும் இருந்த எமது போராட்டங்கள் தோற்று விட்டன. அடுத்த கட்டம் என்ன செய்ய வேண்டும் என்பது தான் தற்போதைய நிலை.

இப் பகுதியில் சிறுவர் பாடசாலை இல்லை என்பது எனது மனதை வாட்டுகிறது. கல்வியில் மிளிரவேண்டிய சிறுவர்களுக்காக நிச்சயம் அமைச்சர் ஊடாக மிக விரைவில் சிறுவர் பாடசாலை கட்டித் தர ஏற்பாடு செய்கின்றேன்.

அத்துடன் நீங்கள் எமக்குத் தந்துள்ள வீதி மற்றும் வடிகால் அமைப்பு, கடற்கரை வீதி மின்சாரம் வழங்கல், சனசமூக நிலைய நிர்மாணம், சிறுவர் பூங்கா அமைத்தல், சந்தை அமைத்தல் போன்றவற்றிற்கு அமைச்சர் ஊடாக நிறைவேற்றுவேன் என அவர் தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலத்தில் உங்களுக்காக யார் பாடுபடுகின்றார்களோ அவர்களை தேர்ந்தெடுங்கள்.

இதன் மூலமே நிம்மதியான அரசியல் தீர் வொன்றை பெறமுடியும் என்றார். (2)

# றியாத் உடன்படிக்கை விரைவில் நடைமுறைக்கு

## அமைச்சர் டிலான் பெரேரா

(கொழும்பு)

இலங்கைக்கும் சவுதி அரேபியாவிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட றியாத் உடன்படிக்கை விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து சவுதி அரேபியாவுக்கு செல்லும் பணிப் பெண்களின் நலன் கருதி இலங்கையும் சவுதியும் உடன் படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டன.

இந்த உடன்படிக்கைக்கு அண்மையில் சவுதியின் சூரா சபை தமது அனுமதியை வழங்கியுள்ளது.

இந் நிலையில் குறித்த உடன்படிக்கை அமுலுக்கு வரவுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

இந்த உடன்படிக்கையின் மூலம் இலங்கையின் பணிப் பெண்கள் நன்மைகளை பெறுவர் என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

# இலங்கை மீனவர்கள் குறித்து அரசு அக்கறை கொள்ளவில்லை

## சுனில் ஹந்துன்நெத்தி எம்.பி

இலங்கை மீனவர்கள் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் இந்திய மீனவர்களை அரசாங்கம் விடுதலை செய்துள்ளமையை ஜே.வி.பி.கண்டித்துள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் தலைமையில் இந்த வாரம் நடைபெறவுள்ள அந்த கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்த பிரச்சினை குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் போதிய கவலைகளை வெளிக்காட்டவில்லை என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற உத்தரவாதமில்லாது இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டமைக்கு ஜே.வி. பியின் மத்திய குழு எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் புதிய அரசாங்கத்தை நோக்கிய ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# பிரிவுத்துயர் பகிர்வு

### பூபாலசிங்கம் சுகந்தன்



சுன்னாகம் கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் Sonderborg ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் சுகந்தன் கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு Kapel, Kirke Alle 7A, 6400 Sonderborg, Denmark என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### குலேந்திரன் அசோக்குமார்



கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட குலேந்திரன் அசோக்குமார் கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### கீர்த்தி சிவகணேஸ்



லண்டனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கீர்த்தி சிவகணேஸ் கடந்த மே மாதம் 22 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு Lambeth Cemetery Blackshaw Rd Tooting, London SW17 OBY என்னும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும்.

### அப்புத்துரை இரத்தினம்பிள்ளை



ஐயனார் கோயிலடி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை இரத்தினம்பிள்ளை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தாவடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### திருமதி மருதப்பு நிர்மலாதேவி



நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மருதப்பு நிர்மலாதேவி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 9.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நவாலி [illegible] இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பு வாசகர்களே!

அரசியல், ஆன்மீகம், சினிமா, பொழுது போக்கு தொடர்பான உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்
இல. 3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

சி.ஆ.ச.பிள்ளை, மண்டைதீவு

அன்பின் வியாசர் ஐயா அவர்கட்கு!

யாழ்.மண்ணில் தமிழ் வளர்த்த ஸ்ரீ லஸ்ரீஆறுமுக நாவலர் பெருமானின் உருவச் சிலை நல்லூர் முருகப் பெருமானின் தெற்குப் பக்கமாக முதன்முதலாக பிரதிஷ்டை செய்யப்பட்ட காலம் எது?

29.June 1969 ஆம் ஆண்டு பிரதிஷ்டை செய்து June 29, 30 July 01 ஆம் திகதிகளில் அன்றைய யாழ்.மாவட்ட அரச அதிபர் சிறிகாந்தா தலைமையில் நாவலர் மாநாடும் நடைபெற்றது.

29 October 1971 ஆம் ஆண்டு நாவலர் பெருமானுக்கு இலங்கை அரசால் தேசிய வீரர் என கௌரவித்து தபால் தலை வெளியிடப்பட்டதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

த.கனிஸ்ரன்,
மட்டுவில் வடக்கு,சாவகச்சேரி.

**Hello** வியாசர் அண்ணா!

எனது வினாவை கேலியாக நினைக்க வேண்டாம். எனது தம்பிக்கு வயது 12. தனக்கு புது கணனி வாங்கித் தருமாறு வற்புறுத்துகிறான். அதற்கு போதுமான பணம் எங்களிடம் இல்லை. அவன் திரும்பவும் வற்புறுத்துகின்றான். அவனுக்கு நல்ல அறிவுரையை தாருங்கள்.

தம்பி உன்னை புரியாத வயதென்ற படியால் நீ உன்னிக்கிறாய் சிந்தித்துப்பார். வீட்டின் நிலையை கொஞ்சமேனும் புரிந்து கொள். உனக்கு கணனி வாங்கும் பணம் உன் வீட்டில் ஒரு வருடம் உலை எரிய போதுமானது. உனக்குள் வைராக்கியத்தை வளர்த்துக் கொள். எல்லாவற்றையும் நான் பெறுவேன் என சபதமெடு. நிழல் ஒருநாள் கனர் ஆகும். அப்போது உன் பக்கம் வெளிச்சம் வரும். வரும் எல்லாம் வரும்.

K. வாணி, புன்னாலைக்கட்டுவன்

அன்பின் வியாசர் அண்ணா!

கூந்தல் நெடுத்தவள் குடிக்கு உதவாதாமே உண்மையா வியா அண்ணா?

கௌரவர் உதிரத்தை பூசியே என் தலையை அள்ளி முடிவேன் என்று சபதமிட்ட பாஞ்சாலியும், என் கணவன் கள்வனா என சோழ மன்னனை எதிர்த்து நின்று மதுரையை எரித்த கண்ணகியும் தற்காத்து தற்கொண்டான் பேணி தகை சார்ந்து சொற் காத்து சோர்விலாள் பெண் என கற்பிலே உயர்ந்து நின்ற சீதையும் எந்த வகையிலம்மா குடும்பத்திற்கு உதவாமல் போய்விட்டார்கள்.

யாழ்.மண்ணில் தமிழ் வளர்த்த ஸ்ரீ லஸ்ரீஆறுமுக நாவலர் பெருமானின் உருவச் சிலை நல்லூர் முருகப் பெருமானின் தெற்குப் பக்கமாக முதன்முதலாக பிரதிஷ்டை செய்யப்பட்ட காலம் எது?

S.R. ராம்கி, உடுத்துறை

அன்பின் வியாசரே!

முகப் புத்தகப் பாவனை மாணவர்களின் கல்விக்கு முன்னுரையா அல்லது முடிவுரையா?

63 வயது ஆடவனை 17 வயது மாணவி முகப் புத்தகத்தின் நட்பில் திருமணம் செய்ததும் அவனை பிரிந்து வரமாட்டேன் என்று அடம் பிடித்ததும் முன்னுரையா அல்லது முடிவுரையா?

நம் மகாபாரத இதிகாசத்தில் தங்களை மிகவும் கவர்ந்த இடம் எது?

### கொஞ்சம் சிரிங்கப்பா...




சு.ஜெயரூபன், பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

நம் மகாபாரத இதிகாசத்தில் தங்களை மிகவும் கவர்ந்த இடம் எது?

கர்ணனும் துரியோதனன் மனைவியும் தாயும் விளையாடிக் கொண்டிருக்கும் போது துரியோதனன் அங்கு வருகிறான். துரியோதனனைக் கண்ட மனைவி அவசரமாய் எழுகிறாள். துரியோதனனை காணாத கர்ணன் துரியோதனனின் மனைவியை அமரும்படி பிடித்து இழுக்கிறான். அவனின் இடுப்பில் இருந்த முத்து மாலை அறுந்து முத்துக்கள் சிந்திக்கிடக்க துரியோதனன் கர்ணனைப் பார்த்து கொஞ்சமேனும் சந்தேகம் கொள்ளாமல் "பொறுக்கவா கோர்க்கவா?" எனக் கேட்கிறான். தற்கால கணவன்மார்களும் அவர் சிநேகிதர்களும் பார்த்து திருந்த வேண்டிய இடம்?

யு.வளர்மதி, இருபாலை

அன்பின் வியா அண்ணா!

நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தினை படிக்க சம்மதிக்கும் பெற்றோர்கள் ஏன் நடிக்க விடுவதில்லை சற்று சொல்லுங்கள்.

வாழ்க்கை நாடகமாகப் போய்விடக் கூடாது என்பதற்காக.

ப.ஹரினி, யாழ்ப்பாணம்

அன்பின் வியா **Sir!**

இந்தியாவின் அதிரடி துடுப்பாட்டக் காரரான விராட் கோலியின் விலாசம் இருந்தால் தருவீர்களா?

Mr. Prem Kohli Virat Kohli,
Indian Cricket Player,
Uttam Nagar, New Delhi, India.

சி.சிவரூபன், புன்னாலைக்கட்டுவன்

**Hi Dear** வியாசர் சேர்!

பக்திக்கு பலி கேட்பவனா அல்லது பசிக்கு உணவு கொடுப்பவனா கடவுள்?

**Tel Me Sir Tel Me**

ஒருமுறை அன்னை திரேசா ஏழைக் குழந்தைகளுக்கு உணவுக்கு உதவி கோரி வீதியோரத்தில் கையேந்தி நின்றார். ஒரு கோடீஸ்வரனின் காரை மறித்து கையை நீட்டினார். அந்தக் கோடீஸ்வரன் நீட்டிய கையில் காறி எச்சிலை உமிழ்ந்தான். அன்னை திரேசா எச்சிலை தன் ஆடையில் துடைத்துவிட்டு நீங்கள் உமிழ்ந்த எச்சிலை நான் வைத்துக் கொள்கிறேன். ஏழைக் குழந்தைகளுக்கு ஏதும் கொடுங்கள் என்று கேட்டார். இப்போது சொல்லுங்கள்.

பக்திக்கு பலி கொடுப்பதிலா?

பசிக்கு உணவு கொடுப்பதிலா இறைவன் இருக்கிறான் என்று?

தயா.மோகனரூபன், சுழிபுரம்

**Hi** வியா அண்ணா!

மோடியின் ஆட்சி ஈழ தமிழர் சுதந்திரத்தின் தேடலாக அமையுமா?

எதையெல்லாம் ஈழத்தமிழன் அதிகம் நம்பினானோ அவையெல்லாம் ஏமாற்றத்தில் முடிந்ததுதான் வரலாறு. ஏதோ மோடி நம்மை தேடி வந்து நம் நாடி பிடித்து நலம் விசாரிப்பார் என நம்புகிறோம். கடவுளே இதையேனும் பொய்ப்பிக்காமல் மெய்ப்பித்து விடு?

கிரு. செந்தூரன், பருத்தித்துறை

**Hai King Of the answer** வியாசரே!

எல்லா வாசகர்களினதும் கேள்விக்கு பதில் அளிக்கும் நீங்கள் எப்பவாவது வாசகர்களிடம் கேள்வி கேட்க நினைத்ததுண்டா...?

தங்களின் கேள்விகளுக்கு எம்மால் தரப்படும் பதில் தங்களை திருப்தியடைய வைக்கிறதா என்பதை நாம் எப்படி அறிவது எனும் கேள்விதான் அடிக்கடி எழும்

## சமூகத்திற்கு இடையூறு விளைவிக்கும் இணையத்தளங்கள் தடை செய்யப்படும்

## பாராளுமன்றில் ஊடக அமைச்சர்

(கொழும்பு)

அவதூறு செய்யும் நோக்கில் செயற்பட்டு வரும் இணையத் தளங்கள் தடை செய்யப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தனிப்பட்ட நோக்கங்களுக்காக நபர்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தி அவதூறு செய்யும் இணைய தளங்களை தடை செய்ய வேண்டுமென ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இணையத் தளங்களை தடை செய்யுமா என எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாகரிகமான சமூகத்திற்கு இடையூறாக அமைந்துள்ள இணையத்தளங்களை தடை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் இந்த விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் கேள்வி எழுப்பும் எதிர்க்கட்சி உறுப்பினர்களது நற்பெயருக்கு களங்கம் ஏற்படக் கூடிய வகையிலும் சில வேளைகளில் இணைய தளங்களில் தகவல் வெளியிடப்படக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (2)

## சேக்கிழார் சுவாமிகள் குருபூசை

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் சேக்கிழார் சுவாமிகள் குருபூசை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் முன்பள்ளி மண்டபத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சுப்பிரமணியம் முரளிதரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை திருமதி. நாச்சியார் செல்வநாயகம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. செல்வகுமார் நேசரட்ணம், கௌரவ விருந்தினராக சில்லாலை வடக்கு ஜே/148, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் யோ. வலன்ரைன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். அன்றைய தினம் சேக்கிழார் திருவுருவப் படத்திற்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெறும்.

மேலும் பக்தி நனிசொட்டப் பாடிய சேக்கிழார் எனும் தொனிப்பொருளில் சைவப்புலவர் ச.நவநீதனின் விசேட சொற்பொழிவும் அறநெறிப் பாட [illegible] (2)

## இணையத்தளங்கள் முடக்கம் மக்களின் உரிமை மறுப்பு

## ஐ.தே.க.பொதுச் செயலாளர்

(கொழும்பு)

இணையத் தளங்கள் முடக்கப்படுவதன் மூலம் மக்களின் தகவல் அறிந்து கொள்ளும் உரிமை மறுக்கப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எட்டு இணைய தளங்கள் முடக்கப்பட்டுள்ளன. சில இணைய தளங்களில் கடமையாற்றிய ஊடகவியலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் அமுல்படுத்தப்படும் சட்டத்தின் அடிப்படையில் இணைய தளங்கள் முடக்கப்படவில்லை. தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக்குழுவின் உத்தரவிற்கு அமைய இணைய தளங்கள் முடக்கப்பட்டுள்ளன.

இணையத் தளங்கள் முடக்கப்பட்டதன் மூலம் மக்களின் தகவல் அறிந்து கொள்ளும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

இன்று தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது. மக்கள் தகவல்களை பெற்றுக்கொள்ள எடுக்கும் முயற்சிகளை தடுக்க முடியாது என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்றால் அது ஒரு துணிச்சல் நிறைந்த விடா முயற்சி என்றுதான் பொருள்.
- ஹெலன் கெல்லர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சர்வதேச விசாரணையில் தமிழர்கள் துணிந்து சாட்சியமளிக்க வேண்டும்

## விநாயகமூர்த்தி எம்.பி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இடம்பெறவுள்ள ஐ.நாவின் சர்வதேச விசாரணையில் தமிழ் மக்கள் அனைவரும் துணிந்து சாட்சியமளிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்.ஊடாக அமையத்தில் நேற்று காலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழத்தமிழ் மக்கள் கடந்த பல வருடங்களாக இனப்பிரச்சினை தீர்க்கப்படாமலும் தமது சொந்த நிலங்களுக்குச் சென்றுகுடியேறிக் கொள்ளமுடியாமலும் நாளுக்கு நாள் தமது காணிகளை பறிகொடுத்துக் கொண்டும் பரிதாபமான நிலையில் இருக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் வட, கிழக்கு தொடர் நிலப்பரப்பினை இல்லாமல் செய்வதற்கு திட்டமிட்ட காணி பறிப்பு மேற்கொள்ளப்பட்டு மக்களிடம் இருந்து பறிக்கப்படும் காணிகளில் சிங்களக் குடியேற்றம் செய்யப்பட்டு வருகின்றது. இச் செய்ற்பாடுகள் மட்டக்களப்பில் இருந்து சம்பூர் முல்லைத்தீவு ஊடாக வலி.வடக்கு வரை இந்த நிலைமை உள்ளது.

அதையும் விட தற்போது யாழ்ப்பாணத்திலும் ஆங்காங்கே இராணுவ படைமுகாம்கள் அமைப்பதற்கு நிலப் பறிப்புகள் செய்யும் நடவடிக்கை மிக மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில் தொழிலுக்காக வடபுலத்துக்கு வந்து சென்ற சிங்களவர்கள் தற்போது இராணுவத்தின் துணையுடன் இங்கு நிரந்தரமான குடியிருப்புக்களை ஏற்படுத்தி வசித்து வருகின்றனர்.

இது போதாதென்று இராணுவத்தின் குடும்பங்களையும் இங்கு கொண்டு வந்து குடியேற்றி வருகின்றார்கள். இன்னும் சிறிது காலங்களில் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்தார்களா என்ற கேள்வி வருங்காலத்தில் எழுப்பப்படும் நிலை வரும்.

இந்தச் பிரச்சினையை யாருக்குச் சொல்வது என்று தெரியாமல் உள்ளது. எங்களுடைய பிரச்சினையைக் கேட்டு அதற்கான பரிகாரங்களைச் செய்வதற்கு ஒருவருமில்லை.

ஐ.நாவில் இருந்து 13 பேர் அடங்கிய குழு இங்கு வருவது போரின் போது நடைபெற்ற விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு. அவ்வாறு வருகை தரும் அக் குழுவினரிடம் தமிழ் மக்களாகிய நாங்கள் யுத்த காலத்தில் நடைபெற்ற விடயங்கள் தொடர்பாக சாட்சியமளிப்பதைப் போன்று, யுத்தத்திற்கு பின்னர் தற்போது தமிழர் தாயத்தில் நடைபெற்று வரும் பிரச்சினைகள் தொடர்பாகவும் சாட்சியங்கள் வழங்க வேண்டும்.

இலங்கைக்கு வருகை தரும் ஐ.நா குழுவினரிடம் மக்கள் சாட்சியமளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். அதற்காக வேலைத்திட்டங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயமாக மேற்கொள்ளும். எனவே தமிழ் மக்கள் அனைவரும் ஐ.நா குழு முன்னிலையில் சாட்சியமளிக்க தயாராக வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (செ-4)

# ஜெயலலிதாவின் கோரிக்கையால் சினமேறிப் போயுள்ள இலங்கை அரசு

தனித்தமிழீழம் அமைப்பது தொடர்பில் ஈழத் தமிழர்களிடமும் புலம்பெயர் தமிழர்களிடமும் வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இதனை ஐக்கிய நாடுகள் சபை ஊடாக நிறைவேற்ற இந்தியா முன்வர வேண்டும் என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, பிரதமர் மோடியைச் சந்தித்தபோது கேட்டிருந்தார்.

செல்வி ஜெயலலிதாவின் இக் கோரிக்கையை பிரதமர் மோடி முதல் இலங்கை அரசுவரை எதிர்பார்த்திருக்கவில்லை. பிரதமர் மோடியைச் சந்திக்கும் முதல்வர் ஜெயலலிதா, நிச்சயமாக ஈழத்தமிழர்களின் பிரச்சினை குறித்துப் பேசுவார் என்பது எதிர்பார்க்கப்பட்டதே.

ஆனால் இப்படியொரு குண்டைத்தூக்கிப் போடுவார் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அதிலும் மோடி பிரதமரானால் இலங்கை அரசுக்கு இறுக்கமான அழுத்தம் ஏற்படும் என்பது பொதுவான எதிர்பார்ப்பு.

காங்கிரஸ் ஆட்சியில் சோனியாவும் மன்மோகனும் இலங்கை அரசுடன் சேர்ந்து நடித்தது போல மோடி நடந்து கொள்ளமாட்டார்.

எனவே, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். அதிலும் குறிப்பாக 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்த வேண்டும் என்றெல்லாம் மோடி, இலங்கை அரசுக்குக் கண்டிப்பாகக் கூறிவைப்பார் என்று ஊகித்திருந்த வேளை;

பிரதமர் மோடியின் பதவியேற்பில் கலந்து கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமர் மோடியைச் சந்தித்தபோது, 13ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்துமாறு, மோடி வலியுறுத்திக் கூறியதான செய்திகளும் வெளியாகி உள்ளன.

பிரதமர் மோடியின் பதவியேற்பில் கலந்து கொள்வதன் மூலம் ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தலாம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நினைத்திருக்கலாம். ஆனாலும் மோடியின் பதவியேற்பில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்கிறார் என்பதால்; தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, தமிழ் நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்கள், நடிகர் ரஜனிகாந் ஆகியோர் கலந்து கொள்ளாமல் விட்டதுடன் வை.கோபாலசாமி புதுடில்லியில் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டுக் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன் காரணமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வருகை மோடிக்கு மன மகிழ்வை கொடுத்திருக்கும் என்று சொல்ல முடியாது.

நிலைமை இதுவாக இருக்க; பிரதமர் மோடியை, தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா சந்தித்து, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை பற்றிப் பிரஸ்தாபித்தார். ஆனால் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுங்கள் என்று ஜெயலலிதா மோடியிடம் கேட்கவில்லை. மாறாக இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு என்ன? என்பதை அவராகவே எடுத்துக் கூறினார்.

இங்குதான் இலங்கை அரசு பதறிப் போக வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா, பிரதமர் மோடியைச் சந்திப்பார் என்பதும் அவ்வாறு சந்திக்கும் போது, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவுமாறு கேட்பார் என்பதுமே எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

ஆனால் ஜெயலலிதாவோ தனித்தமிழீழத்திற்குப் பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று பிரதமர் மோடியிடம் கேட்டுள்ளார்.

இங்குதான், நாங்கள் 13ஐ அமுல்படுத்தியிருக்கலாம் என்று இலங்கை அரசைச் சிந்திக்க வைக்கின்றது.

இச் சிந்தனை காலம் கடந்ததா? என்பதை பிரதமர் மோடிதான் முடிவு செய்யவேண்டும்.

# மோ.சைக்கிள் விபத்தில் வயோதிபர் படுகாயம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் 55 வயதுடைய ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் நெல்லியடி சந்தைக்கு முன்னால் இடம்பெற்றுள்ளது.

இதில் கரணவாய் பகுதியைச் சேர்ந்த எஸ்.ஆணந்தராஜா (வயது 55) என்பவரே காயமடைந்தவராவார்.

மேலும் தெரியவருவதாவது, குறித்த நபர் சந்தையில் மரக்கறிகளை கொள்வனவு செய்து விட்டு வீதியை கடந்த வேளை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் பிரஸ்தாப நபர் மீது மோதியது.

தலையில் பலமாக அடிபட்டதால் குறித்த நபர் நிலைகுலைந்து வீழ்ந்து படுகாயங்களுக்கு இலக்கினார்.

இதேவேளை மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் கீழே வீழ்ந்ததில் காயம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப் பெற்றதை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து உடனடியாக காயமடைந்த இருவரையும் மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

குறித்த வீதியில் மஞ்சள் கடவை இல்லாததன் காரணமாக மேற்படி விபத்து சம்பவம் நேர்ந்ததாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர். (2-60)

## நீராவியடி ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய ஏழாம் திருவிழா இன்று


### நீராவிக் குளக்கரையான் திருநாள் ஏழு ஹம்ச வாகனத் திருக்காட்சி



கல்லாலின் குடையமர்ந்த கற்றோரின்
பொருண்முடிப்பு
நாவாளும் நாயகியின் நா வாழும்
மதகளிறு
நீர் விலத்திப் பாலுண்ணும் குருகின்
மேலேறி
த்விஜ கணபதியாய்க் காட்சி
தருகின்றான்! இன்று

*கஜவதனகுஹராஜனார்*

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### வேண்டிப் பணிந்திடடி

ஆன்மாவுக் கயலில்லை யப்படியே யுள்ளதடி
வீண்வாதம் விட்டிடடி- சின்னத்தங்கம்
வேண்டிப் பணிந்திடடி

# மற்றவர்களின் முன்னேற்றத்திற்கு நாம் முதுகெலும்பாவோமா?

## பரமபிதா காட்டிய பாதை

இன்று நமக்கு தரப்படும் பைபிள் பகுதியில்: "யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!"என்று வாழ்த்தினார்.


இவ்வாறு சொல்லிய பின் அவர் தம் கைகளையும் விலாவையும் அவர்களிடம் காட்டினார். ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள்

இங்கு இயேசுவின் சிறுவயது மரணத்தினால் அஞ்சி நடுங்கி தமக்கும் இவ்விதமாக நடந்து விடுமோ என்று அந்த அறையில் ஒளிந்திருந்த அச்சீடர் மத்தியில் தோன்றிய இயேசு.. இவ்விதமாக இயேசு தமது இருப்பினை அவர்களுக்கு உணர்த்தி அவர்களை திடப்படுத்தி நம்பிக்கையூட்டுகிறார்.

இதோ, என் கைகளைப் பாருங்கள் என்று கூறியதை இன்றைய நற்செய்தியில், நினைவு கூறுகிறோம்.

இயேசு நமக்கு நல்லதொரு நண்பராக உள்ளார். வாழ்க்கையில் எம் வெற்றிக்குப் படியாக, ஏணியாக பின்புலத்திலிருந்து உதவிய நட்பின் கரங்களை நாம் மறந்துவிடுகின்றோம்.

வாழ்க்கையில் நாம் முன்னேற தம்மையே காயப்படுத்தி தமது தியாக வாழ்க்கை மூலம் நமக்கு அன்பைப் பொழிந்து உதவியவர்களை நினைத்துப் பார்க்கிறோமா. நம்முடைய வருங்கால வெற்றிகளுக்கும் நமக்குமாக தன்னுயிரையே சிலுவையில் தந்து ஆணிகள் துளைத்த அந்தக் கரங்களைக் காட்டும் இயேசுவின் கரங்களின் தியாகத்திற்கு எமது சமர்ப்பணம் என்ன?



**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

மற்றவர்களுக்கு நம்பிக்கையூட்டும் சாட்சிகளாக நாமும் இருக்கிறோமா? அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுகிறோமா? சிந்திப்போம்... செயற்படுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரப்பந்தாட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக


மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்க அனுசரணையுடன் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்றினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 077 22 69 817, 077 22 69 818 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை கொள்ளவும்.

இச் சுற்றுப் போட்டிகள் யாவும் A,B பிரிவுகளாக இடம்பெறவுள்ளன. (க)

# நீலங்களின் கிரிக்கெட் போட்டி; கிளிநொச்சி ம.மா.வித்தி வெற்றி





நீலங்களின் சமர் என வர்ணிக்கப்படும் கிளிநொச்சியின் இருபெரும் பாடசாலைகளான கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய தேசிய பாடசாலைக்கும் கிளிநொச்சி இந்துக்கல்லூரிக்கும் இடையிலான மாபெரும் துடுப்பாட்டப்போட்டி அண்மையில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி களத்தடுப்பாட தீர்மானித்தது. துடுப்பாடத் தொடங்கிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆட்டநேர முடிவில் சகல இலக்குகளையும் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இரண்டு நாட்களாக நடைபெற்ற இந்தப் போட்டியின் ஆட்டத்தின் முடிவில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய தேசிய பாடசாலை அணி நீலங்களின் சமரில் வெற்றி கண்டது. (க)

# அமரர் டேமியன் ஞாபகார்த்த கிரிக்கெட்; சண்டிலிப்பாய் ஈ.டி.எஸ் வி.கழகம் சம்பியன்





சண்டிலிப்பாய் கல்வளை றொக் விளையாட்டுக்கழகம் அமரர் டேமியன் ஞாபகார்த்தமாக நடத்திய அழைக்கப்பட்ட மென்பந்துத். துடுப்பாட்டக் கழகங்களுக்கிடையில் நடத்திய அணிக்கு 7 பேர் 6 ஓவர் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் சண்டிலிப்பாய் ஈ.டி.எஸ் விளையாட்டுக் கழக அணி சம்பியனாகியது.

இவ் இறுதிப் போட்டி சண்டிலிப்பாய் ஈ.டி.எஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் ஈ.டி.எஸ் விளையாட்டுக் கழக அணியும் உதயதாரகை B அணியும் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய உதயதாரகை B அணி 6 பந்துபரிமாற்றங்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கோவு 27, றொக்ஷன் 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் குமரன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

64 என்ற வெற்றியிலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சண்டிலிப்பாய் ஈ.டி.எஸ் விளையாட்டுக் கழகத்தினர் 5.3 பந்துபரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இதில் சனோசன் ஐந்து ஆறு ஓட்டங்கள் அடங்கலாக அதிரடியாக 43 ஓட்டங்களையும், கிரிஷான் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

சுரேன் மற்றும் கோவு தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

3 ஆம் இடத்திற்கான போட்டியில் சங்கானை உதயதாரகை A அணியும் அளவெட்டி நண்பர் அணியும் மோதியது.

முதலில் துடுப்பாடிய அளவெட்டி நண்பர் அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்த உதயதாரகை A அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்று போட்டியில் தோல்வியைத் தழுவியது.

இச்சுற்றுப்போட்டியின் தொடர் ஆட்ட நாயகனாகவும் இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாகவும் சண்டிலிப்பாய் ஈ.டி.எஸ் விளையாட்டுக் கழக அணியின் சனோசன். தெரிவு செய்யப்பட்டார். (க-23)

## ஜே.பி.எல்லின் இன்றைய ஆட்டங்கள்



யுவர் பிரண்ட் பவுண்டேசனால் நடத்தப்படும் ஜப்னா பிரிமியர் லீக்கில் இன்று காலை 8 மணிக்கு மானிப்பாய் பரீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஶ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதனை தொடர்ந்து மதியம் 11 மணியளவில் கிராஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யூனியன் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

பின்னர் பிற்பகல் 2 மணிக்கு ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மூளாய் விக்டொரி விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. (க)

## இன்றைய போட்டி

(தும்பளை)

உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவுடன் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திக்கம் இளைஞர்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அன்பாலயம் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. (க-19)

# கிளிநொச்சி மகா வித்தியாலயம் வெற்றி

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்படும் 15 வயதுப் பிரிவினருக்கான பிரிவு (III) இற்கான போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுள்ளது.

ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இப் போட்டியில் யாழ்/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியும் கிளிநொச்சி மகாவித்தியாலய அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளி. ம.வி. அணித் தலைவர் மிதுசன் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.


இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவ் அணி 39.2 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கிளி ம.வி. சார்பாக சனுசன் சிறப்பாக ஆடி அரைச்சதம் கடந்து 54 ஓட்டங்களைப் பெற்றார். துவாரகன் 25, நிருத்திகன் 16 என ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் டிறிபேக் கல்லூரி சார்பாக கோபிசாந் சிறப்பாக பந்துவீசி 5 இலக்குகளையும் பிரதீப் 2, ஆதித்தன், பதுமன் தலா ஒரு இலக்குகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு 174 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு அதிரடியாக ஆட முனைந்த டிறிபேக் கல்லூரி அணி 17.4 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 118 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதனால் கிளி ம.வி. அணி 55 ஓட்டங்களால் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

டிறிபேக் சார்பாக துடுப்பாட்டத்தில் பிரதீப் 18, ஜோஜ் 18, சாம்சன் 13, லக்சிகன் 13, நியூசன் 10 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் கிளி ம.வி. சார்பாக நிருத்திகன் 3, மிதுசன் 2, குருகுலன் 2, டனுஜன், அனோஜ் தலா ஒரு இலக்குகளை வீழ்த்தினர். (க)








சண்டிலிப்பாய் பிரதேசமட்ட முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது...

(படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரெஞ் ஓபன் டென்னிஸ்

# மகளிர் ஒற்றையர் பிரிவில் சம்பியனானார் ரஷ்யாவின் ஷரபோவா



ரொமேனியாவின் சிமொனா ஹாலெப்பை வீழ்த்தி பிரெஞ் ஓபன் பட்டத்தை சுவீகரித்தார் ரஷ்யாவின் டென்னிஸ் புயல் மரியா ஷரபோவா.

பிரெஞ் ஓபன் டென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவுக்கான இறுதி ஆட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் ரஷ்யாவைச் சேர்ந்த மரியா ஷரபோவாவும் ரொமேனியாவின் சிமொனா ஹாலெப்பும் மோதினர். முதல் செட்டில் இருவரும் ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 57 நிமிடங்களுக்கு நீடித்த இந்த செட்டை ஷரபோவா சிறப்பாக விளையாடி 6:4 என்ற புள்ளிகள் கணக்கில் கைப்பற்றினார்.

இரண்டாவது செட்டில் இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்லர் என்பது போல் விளையாடினர். கிட்டத்தட்ட 72 நிமிடங்கள் நீடித்த 2-வது செட்டில் 6-6 என்ற சமநிலை ஏற்பட்டது. ரைபிரேக்கரில் 5-7 என்ற கணக்கில் ஹாலெப் கைப்பற்றியதால் அந்த செட்டை 6-7 என்ற புள்ளிகள் கணக்கில் ஷரபோவா இழந்தார்.

பின்னர் மூன்றாவது செட்டில் மீண்டும் தனது திறமையை நிருபித்த ஷரபோவா 53 நிமிடங்களில் 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 2-வது தடைவையாக (2012, 2014) பிரெஞ் ஓபன் பட்டத்தை கைப்பற்றினார்.



இதன்மூலம் 5-வது முறையாக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்று சாதனை படைத்தார்.

## வடக்கு, கிழக்கு ஊடகவியலாளர்களுக்கான

# ஊடக செயலமர்விற்கு எதிராக ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம்

வடக்கு கிழக்கு ஊடகவியலாளர்களுக்கு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் குறித்து புலனாய்வு செய்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது மற்றும் அது தொடர்பில் ஊடகங்களில் அறிக்கையிடல் என்பவை குறித்து நீர்கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நடத்தப்பட்டு வந்த செயலமர்வு இரண்டாவது முறையாகவும் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. அதேவேளை இச்செயலமர்வுக்கு எதிராக ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் பங்கு கொண்ட ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

ட்ரான்பேரன்சி இன்டர்நெசனல் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த செயலமர்வு, நீர்கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியிருந்தது.

இச் செயலமர்வில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பங்கேற்றிருந்தனர். இந்நிலையில் தேசிய நல்லிணக்கத்துக்கான அமைப்பினர் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாடத்தில் நேற்று ஈடுபட்டிருந்த அதேவேளை இச்செயலமர்வு இடம்பெற்ற ஹோட்டலையும் முற்றுகையிட்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில்,சுமார் 1000 ற்கும் அதிகமானோர் கலந்து கொண்டதுடன் ஊடகவியலாளர்கள் இருந்த ஹோட்டலை முற்றுகையிட்டு அவர்களை அங்கிருந்து வெளியே துரத்தும் முயற்சியிலும் குதித்திருந்தனர்.

இதேவேளை அமெரிக்காவிடம் பணத்தை பெற்றுக்கொண்டு இலங்கைக்கு அவதூறு ஏற்படுத்தும் விதத்தில் செயற்படுவதாகவும் ஆர்பாட்டக்காரர்கள் கோஷமிட்டுள்ளனர்.


எனினும், குறித்த ஆர்ப்பாட்டக்காரர்களை ஹோட்டலுக்கு நுழைய விடாமல் பொலிஸார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தையடுத்து நட்சத்திர ஹோட்டலிலிருந்து வெளியேற முடியாமல் ஊடகவியலாளர்கள் நேற்று அச்சத்துடன் காணப்பட்டன.

இந்நிலையில், ஊடகவியலாளர்களுக்கான இதேமாதிரியான செயலமர்வு ஒன்று ஏற்கெனவே பொலநறுவையில் கடந்த மாதம் நடத்தப்பட்டபோது அதனை பொலிஸார் தடுத்து நிறுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-6)

## களிமண் நாயகன் யார்?

# நடால், ஜோகோவிச் இன்று மோதல்



பிரெஞ் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் ரபெல் நடால், செர்பியாவின் நோவாக் ஜோகோவிச் இன்று மோதுகின்றனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

நேற்றுமுன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரை யிறுதியில், உலகின் 'நம்பர்-1 வீரரும் நடப்புச் சம்பியனுமான ஸ்பெயினின் ரபெல் நடால், பிரிட்டனின் ஆன்டி முர்ரேயை எதிர்கொண்டார்.

அபாரமாக ஆடிய நடால் 6:3, 6:2, 6:1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, 9-வது முறையாக (2005-2008, 2010-2014) இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

இதற்கு முன்னதாக எட்டு முறை இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ள நடால், அனைத்திலும் வெற்றிபெற்று கிண்ணத்தை கைப்பற்றியுள்ளார்.

மற்றொரு அரையிறுதியில், உலகின் நம்பர்-2 வீரரான செர்பியாவின் நோவாக் ஜோகோவிச் 6:3, 6:3, 3:6, 6:3 என்ற செட் கணக்கில் லத்வியாவின் எர்னஸ்ட்ஸ் குல்பிஸை வீழத்தி, 2-வது முறையாக (2012, 2014) இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

இந்நிலையில் இன்று நடைபெறவுள்ள இறுதிச்சுற்றில் நடாலும், ஜோகோவிச்சும் மோத உள்ளனர்.

இப்போட்டியில் நடால் வெற்றி பெறும் பட்சத்தில் ஜோன் போர்க்கை பின்னுக்குத் தள்ளி தொடர்ந்து ஐந்து முறை பிரெஞ்சு ஓபன் பட்டம் வென்றவர் என்ற பெருமையைப் பெறுவார்.

# இப்படி ஆயிடுச்சே... ஏமாற்றத்தில் டி வில்லியர்ஸ்



தென்னாபிரிக்க அணியின் டெஸ்ட் அணித் தலைவர் பொறுப்பு தனக்கு கிடைக்காதது பெரிய ஏமாற்றமாக உள்ளது என டி வில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் டெஸ்ட் அணித் தலைவரான கிரேம் ஸ்மித் ஓய்வுபெற்றதையடுத்து, அம்லா, டி வில்லியர்ஸ் இடையே டெஸ்ட் தலைமைப் பொறுப்பிற்கு கடும் போட்டி நிலவி வந்த நிலையில், ஹசிம் அம்லா அணித்தலைவராக நியமிக்கப்பட்டார்.

இதுகுறித்து டி வில்லியர்ஸ் கூறுகையில், எனக்கு டெஸ்ட் அணித் தலைவர் பதவி கிடைக்காதது பெரிய.ஏமாற்றத்தை கொடுத்துள்ளது.

எல்லோருக்கும் கனவுகளும், நம்பிக்கைகளும் இருக்கும் அது நிறைவேறும் என்ற ஆசையும் இருக்கும், நான் சூழ்நிலையை புரிந்து கொள்கிறேன்.

ஆனால் இந்த ஏமாற்றம் எனக்கும் அம்லாவுக்கும் இடையே வராமல் நான் பார்த்துக் கொள்வேன்.

இது எனது ஆட்டத்தையும், அணியில் எனது பொறுப்பையும் பாதித்தால் அது முட்டாள்தனமானது, அம்லாவுக்கு எனது வாழ்த்துக்கள், எனது முழு ஒத்துழைப்பு அவருக்கு எப்போதும் உண்டு என்று தெரிவித்துள்ளார்.

## படையினரால்...

குறிப்பிட்டுள்ளார்.

போரில் ஈடுபட்ட வீரர்கள் பொது மக்களுடன் பழகும்போது மேற்கொள்ள வேண்டிய பண்புகளை அதிகாரிகள் அவர்களுக்கு வழங்க வேண்டும்.

இதேவேளை போரின் பின்னர் படைகளில் இருந்து சுமார் 30 ஆயிரம் வீரர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இவர்களே அதிக குற்றங்களில் ஈடுபடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் இலங்கையில் தற்போதுள்ள 350, 000 படையினரையும் பாதிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரியவின் தகவல்படி, தற்போது இராணுவ வைத்தியசாலையில் 200 வீரர்கள் வரை, மனநல வாட்டுகளில் தங்கி சிகிச்சை பெறுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் 2012 ஆம் ஆண்டு இராணுவத்தில் இருந்து விலகிய சரத் அபேக்கோன் என்ற இரா்ணுவ வீரர், தாம் வீதியில் செலகின்ற போது நாற்றம் வீசினால் உடனடியாக பழைய போர் நினைவுகளே வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

தம்மால் பொதுமக்களுடன் இயல்பு வாழ்க்கைய்ய வாழ முடியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-6)

## 42 இந்திய...

தார்.

தலைமன்னார் கடற்பரப்பினுள் 8 இழுவைப் படகுகளில் வந்து மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே இந்திய மீனவர்கள் 42 பேரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை கடற் தொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் எனவும் அதன் பின்னர் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்படுவார்கள் எனவும் கூறப்படுகின்றது.

இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி தெரிவானதன் பின்னர் இலங்கைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 150 இற்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவிற்கமைய விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களும் இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கைகளும் தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டே வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## ஐ.நாவின்...

டுள்ளதால், அவரை பான் கீ மூன் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்துள்ளார்.

சிரியா உள்ளிட்ட மேற்காசியா மற்றும் வட ஆபிரிக்க நாடுகளின் மனிதவுரிமை நிலைமைகளை மேம்படுத்துவதைக் கருத்தில் கொண்டு ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நாவின் புதிய மனிதவுரிமைகள் ஆணையாளராக இளவரசர் சையிட் அல் ஹுசைனை பான் கீ மூன் தெரிவு செய்திருந்தாலும், அதற்கான அங்கீகாரத்தை ஐ.நா பொதுச்சபையில் பெறவேண்டும்.

ஐ.நாவின் புதிய மனிதவுரிமைகள் ஆணையாளராக ஐ.நாவில் சிறப்பு அறிக்கையாளராக தற்போது பணியாற்றி வரும் மார்சுகி தாருஷ்மன் மற்றும் கிழக்குத் திமோரின் முன்னாள் ஜனாதிபதி ராமோஸ ஹோர்தா ஆகியோரில் ஒருவர் நியமிக்கப்படலாம் என்று முன்னர் செய்திகள் வெளியாகி இருந்தன.

ஆயினும், மேற்காசியாவைச் சேர்ந்த இளவரசர் சையிட் அல் ஹுசைனையே ஐ.நாவின் புதிய மனிதவுரிமைகள் ஆணையாளராக ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவு செய்துள்ளார்.(செ-6)

## பதுங்குகுழி...

புலனாய்வாளர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் இந்த பதுங்குகுழி கண்டு பிடிக்கப்பட்டு இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து குறித்த பதுங்குகுழியைத் தோண்டிப் பார்த்த போது படிக்கட்டுகளுடன் கூடியதாக இந்த பதுங்குகுழி அமைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பங்கர் விடுதலைப் புலிகள் பயன்படுத்திய பங்கராக இருக்கலாம் என இராணுவத்தினா தெரிவித்ததாக பொலிஸார் கூறினார்.

மேலும் குறித்த வீட்டின் உரிமையாளர்கள் இங்கிலாந்தில் வசித்து வரும் நிலையில் அவ் வீட்டில் தற்போது வாடகைக்கு குடியிருப்பாளர் குடியிருப்பதாகவும் அவர்கள் தமக்கு எதுவும் தெரியாதெனவும் கூறியதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (செ-6)

## துப்பாக்கிகள்...

மாலை தமக்கு வந்த தகவலை அடுத்து இராணுவத்தினரின் உதவியுடன் குறித்த வீட்டை சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய போதே தாம் அவற்றை கைப்பற்றியதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் அந்த வீட்டில் இருந்த 22 வயதுடைய இளைஞர் ஒருவரையும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்துள்ளதாகவும் குறித்த இளைஞனை கொழும்பில் இருந்து வருகை தரவுள்ள ப்யங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்க உள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசாரணைக்கு...

இடம்பெற்றுள்ளது.

நவநீதம்பிள்ளையின் ஆரம்ப உரையில், இலங்கையில் போர் முடிவுக்கு வந்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்த நிலையிலும், தீவிரவாதம் மற்றும் போரினால் ஏற்பட்ட காயங்கள் இன்னமும் ஆறவில்லை என்பதை கவனிக்கிறேன்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேறப்பட்ட தீர்மானத்தின்படி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான விரிவான விசாரணைகளை மேற்கொள்வதற்கென எனது பணியகம் விசாரணைக் குழுவொன்றை நியமித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் நம்பகமான உண்மை கண்டறியும் இந்த விசாரணைப் பொறிமுறையுடன் ஒத்துழைக்குமாறு இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிக்கிறேன் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)

## இடம்...

சலோகா பெயானி 12ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ளார்.

2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையான காலப்பகுதியிலதான் மேற்கொண்ட ஆய்வுகள் மற்றும் விசாரணைகளின் அடிப்படையிலும், 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் 2 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம்செய்து மேற் கொண்ட விசாரணைகளின் அடிப்படையிலும் சலோகா பெயானி இந்த அறிகையை சமர்ப்பிக்கவுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த காலப்பகுதியில் சலோகா பெயானி கொழும்பு, யாழ்ப்பாணம், முல்லைத் தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களுக்குச் சென்று உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ள மக்களைச் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-6)


# வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் ஆரம்பிக்கப்படவுள்ள சுற்றுலா விடுதிக்கு (Hotel) பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. முகாமையாளர் (5 வருட (Hotel) அனுபவம் விரும்பத்தக்கது)
2. ஆண், பெண் வரவேற்பாளர்.
3. சமையலாளர்.
4. உபசரிப்பாளர்
5. அறை சுத்திகரிப்பாளர் (Room boy)

தொடர்புகளுக்கு :- 0777983933 0212221889

(C-7582)

# English Classes

☑ Spoken & Grammar for students & employees
- Special Classes
- Group Classes
- Classes for grade-1 to grade-11
- English for kids

☑ Elocution classes

Contact: NALTC,
116, Adiyapatham, Road, Thirunelvely.
Tel:-0766901516

(C-7588)

# நிரந்தர தொழில் வாய்ப்பு

எதிர்காலத்தில் நிரந்தர தொழில்வாய்ப்பினை பெற இன்றே இணையுங்கள். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம் / டொபி / பிஸ்கட் / சொக்லைட் / PVC / PAINT / பால்மா / யோகட் போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி / லேபல் / பொதியிடல் / களஞ்சியப் பிரிவுகளில் உடனடி நிரந்தர வேலைவாய்ப்பு. (வயது 18-50 ஆண், பெண்) சம்பளம் 18000 /-, to 40,000 /- உணவு + தங்குமிடம் குறைந்த விலைகளில். வருகை அன்றே வேலைக்கு செல்லலாம்.

தொடர்புக்கு :– 077 683 8231

(C-7590)

# SPOKEN ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம்

21.06.2014 மாலை 3.00

இப்பாடநெறியானது சனி/ஞாயிறு தினங்களில் மாலை 3.00 - 5.30 வரை நடைபெறும்

இலங்கையின் முன்னனி ஆங்கிலக் கல்லூரி

A1/B1/B2/IELTS

E-CITY COLLEGE OF ENGLISH

372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(வீரகாளி அம்மன் கோவில் அருகில்)

0212217106/0773400418

(C-7576)

# Personal Class-கணினி

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)

* குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்:KRC


## வட மாகாண...

நியமனக் கடிதம் நேற்று முன்தினம் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் செயலாளர் அலுவலகத்தில்வைத்து வழங்கப்பட்டது.

இதுவரை காலமும் வட மாகாண கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய வைசெல்வராஜா ஓய்வு பெற்றுச் சென்றமையை அடுத்தே அவரது வெற்றிடத்திற்கு இவருக்கு நியமனம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாண கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ள ஆர்.இராஜேந்திரன் வடமராட்சி, தீவகம், வலிகாமம் ஆகியவற்றின் கல்விப்பணிப்பாளராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (2)


# YOGIS

(Academy & Beauty Therapy, Hair Dressing & Home Science)

யாழ். பெற்றா எசன்ஸ் ஆதரவுடன்

EXHIBITION

CAKES and SUGAR CRAFT 11.06.2014

யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா அவர்களால் காலை 10 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

கேக் கண்காட்சி



திருமண அலங்கார கேக் வகைகள், பிறந்தநாள் கேக் வகைகள், ஐசிங் பூக்களின் அலங்காரங்கள் இன்னும் வித்தியாசமான கேக்களின் அலங்கார கண்காட்சி (3 நாட்கள் மட்டும்) 11.06.2014 முதல் ஆரம்பமாகிறது. கண்காட்சி 11ம் திகதி 11 மணிக்கும் 12ம், 13ம் திகதிகளில் காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை நடைபெறும்.

நடைபெறும் இடம் :- 75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக)

(C-7555)

# பூநகரியின் புகழ்மாலை நன்றி கூறுகின்றது

சரவணப்பொய்கை நிதியத்தின் அனுசரணையில் கிளி/ பூநகரி மத்திய கல்லூரியில் 05.06.2014 அன்று நடைபெற்ற பரிசளிப்புவிழா சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு பூநகரியின் புகழ் மாலை வரலாற்றுத் தொகுப்பில் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதி அனுப்பிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நடராஜா திருஞானபவன்
நடராஜா சதாநந்தபவன்
சரவணப் பொய்கை நிதியம்

(C-7594)

Tamil Air@hotmail.com

# 220ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

# திருமுருகன் கொம் நெற்

வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION | MMBL Money Master

- அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டு, அதற்கான ஆலோசனைகள்
- கனடா, லண்டன், இந்தியாவுக்கான Online Visa விண்ணப்ப சேவை
- அன்பளிப்பு பொருட்கள், உணவுப் பண்டங்களை வீட்டில் இருந்தவாறே அனுப்ப முடியும்
- 3 - 5 நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்.




இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(ஆல் சிலோனிற்கு முன்பாக)
தொ.பே.: 021 222 7835

கிளைகள்: இல.8, பிரதான வீதி, நெல்லியடி. பிரதான வீதி சங்கானை. இல.40, ஆடியபாதம் வீதி திருநெல்வேலி. இல.30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி

7 நாட்களும் எமது சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்

(6607)

# German Language Academy (ஜேர்மன் கல்லூரி)

ஜேர்மன் சுவிஸ் பொச் மொழிகள் Mr.S.கோணேஸ்வரன் அவர்களால் பல வருடங்களாக பல மாணவர்களைச் சித்தி அடையச் செய்த ஒரேயொரு ஆசிரியராவார். உங்கள் பணத்தையும் நேரத்தையும் வீண்விரயம் செய்யாமல் உங்கள் சரியான தெரிவின் மூலம் இலக்கை அடைந்து கொள்ளுங்கள்.

அவதானிப்பு :- போலியான விளம்பரங்களைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். எமது மாணவர்கள் ஒவ்வொரு பரீட்சையிலும் 90 % மாணவர்கள் முதல் தடவையிலேயே சித்தி அடைவது குறிப்பிடத்தக்கது. Note :- புதிய பிரிவுகள் 09.06.2014 காலை 11 மணிக்கு ஆரம்பமாகும்.

எமது நிறுவனத்தில் கல்வி கற்று பரீட்சைக்குத் தோற்றி சித்தி எய்திய மாணவர்கள் கற்பித்த ஆசிரியருடன் முன்னைய வலம்புரிப் பத்திரிகையில் புகைப்படத்துடன் செய்தியாக பிரசுரிக்கப்பட்டதை காணக் கூடியதாக இருந்தது.

German Language Academy
பலாலி வீதி, ஆரியகுள சந்தி, யாழ்ப்பாணம்.
T.P : 077 9707 322

(6597)

# சிங்கர் தரும் இரட்டைச் சலுகைகள்

* விலைக்கழிவு
* வட்டியின்றிய இலகுதவணைக் கொடுப்பனவு

* பழைய ஒன்றுக்கு 10,000 ரூபா அல்லது 8,000 ரூபா விலைக்கழிவு
* வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு

35,999/= (Fully Automatic - 7 kg)

* 3,750 ரூபா விலைக்கழிவு
* வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு

21,249/= (Semi Automatic - 6 kg)

அனைத்து சலவை இயந்திரங்களுக்கும் 4 வருட உத்தரவாதம்

SAMSUNG சலவை இயந்திரங்களுக்கு 25000/= வரை மாற்று முறை விலைக்கழிவு

lenovo

lenovo LEN - NB - - i3 - 4G
Intel Core i3 ($4^{th}$ Gen)
15.6"HD Display, 4 GB, 500 GB
DVD RW, Webcam, Wifi, B.T
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
ரூ. 88,899/=
காசுக் கொள்வனவுக்கு ரூ. 8,890/= விலைக்கழிவு

LEN - NB -i5
Intel Core i5 ($4^{th}$ Gen)
15.6"HD Display,
4 GB, 500 GB
DVD RW, Webcam, Wifi, B.T
3 வருட உத்தரவாதம் இலவசம்
~~ரூ. 99,799/=~~
ரூ. 89,819/=

SINX - 243AT
Intel celeron Dual Core
14" Display, 2 GB, 320 GB
DVD RW, Wifi, Webcam,
3 வருட உத்தரவாதம் இலவசம்
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
காசுக் கொள்வனவுக்கு ரூ. 4,000/= விலைக்கழிவு
ரூ. 49,999/=

HP- i3-14NB
Intel Core i3 ($4^{th}$ Gen)
14"HD LED Display, 2 GB,
500 GB HDD, DVD RW,
Wifi, Webcam,
ரூ. 64,999/=

HP- i3-15NB
Intel Core i3 ($4^{th}$ Gen)
14"HD LED Display, 2 GB,
500 GB HDD, DVD RW,
Wifi, Webcam, ரூ. 93,399/=
12 மாதங்களுக்கு வட்டியின்றி....
காசுக் கொள்வனவுக்கு ரூ. 13,400/= விலைக்கழிவு

கடனட்டைகளுக்கு 24 மாத வட்டியின்றிய கொடுப்பனவு வசதி (நிபந்தனைக்குட்டபட்டது)

| ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | சுன்னாகம். | மானிப்பாய். | சங்கானை | சாவகச்சேரி | கொடிகாமம் | நெல்லியடி. | பருத்தித்துறை | கிளிநொச்சி | முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 021 222 5408 | 021 224 0555 | 021 225 5343 | 021 225 1100 | 021 227 0197 | 0776433888 | 021 226 4937 | 021 226 3411 | 021 228 0199 | 021 229 0180 |

www.singersl.com

(C-7577)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org